JL
Y15m2, N2
1:128.5.12
190384

ஸ்ரீராமஜயம்.

# சிந்தாமணி

தமிழ் நாட்டுப் பெண்மணிகளின் முன்னேற்றத்தை முக்கிய
மாகக்கொண்டு வெளிவரும் ஓர் உயர்தர மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

பத்திராதிபர். சகோதரி வி. பாலம்மாள்.

மலர் IV.] விபவ—ஆடி. [இதழ் 12.

## பெண்மக்களின் அந்தஸ்து.

(பத்திராதிபர்.)

முன் தொடர்ச்சி.

இந்தியப் பெண்கள் கணவன்கீழ் மனைவியாக வாழ்வது அடிமைத்தனமன்று. தங்களிடம் அமைந்துள்ள அந்தஸ்தை ஆடவர்களின் வாழ்க்கையில் ஈடுபடச்செய்து, அதனால் தங்கள் நாட்டிற்கும், முன்னோர்களுக்கும் எதிர்கால சந்ததியார்களுக்கும் பேருபகாரம் புரிகின்ற புண்ணியவதிகள் இந்தியப் பெண்களே.

ல்வியும், பழக்க வழக்கங்களும் அயல் நாட்டினுடையதாக இந்தியாவில் ஏற்பட்ட அளவில் ஆடவர்கள் இத்தகைய ஒப்பற்ற ஒத்துழைப்பைப் பெண் சமூகத்திடமிருந்து பெறமாட்டாது போனதுடன் அறிவை வளர்க்கும் கல்வியை அறவே விட்டொழித்ததினால் பெண்மக்களையும் கல்வியறிவற்றவர்களாகச் செய்துவிட்டார்கள். புண்ணிய பூமியாகிய இப்பாரத நாட்டில் சில நூற்றாண்டுகளுக்குமுன் பெண்கள் மகிமையுள்ளவர்களாயும் பரோபகா சிந்தையுள்ளவர்களாயும் தன்னலம் மறுத்த வர்களாயும் ஆன்ம விசாரமுள்ளவர்களாயு ஞானிகளாயும் சன்னியாசினிகளாயும், பண்டி தைமார்களாகவும் வேந்தர்களின் சபையிலும் ஜனசமூக மத்தியிலும் உயர்மதிப்புக்கொண்டு வாழ்ந்து வந்தார்கள் என்பதை அயல் நாட்டுச் சரித்திரங்களிலும் கதைகளிலும் பயிற்சி பெறு வதால் தெரிந்துகொள்ள முடியாது. உலக க்ஷேமத்திற்கும் செங்கோலுக்கும் மக்களாபி விருத்திக்கும் பெண்மக்களின் கற்பு மூலகா ணம் என்ற தத்துவத்தை இந்தியச் சரித்திரங் களில் மட்டுமே காணக் கிடைக்கும். அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்ற நற்குணத்துடன் பெண்கள் இளமைப்பருவமுதல் பழக்கப்படு வதை இந்தியக் குடும்பங்களில்தான் காணலாம்.

ஆரம்பமுதல் அமைதிவாழ்க்கையி லீடுபட்ட பெண்மணிகள் சாஸ்திரப் பயிற்சிகளிலும் அதிகாரம் பெற்று சுதந்திரத்துடன் குடும்பத் தலைவிகளாக நன்மதிப்புற்றிருந்தனர். ஜனங்கத்திற்கு அதிகாரியாயுள்ள பெண்மகளுக்குக் கல்வியிலும் அறிவிலும் சாஸ்திர ஆராய்ச்சியிலும் சமபாத்தியமில்லாதிருக்குமாயின் தாய்க்கில்லாத உரிமை இவள் வயிற்றில் பிறந்த மகனுக்கு எவ்வாறு ஏற்படக்கூடும்? இவளை இல்லக்கிழத்தியாகக் கொள்ளுங் கணவனுக்கு எப்படிக் கிடைக்கும்? இந்தியாவில் ஆங்கிலப் படிப்பும் அயல் நாகரிகமும் பரவியதின் பெரும்பயன் பெண்மணிகள் தலையில் சுமத்தப்பட்டிருப்பதை எவ்வாறு சகிப்பது? தங்களுக்கேற்ற கல்வியும் சுதந்திரமும் பெற்ற பூர்வீக வாழ்வுமற்று எந்தவழியிலும் ஏதேச்சாதிகாரமுற்ற நாகரிக முற்போக்குமற்று அறிவிலிகளாக, ஆற்றலற்றவர்களாகச் சுயத் தீர்மானமில்லாதவர்களாக, ஆடவர்கள் தங்கள் மனம்போல் ஆட்டுவிக்கும் பதுமைகளாக, குடும்ப நிர்வாகத்தில் மந்தமதிகளாக, மகிமையற்றவர்களாக, ஆடவர்களுக்குக் கால்கட்டாக, பெரும் சுமையாக வாழ நேரிடுமாயின், இவ்வாழ்க்கையில் பெண்களுக்குத் தக்க அந்தஸ்து கிடைப்பதெங்ஙனம்? இளம்பருவத்தில் தாயின் அன்பு மொழிகளால் வீரம், தீரம், தேசாபிமானம், முன்னோர்களின் உயர்வு இவைகளை போதிக்கப்பெறாத தாயின்கீழ் வளர்ப்பிற்கும் அறிவின் வளர்ச்சிக்கும் அணுவளவும் சம்பந்தமற்ற வழியில் மக்கள் வளர்வார்களாயின் பெண்மக்களிடம் தனிப்பட்ட அந்தஸ்து உண்டென்பதை நிரூபிக்க முடியுமோ?

மக்களை நல்வழியில் வளர்க்கவும் குடும்பத்தைச் சிக்கனமாக நடத்தவும் கஷ்ட நிஷ்டூரங்களைப் பொறுத்துக் காலங் கழிக்கவும் என்றைக்கும் எந்தப் பாதையிலும் தன்னையும் தன் கண்ணியத்தையும் காப்பாற்றிக்கொள்ளவும் கூடிய நற்படிப்பு பெண்மக்களுக் களிக்கப்பட்டால் பெண்மக்கள் அவர்களுக்குரிய அந்தஸ்தில் நன்மதிப்புடன் வாழ்வார்களென்பதில் சந்தேகமில்லை. ஈதன்றி அயல் நாட்டின் பழக்க வழக்கங்களையும் நாகரிகத்தையும் கல்விப் பயிற்சியையும் சுதந்திரத்தையும் பெண்களுக்களிப்பதே அவர்களுக்கு ஏற்ற அந்தஸ்தைப் பாரபட்சமின்றி அளிப்பதாகுமென்று நினைத்தால் இதனால் இந்தியப் பெண்களின் அந்தஸ்து சீர்குலைந்துவிடுமென்ற உண்மையை தீர்க்கதரிசனத்தால் கண்டறிந்து புராதன இந்தியப் பெண்களின் அந்தஸ்தைப் பெறுவதற்கு நம் பெண்கள் முயற்சிப்பார்களாக. தேசாபிமானிகள் இதற்குற்ற உதவி புரிவார்களாக!

சுபம்.

# நூர்ஜஹான் அல்லது பரதகண்டத்துச் சௌந்தரியக் கொடி.

(ஸ்ரீமதி பாகீரதி அம்மாள்)

(663-வது பக்கத் தொடர்ச்சி.)

## நாற்பத்தைந்தாவது அத்தியாயம்.

மோஹபத்கானிடம் பாதுஷா மிக்க அன்புடனிருந்ததுபற்றி, இதைக் கண்டு மனஞ்சகியாத நூர்ஜஹான், மோஹபத்கானை எல்லோருந் துவேஷிக்கும்வண்ணம் ஒவ்வொரு காரியத்தையுஞ் செய்துவந்தனள். பாதுஷாவின் மனதையுங் கொஞ்சங் கொஞ்சமாய் வேறுபடுத்த வழி தேடினாள். தர்பாரிலுள்ள சிலரைத் தன்வசப்படுத்தி அவர்களைக்கொண்டு மோஹபத்கானுக்கு விரோதமாகப் பாதுஷாவின் காதிலோதும்படி செய்தனள். அச்சமயம் மோஹபத்கான் மொகலாய இராஜ்யத்திற்கு ஆதார ஸ்தம்பமா யிருந்துவந்தான். அவனது மகத்துவத்தைப் பாதுஷாவும் நன்கறிந்திருந்தனன். மோஹபத்கானைக் குறித்து எங்கு விசாரித்தபோதிலும் அவனுக்கு விரோதமாக ஒன்றும் அகப்படவில்லை. இச்சங்கதிகளையறிந்த மோஹபத்கான் புத்திக் கூர்மையுள்ளவனா யிருந்ததுபற்றி அதிக ஜாக்கிரதையுடன் தன் காரியங்களைச் செய்துவந்தனன். மோஹபத்கானிடம் பாதுஷாவிற்குத் துவேஷமதிகரித்து வருவதைக் கண்ட ஜனங்கள், அவனைக் குறித்துப் புதிய கட்டுக்கதைகளை அவிழ்த்துவிட்டனர். சிலர் இளவரசனைக் கொல்ல அவன் வழி தேடிவருகிறானெனவும், மற்றும் பலர் பாதுஷாவையும் பேகத்தையுங் கொல்ல அவன் சதியாலோசனை செய்கின்றானெனவும் பகர்ந்தனர். ஆகவே பாதுஷா மோஹபத்கானை விரோதியெனவே நிச்சயித்தனன்.

மோஹபத்கானைக் குறித்துப் பாதுஷாவின் மனதை வேறுபடுத்தக் கான்கான் என்னும் நாமதேயங்கொண்ட ஓர் ஆப்கானிஸ்தானத்து சர்தார் நூர்ஜஹானுக்கு உதவியாயிருந்தான். அச்சமயம் மோஹபத்கான் லாகூரில் ரஜபுதன சிப்பாய்களுக்குச் சேனாபதியாகத் தங்கியிருந்தனன். பாதுஷா அவனை அவ்வுத்தியோகத்தினின்றும் விலக்கிக் கான்கான் என்போனைச் சேனாபதியாக நியமித்தனன். இதுவுமன்றி, அதிகாரத்தைக் கான்கானிட மொப்புவித்து அவனைத் தன் தர்பாருக்கு வந்து சேரவேண்டுமென ஆக்ஞாபித்தனன். உடனே மோஹபத்கான் கண்விழித்துக்கொண்டான். தன் சிநேகர்களிடம் பாதுஷாவின் ஆக்ஞையைத் தெரிவித்து அவர்களது அபிப்பிராயத்தைக் கேட்டனன். தர்பாரில் பல விரோதிகளிருப்பதால் அங்கே தனித்துப்போவது பிசகென்றும் ஐயாயிரம் சேனைகளுடன் லாகூரில் தங்கியிருப்பதே மேலென்றும் சிநேகர்கள் கூற அவ்வண்ணமே செய்தனன். ஆனால் தன் ஆக்ஞையை மறுத்ததால், பாதுஷா மோஹபத்கானிடம் மிக்க கோபங்கொண்டான். நூர்ஜஹானும் அவளைச் சேர்ந்தோர்களும், எரியும் நெருப்பில் எண்ணெயை வார்த்தவண்ணமிருந்தனர். மோஹபத்கானைத் தோற்கடிக்கும் பொருட்டு ஒரு சேனையை யனுப்பும்படி நூர்ஜஹான் பாதுஷாவை வற்புறுத்தினாள். பாதுஷா "உடனே புறப்பட்டு வரவேண்டும்! அப்படி செய்யாது அவமதிக்குங்கால் இராஜத்துரோகியெனக் கருதப்படுவாய்!" என்று திருமுகமூலமா யறிவித்தனன். ஆனால் மோஹபத்கான் அதைக் கொஞ்சமேனுஞ் சட்டைசெய்யாது "தேகத்தில் உயிரிருக்கும்வரை நான் உமது துஷ்ட மந்திரிகளது முகாவலோகனஞ் செய்யேன். நான் கடைசிவரை யுத்தஞ் செய்யத் தயாராயிருக்கிறேன். ஆனால் மரணம் வந்தாலும் சரணம் புகேன்" எனப் பதில் வரைந்தனுப்பப் பாதுஷா கோபாவேசங்கொண்டனன். நூர்ஜஹான் இதுவரை பகர்ந்து வந்ததெல்லாம் வாஸ்தவமேயெனக் கண்டனன். நூர்ஜஹானும் நிருபத்தை வாசித்துக் கோபங்கொண்டவள்போல் அபிநயித்து, "இவன் யார் இவ்வளவு அவமரியாதையுடனெழுதுபவன்? உண்ட வீட்டிற்கு இரண்டகம் நினைப்பவன் இவன். இன்னுமா உங்களுக்குச் சந்தேகம்? இதுவரை இவனுக்கு எவ்வளவு ஆக்ஞைகளிட்டும் அவமதித்தே வருகின்றான். யுத்தஞ் செய்யத் தயாராகயிருப்பதாகவன்றோ எழுதுகின்றனன்! என்ன தைரியம், பார்த்தீர்களா!" என்றனள்.

இவ்வண்ணம் மந்திரோபதேசஞ் செய்து கொண்டிருக்க, ஜஹாங்கீர் கைகளைக் கசக்கி

...ன், கால்களை உதைத்தான். மோஹபத்கானை ...ச் சேனைகளுடன் அன்றே புறப்பட்ட ... . தனது மாத்திரை பலிக்கவே நூர்ஜ...ன் மிக்க ஆனந்தமடைந்தாள். பாதுஷா ...னையுடன் தன்னை யெதிர்த்து வரக் கேட்ட ...ாஹபத்கான் ஐயாயிரம் ரஜபுதன வீரர்க...ன் லாகூரில் பாதுஷா தங்கியிருந்த இடத்...துக் கொஞ்சதூரத்தில் வந்து தங்கலானான்.

...சேனைகளுடன் மோஹபத்கான் வந்துள்...ன் என்ற செய்தியைக் கேட்டு நூர்ஜஹான் ...திபடைந்தனள். நல்ல புத்திக் கூர்மை...ள்ளவளானதால் பற்பல விசாரங்கள் அவ...து மனதிலுதித்தன. பாதுஷா பீதியடைந்து ...மாஹபத்கானைச் சரணமடைவாரெனப் பயங்...காண்டாள். பாதுஷாவை அடைந்து "சேனை...டன் இங்குவர மோஹபத்கானுக்கு அனுமதி ...கொடுக்கவேண்டாம். தனியாய் இங்கு வரும்...டி ஆக்ஞை செய்யவும்" என்றனள். மோஹ...த்கான் தான் வந்துள்ள செய்தியைப் பாது...ஷாவுக் கறிவிக்கவே, பாதுஷா, "நீ காசியில் ...கொள்ளையடித்ததற்குச் சரியான கணக்குக் ...கொடுத்தாலொழிய என்னெதிரில் வாராதே" எனச் செய்தி யனுப்பினான்.

பாதுஷாவினது அவமானத்தை யுண்டு செய்யும் ஆக்ஞையைக் கேட்டு மோஹபத்கான் வாஸ்தவமான காரணத்தை அறியவேண்டித் தன் மருமகனைப் பாதுஷாவிட மனுப்பினான். இவன் பாதுஷாவின் இருப்பிடத்தை யடைந்தவுடன் பாதுஷாவைச் சேர்ந்தவர்கள் இவன்மேலிருந்த வஸ்திரங்களைக் கிழித்து, இவனைக் குதிரையின்மேல் வால்புறமாகப் பார்த்து உட்கார வைத்து, சேனைகள் தங்கியிருந்த கூடாரங்களைச் சுற்றி ஊர்வலம் வந்து, வெளியில் துரத்தினார்கள். மோஹபத்கானது [illegible]ன் இந்த அவமானத்தைச் சகித்துக் [illegible] திரும்பி வந்து, தன் மாமனிடம் நடந்த சங்கதிகளைச் சவிஸ்தாரமாகச் சாற்றினான். மோஹபத்கான் அடங்காக் கோபங் கொண்டான். பாதுஷாவிடங் கொண்டிருந்த அபிமானத்தை மறந்தான். பாதுஷாவைக் கைது செய்ய நிச்சயித்தான். மோஹபத்கான் மிக்க புத்தி சாதுரியமுள்ளவனாக இருந்ததால், பாதுஷாவின் சேனையினது போக்குவரவைப் பற்றி நன்கறிந்து, அதை எதிர்க்கச் சமயம் பார்த்திருந்தான்.

சில நாட்களுக்குப் பிறகு, காபூலை நோக்கிச் சென்றுகொண்டிருந்த பாதுஷாவின் சேனைகள் ஜீலம் நதிக்கருகில் தங்கலாயின. பின்னால் பாதுஷாவும் புறப்படத் தயாராயிருந்தனன். பாதுஷாவின் சேனைகள் ஜீலம் நதியைக் கடந்து காபூல் நகரை நோக்கிச் சென்றவுடன், மோஹபத்கான் தன் சேனைகளைத் திரட்டிச் சென்று, ஜீலம் நதியின் மரப்பாலத்தை அக்கினி நாராயணனுக்குப் பலி கொடுத்தான். இவ்வண்ணம் பாதுஷா அப்புறம் போவதற்கும் பாதுஷாவின் சேனைகள் இப்புறம் வருவதற்கும் வழியில்லாது செய்தபின் பாதுஷாவின் கூடாரத்தை நோக்கிச் சென்றனன். எப்பொழுதும்போல் பாதுஷா அன்றும் குசாலாய்க் காலங் கழித்திருந்தான். பாதுஷாவின் கூடாரங்களைச்சுற்றி மோஹபத்கானது சேனைகள் சூழ்ந்தன. ஆங்கிருந்த காவற்காரர்கள் பெருத்த சேனையைக் கண்டு இருந்த இடந் தெரியாமல் மறைந்தனர்.

மோஹபத்கான் ஆங்கிருந்த பாராக்காரர்களை நிராயுதபாணிகளாக்கிப் பாதுஷாவின் இடத்தை அடைந்தான். இச்சங்கதி பாதுஷாவின் காதுகளுக்கெட்டியது. மோஹபத்கான் தனியாக வந்திருப்பானென எண்ணி, மிக்க கோபமூண்டவனாய் வெளியே போந்து "எங்கே மோஹபத்கான் ?" என உரக்க வினவினான். வெளியே மோஹபத்கானது சேனைகளிருப்பதை ஜஹாங்கீர் அறிந்தவனல்ல.



கூடாரத்தை விடுத்து வெளியே வந்தபின்னரே சங்கதிகள் தெரியவந்தன. மோஹபத்கானது ஆட்களே அங்கிருந்தனர். தனது பாராக்காரர்கள் ஒருவராவது அங்கு தென்படவில்லை. பாதுஷா மிக்க பீதியடைந்து மோஹபத்கானை உற்று நோக்கினான். வேறு வழியின்றி மோஹபத்கான் பகருர்வண்ணஞ் செய்யத் தயாராயினன். தனக்கு மிக்க உபகாரஞ் செய்தவனுக்குத் தான் அபகாரஞ் செய்ததால் மிக்க விசனமடைந்தான். மோஹபத்கான் தரையை நோக்கியவண்ணம் மௌனமுடன் நின்றிருந்தனன். கொஞ்சநேரஞ் சென்றபின் பாதுஷா பீதியுடன் மோஹபத்கானை நோக்கி "மோஹபத்! இவைகளைச் செய்வதின் பலன்தான் என்ன ?" என்றனன். மோஹபத்கான் கரங்கள் கூப்பிப் பாதுஷாவின்முன் நின்று "அரசே! என் சத்துருக்களால் நானிவ்வண்ணஞ் செய்யவேண்டி வந்தது. என் குடும்பத்தையும் பாதுஷாவையுங் காப்பாற்றும் உத்தேசத்துடன் பாதுஷாவின் சரணாரவிந்தத்தை நாடிவந்துள்ளேன்."

பாதுஷா :—நீ பீதிபடையக் காரணமில்லாதிருக்கும்பொழுது இப்பெருஞ் சேனையைத் திரட்டிவரக் காரணம் யாது ?

மோஹபத்கான் :—அரசே! நான் தமது குடும்பத்தையும் எனது குடும்பத்தையும் சம்ரட்சணை செய்யும்பொருட்டு இச்சேனைகளுடன் வந்தேன்.

பாதுஷா :—உனது வார்த்தையின் தாத்பரியத்தை அறிந்தேன். நீ பகரவேண்டியதைக் குசாலாய்ப் பகரலாம். ஆனால் நீ என்னை அவமதித்ததற்காக நான் உன்னை மறக்க மாளாது. நீ என்னை அவமதித்ததாலன்றோ நானுன்னைச் சிரச்சேதஞ் செய்ய ஆக்ஞாபித்திருக்கின்றேன். நீ உண்மையுடன் எனக்குச் சேவைபுரிந்து வந்தாயென்பதை நான் அறியாதவனல்ல. நீ செய்துள்ள உபகாரத்தை மறக்க மாளுமா ?

'சிரச்சேதம்' என்ற வார்த்தை காதில் விழவே பாதுஷா இன்னுந் தன்னிடங்கோபங் கொண்டுள்ளானெனக் கண்டு, பாதுஷாவைக் குதிரையேலேறும்படி வேண்டவே பாதுஷாவும் வேறு யாதொன்றும் மறுதளித்துப் பேசாது ஏறிக்கொண்டனன். பிறகு மோஹபத்கான் பாதுஷாவைத் தனது கூடாரத்திற் கழைத்துச் சென்றனன். பாதுஷாவின் யோக்கியதைக்குத் தகுந்தபடி அங்கே எல்லா ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருந்தன. பாதுஷாவை இவ்விதம் கைது செய்தபின்னர், நூர்ஜஹானை எவ்விதங் கைதுசெய்வதென்ற யோசனையிலாழ்ந்தனன் மோஹபத்கான்.

## நாற்பத்தாறுவது அத்தியாயம்.

சமயம் வாய்த்தாலல்லாது பராக்கிரமம் வெளிப்படுவதில்லை. புருஷர்களும் ஸ்திரீகளும் பராக்கிரமமே இல்லாது தோன்றினாலும், சமயம் வாய்த்த காலத்தில், ஜீவனற்ற தூணினின்றுந் திடீரென வெளிவந்த நரசிம்மாவதாரத்தைப் போன்று தம்மிடமுள்ள பராக்கிரமத்தை வெளிக்காட்டி, ஜகத்திலுள்ளோரை ஸ்தம்பிக்கச் செய்கின்றனர். நூர்ஜஹானிடமிருந்த பல குணநிசயங்களை முதலில் யாரும் அறியாதிருந்தனர். மோஹபத்கான் பல யுக்திகள் செய்து பாதுஷாவைக் கைது செய்யவே, நூர்ஜஹான் தன் சகோதரன் ஆசப்கான், மற்றும் பலருடன் தப்பி ஓடினாள். ஜீலம் நதியைக் கடந்து, காபூலை நோக்கிச் சென்றுகொண்டிருந்த சேனைகளைத் திருப்பிக் கொணரும்பொருட்டுத் தூதர்களை அனுப்பினாள். மற்றும் பளபளவெனப் பிரகாசிக்கும் வாளைக் கரத்திலேந்தி, ஆவேசத்துடன் ஆங்கிருந்த சர்தார்களை நோக்கி "சர்தார்கள்! நீங்கள் புருஷர்களாயிருந்தும் ஸ்திரீகளைப்போல் பீதிகொண்டு இவ்வண்ணம் ஓடிவந்தீர்கள். உமது அன்னதாதா பாதுஷாவை ஒரு இராஜத்துரோகி கைதியாகக்கொண்டு சென்றபின்ன

ரும், நீங்கள் உண்ட அன்னத்தை மறந்து, உமது உயிரே பெரியதெனக் கருதி ஓடிவந்தீர்கள். இதைக் காட்டிலும், இந்த ஜீலம் நதியில் வீழ்ந்து பிரயோஜனமில்லாத் தேகங்களை ஏன் அர்ப்பணஞ் செய்யக்கூடாது? மலைகளுக்குள் ஓடி மறைந்திருந்தாலும் மரணம் வாராதிருக்குமோ? ரணகளத்திற் சரணம் புகாது மரணத்தைக் கோருவதே ஒரு சுத்த வீரனுக்கு ஆபரணமாகும். ஈச்வரனும் அத்தகைய வீரர்களைத் தன்னிடத்திற்குப் பிரியமுடன் அழைத்துக்கொள்ளுகிறான். ஆகையால் நான் பகருவதைக் குறித்து யோசியுங்கள். அந்த நீசன் மோஹபத்கானைச் சரியானபடி தண்டிக்கத் தயாராயிருங்கள். தாமதிப்பீரேல் அவன் இன்னும் சேனைகளைச் சேகரித்து பலமடைவானாகையால், துரிதமுடன் சென்று பாதுஷாவை அப்பாதகன் கரத்தினின்றும் விடுவிக்க வழிதேடுங்கள்" என்றனள்.

இவ்வார்த்தைகளைக் கேட்டு எல்லோரும் வெட்கத்தால் கீழே தலைகுனிந்தார்கள். சிலர் தாடிகளை உருவிக்கொண்டு "சரி வாருங்கள், மோஹபத்கானையும் அவனது சேனைகளையும் ஜயித்துப் பாதுஷாவை விடுவிக்கலாம்" என்றனர். மற்றும் பலர், அறுப்போம், அல்லது உயிர் துறப்போம் என்ற நிச்சயத்துடன் மோஹபத்கானை எதிர்க்கத் தயாரானார்கள். காபூலை நோக்கிச் சென்றுகொண்டிருந்த பாதுஷாவின் சேனைகளும் திரும்பி வந்து சேர்ந்தன. "கூடிய சீக்கிரத்தில் மோஹபத்கானுடன் யுத்தஞ் செய்து உம்மை விடுவிக்கின்றோம்" என்று நூர்ஜஹான் ஒரு நிருபமெழுதி அதைப் பாதுஷாவிடங் கொடுத்துவரும்படி ஒரு தூதனை அனுப்பினாள். இச்சங்கதியை அறிந்த மாத்திரத்தில் பாதுஷா பீதிகொண்டான். அத்தூதனிடம் அந்நிருபத்திற்குப் பின்வருமாறு பதிலெழுதி அனுப்பினான்: "என்னைச் சிறையினின்றும் விடுவிக்கும்பொருட்டு நீங்கள் பிரயாசைப்படுவதில் பயனில்லை. மௌனமுடன் ஒளிந்திருப்பதே மேலாகும். பிராணனோடிருந்தால் இன்றில்லாவிடில் நாளை ஒருவரையொருவர் சந்திக்க வழியுண்டு. மோஹபத்கானைத் தற்சமயம் எதிர்ப்பது மூடத்தனமே."

பாதுஷாவின் நிருபத்தைப் பார்த்து ஆசப்கான் கோபங்கொண்டு தன் சகோதரியை நோக்கி "சிறையிலடைபட்டிருக்கும் பாதுஷாவின் ஆக்ஞையை நாம் கவனிப்பானேன்? நாம் கொண்டுள்ள காரியத்தை ஏன் விடுக்க வேண்டும்? இதைக் கொஞ்சமேனுங் கவனியாது, மோஹபத்கானை எதிர்த்துச் செல்லுவதே மேலாம்" என்றனன். நூர்ஜஹானும் அதற்கிணங்கினாள்.

இஃதிப்படியிருக்க, மோஹபத்கான் நூர்ஜஹானைச் சிறைப்படுத்தவேண்டித் தன் பரிவாரங்களுடன் கிளம்பினான். ஆனால் சுஜாத்கான் என்ற ஒரு சர்தார் பாதுஷாவை விடுவிக்கும்பொருட்டுப் பெருத்த சேனையுடன் தன்னை எதிர்த்து வருவதாகச் சங்கதி அறிந்து, அவனைச் சந்தித்து, அவனையுந் தன்பக்கஞ் சேர்த்துக்கொள்ளவேண்டுமென இச்சை கொண்டான். ஆனால் சுஜாத்கான் இதற்கிணங்காது பாதுஷாவைச் சிறைப்படுத்திய மோஹபத்கானை தூஷித்து அவமானஞ் செய்தனன். மோஹபத்கானைச் சேர்ந்தவர்கள் இவ்வவமானத்தைச் சகியாது சுஜாத்கானது சேனையை எதிர்த்துச் சின்னாபின்னமாக்கினர். சுஜாத்கானும் அச்சண்டையில் வீழ்ந்து மாண்டான். பிறகு ஜயங்கொண்ட மோஹபத்கான் நூர்ஜஹானைக் கைது செய்யப் புறப்பட்டான்.

ஜீலம் நதிக்கரையில் மோஹபத்கானது சேனைகள் தங்கலாயின. அந்நதியின் எதிர்க்கரையில் ஆசப்கான் தன் சேனையுடன் காத்திருந்தனன். சத்துருவைக் காணவே ஆசப்கான் மிக்க கோபமுண்டவனாய், நதியைக் கடந்து செல்லத் தன் சேனைகளுக்கு ஆக்ஞை இட்டனன். அச்சமயம் ஜீலம் நதி பூரணப் பிரவாகத்திலிருந்தது. அப்பிரவாகத்தில் ஆசப்கானது சேனைப் பிரவாகமும் நுழைந்தது. ஆவேசமிக்க வீரர்கள் பிரவாகத்தைக் கொஞ்சமேனுங் கவனியாது எதிர்க்கரையை அடைய ஆயத்தமாயினர். ஆனால் மோஹபத்கானது சேனைகள் சத்துருக்கள் கரைக்கு வரவரக் கொன்றனர். களங்கமற்றிருந்த ஜீலம் நதி இரத்தத்தால் சிவந்தது. மோஹபத்கானே ஜெயமடைந்தனனாயினும், ஆசப்கான் மீதியிருந்த தன் சிப்பாய்களை உற்சாகப்படுத்தி வந்தனன்.

அச்சமயம் நூர்ஜஹான் நதியின் ஓர்புறத்தில் யானையின்மேலிருந்தவண்ணம் யுத்தத்தைப் பார்த்திருந்தனள். தன் சேனை குறைந்து கொண்டு வரவே, மீதியிருந்த வீரர்களுக்கு உதவி செய்யும்பொருட்டு இவளும் நதிக்குள் இறங்கினாள். இவளுடனிருந்த சர்தார்கள் யாவரும் பீதியுடன் இவளைப் பின்பற்றிச் சென்றனர். அச்சமயம் இவளுக்கிருந்த ஆவேசத்தை வர்ணிக்க இயலாது. நதியின் மத்தியிலிருந்தவண்ணம் தன் சேனையை உற்சாகப்படுத்தி வந்தாள். ஆசப்கான் மீதியிருந்த வீரர்களுடன் சத்துருக்களை எதிர்த்து வந்தான். இஃதிப்படியிருக்க, சத்துருக்கள் நூர்ஜஹானைச் சூழ்ந்து, அவளேறியிருந்த யானையைச் சுட்டுக் கொன்றனர். ஆனால் அருகிலிருந்த சர்தார்களது உதவியால் கரையைச் சீக்கிரம் அடைந்தனள். அங்கும் மோஹபத்கானது ஆட்கள் அவளைப் பின்பற்றினார்கள். ஒரு ரஜபுதனவீரன் அவளுக்குமுன் தைரியமாகச் சென்று அவளை வணங்கி "அரசியே! தம்மைச் சிறைப்படுத்துவதைவிட, தாமிதுவரை காட்டி வந்த தைரியத்திற்குத் தகுந்தவண்ணம், தம்மைக் கௌரவப்படுத்துவதே மேலாகும். தமது அபூர்வ பராக்கிரமத்தைக் கேட்டுப் பாதுஷா தம்மை இராஜத்துரோகியெனக் கருதமாட்டார். நான் மன்றாடிக் கேட்டுக்கொள்ளுவது யாதெனில், தாம் என்னுடன் பாதுஷா இருக்குமிடத்திற்கு வரவேண்டும். இல்லாவிடில் பலவந்தமாய்க் கைதுசெய்து கொண்டுபோகவேண்டி வரும்" என்றான். இவனது வார்த்தைகளைக் கேட்டுவந்த நூர்ஜஹான், "உன்னிஷ்டப்படியே செய்கிறேன். சூரனே உன் வார்த்தைகளைக் கேட்டு மகிழ்ச்சியடைந்தேன். இதற்காக உனக்கு வேண்டிய வெகுமதி யாதெனச் சொல்" என வினவவே, அந்த ரஜபுதனவீரன் கம்பீர முகத்துடன், "வெகுமதியா! ரஜபுதன புத்திரன் சத்துருக்களிடமிருந்து எச்சமயமாவது வெகுமதி பெற்றதுண்டா? அரசியே! நான் வெகுமதியைக் கருதுபவனல்ல, வாத் தடையில்லையே?" என்றனன்.

வேறொரு வழியுமில்லாததால், நூர்ஜஹான் பாதுஷா இருக்குமிடத்திற்கு அவ்வீரனுடன் சென்றனள். ஆசப்கானும் யுத்தத்தை நிறுத்தி மோஹபத்கானைச் சரணமடைய வேண்டி வந்தது.

## நாற்பத்தேழாவது அத்தியாயம்.

நூர்ஜஹானது வலைக்குட் சிக்கி அவளது இஷ்டப்படி பாதுஷா ஆடிவந்ததால் அவளைத் தொலைத்து விடுங்கால் இராஜாங்கம் யாதொரு தடங்கலுமின்றி நடைபெறும் என மோஹபத்கானும் அவனைச் சேர்ந்தோரும் நினைத்தார்கள். ஆகவே மோஹபத்கான் முதலில் பாதுஷாவையும் பிறகு நூர்ஜஹானையுஞ் சிறைப்படுத்தினன். இவ்விருவரையும் பிரித்து வெவ்வேறு இடங்களில் வைத்தான். நூர்ஜஹானைப் பாதாளத்திற் கொண்டுபோய் வைத்தபோதிலும் அவள் உயிருடனிருக்கும்வரை தன் எண்

ணம் சித்தியடையவேண்டிய ஏற்பாடுகளைச் செய்து வருவாளாகையால் அவளைக் கொல்லுவதே உத்தமமென நினைத்தான். ஓர் ஸ்திரீயைக் கொல்வது நியாயமாவெனக் கொஞ்சமேனுங் கருதவில்லை. கடைசியாக திரவிய ஆசைக்குட்பட்ட சில ஆட்களைக்கொண்டு நூர்ஜஹானைக் கொல்ல நிச்சயித்தனன்.

டில்லீச்வரனது பட்டராணியாயிருந்தும், சிறைவாசஞ் செய்யவேண்டியிருப்பதைக் குறித்து மிக்க துக்கத்திலாழ்ந்தனள் நூர்ஜஹான். இச்சங்கடத்தினின்றும் எவ்விதம் தப்புவதென இரவும் பகலும் சிந்தித்து, தன் கூடாரத்தில் ஒரு கட்டிலின்மேற் படுத்திருந்தனள். மோஹபத்கானது மூர்த்தி அடிக்கடி அவளது நேத்திரங்களுக்குமுன் நிற்பதாகக் கண்டு, பீதிகொண்டு தனக்குள்ளாகவே முணுமுணுத்திருந்தாள். மத்திய இராத்திரியாகவே கொஞ்சங் கண்ணயர்ந்தனள். எங்கும் நிச்சப்தம் நிறைந்திருந்தது. நாய்கள் குலைத்ததாலும், நரிகள் ஊளையிட்டதாலும் அந்நிச்சப்தம் அடிக்கடி பங்கமடைந்து வந்தது. கூடாரத்தில் ஒரு மெழுகுவர்த்தி மந்தமாய் எரிந்துகொண்டிருந்தது. வெளியிலெங்கும் அந்தகாரம் நிறைந்திருந்தது. நூர்ஜஹான் கண்ணயர்ந்த மாத்திரத்திற் பயங்கரக் கனவுகளைக் கண்டாள். அவளது அழகுமிக்க முகம் மழுங்கியது. பயங்கரக் கனவு கண்டு உளறினள், அலறினள், கண்விழித்து எழுந்துட்கார்ந்தனள். பயங்கொண்ட பெண்மானைப்போன்று வெகுசீக்கிரத்தில் நாலாபக்கங்களிலும் நோக்கினள். அச்சமயம் ஓர் கருத்த தடியன் கரத்தில் வாளையேந்தித் தனது கட்டிலருகில் நிற்பதைக் கண்ணுற்றனள். ரோமஞ் சிலிர்த்தது, தேகம் வியர்த்தது. ஆயினும் தான் பீதியடைவதாக வெளிக் காட்டாது, தைரியமுடன் அக்கருந்தடியனை உற்று நோக்கி உரத்த குரலில், "நீ யார்? இந்நடுநிசியில் யாது காரணங்கொண்டு இங்கு வந்துள்ளாய்?" என வினவினள். நூர்ஜஹானது அபூர்வ முகதேஜஸைக் கண்டு அச்சண்டாளன் நடுநடுங்கினன். திரவிய ஆசையால் நூர்ஜஹானைக் கொல்ல எந்த ஆவேசங்கொண்டு வந்தனனோ, அந்த ஆவேசமெல்லாம் அவளது குரலைக் கேட்ட மாத்திரத்தில் இருந்த இடந் தெரியாது மறைந்தது. நூர்ஜஹானது மார்பிற் செலுத்தவேண்டி மேல் தூக்கிய வாளைப் பின்வாங்கினன். இருந்த இடத்தை விட்டுக் கொஞ்சமேனும் நகராது கற்சிலையைப் போல் பிரமைகொண்டு அவள்முன் நின்றனன். தன் குரலால் அவன் பீதிகொண்டுள்ளான் எனக் கண்ட நூர்ஜஹான் மிக்க உரக்க "நித்திரையிலிருக்கும் ஓர் அபலைமேல் உன்னையொத்த ஒரு புருஷன் அஸ்திரத்தைப் பிரயோகிக்கத் தயாராயிருப்பது தர்மமா? இதைவிட வேறு யாது நீசத் தொழில் வேண்டும்? உன்னை இங்கு அனுப்பினவனிடந் திரும்பிச் சென்று, கபடத்தாலல்லாது நியாயப்படி கொல்லுமாறு நான் வேண்டுவதாகப் பகர்வாய். பலரறியத் தண்டிப்பதன்றோ நியாயமாகும்? போ! இதை விடுத்து ஓடு" என்றனள். அவளது பயங்கர முகத்தாலும் ஆவேசம் மிக்க வார்த்தைகளாலும் பிரேதம்போலான அத்தடியன் அதை விடுத்து ஓடி மோஹபத்கானது கூடாரத்தை அடைந்து, அவனிடம் சங்கதிகளனைத்தும் சவிஸ்தாரமாகச் சாற்றினன். இவ்விருத்தாந்தத்தைக் கேட்டு வந்த மோஹபத்கான் வாஸ்தவத்தில் வெட்கமடைந்தான். ஆயினும் நூர்ஜஹானை எவ்விதந் தொலைப்பதென யோசிக்கலானன். இரண்டு மூன்று நாட்கள் இவ்விசாரத்தி லாழ்ந்திருந்து தனது மித்திரர்களது அபிப்பிராயத்தையும் அறிந்து, நூர்ஜஹானைக் கொல்லப் பாதுஷாவின் அனுமதியைப் பெற நிச்சயித்தான். பாதுஷா எப்பொழுது இச்சிறைவாசம் நீங்



மென்ற சிந்தனையிலேயே இருந்தனன். இந்துஸ்தான தேசத்தின் இராஜ்ய சூத்திரம் இவன் கரத்திலிருந்தது. ஈச்வரனைத் தவிர வேறெவனுக்கும் இவன் தலைகுனிய வேண்டியதில்லை. பெரிய பெரிய சர்தார்களும் வீரர்களும் இவன் கைக்கீழிருந்தனர். இப்படியிருக்கக் கேவலம் ஒரு சர்தாரிடம் இவன் பற்களைக் காட்ட வேண்டி வந்ததால், இவனது மனம் அடைந்த அவஸ்தைக்கோர் அளவில்லை. மோஹபத்கான் நூர்ஜஹானைக் கொல்லப் பாதுஷாவின் அனுமதியைப் பெறவேண்டி, இவனது கூடாரத்திற்குட் சென்றனன். பாதுஷா சிறையிலிருந்தானாயினும், மோஹபத்கான் மிக்க மரியாதையுடன் தலைகுனிந்து நமஸ்கரித்து, "அரசே! நானும்மைக் கெஞ்சிக் கேட்பதொன்றுண்டு. தமது இராஜ்யத்தில் இச்சில நாட்களாய் நடந்துவரும் சண்டை சச்சரவுகளுக்குக் காரணம் நூர்ஜஹானே! அவளைத் தொலைத்தாலொழிய இராஜ்யத்திற் சாந்தமேற்படாது. அவள் இராஜத் துரோகியாகையால், அவளுக்குத் தேகாந்த சிட்சை விதிக்கவேண்டும். இதோ இதற்குக் கையெழுத்திட்டு உமது முத்திரையுடன் இதை நூர்ஜஹானுக்கு அனுப்புங்கள்" என்றனன்.

மோஹபத்கானது வார்த்தைகளைக் கேட்டுப் பாதுஷா பிரமித்தனன். அவனது வாய் மூடுபட்டது. "நூர்ஜஹானை அடையவேண்டி என் தந்தையுடன் சண்டையிட்டேன். அவளது முதற் கணவனை ஆட்களைக்கொண்டு கொலை செய்தேன். பிறகு எவ்வளவோ நாட்கள் கஷ்டப்பட்டு அவளை மனைவியாக அடைந்தேன். இப்பொழுது அவளுக்குத் தேகாந்த சிட்சை விதிக்கும் நீச காரியத்தை நான் செய்யவோ?" இவ்விசாரமாகிய தேள் இவனது அந்தக்கரணத்தைக் கொட்டியது; பித்தம் பிடித்தவன்போலானன். மோஹபத்கானைச் சந்தோஷிப்பிக்க வேண்டுமானால், தான் எக்கரத்தால் அவளை அன்புடன் அணைத்து வந்தனனோ, அதே கரத்தால் அவளது உயிரைப் போக்கடிக்கும் பாதகத்தைச் செய்யவேண்டியிருந்தது. மோஹபத்கானது சொற்களை மறுக்கும் பட்சத்தில், தன் பிராணனும் நிலைப்பதரிதெனக் கண்டான். ஆகவே இருதலைக் கொள்ளி எறும்புபோலாயினன். பாதுஷா இவ்வித யோசனையி லாழ்ந்திருக்க, மோஹபத்கான் அவனை நோக்கி, "அரசே! தாம் மறுபடியும் பாதுஷா பதவியையடைய வேண்டுமானால், இந்த ஸ்திரீயின் பாசத்தினின்றும் விலகவேண்டும். தாம் தற்சமயம் அனுபவித்து வருங் கஷ்டங்களுக்கு இந்த நீச ஸ்திரீயே காரணமெனக் கண்டு, இவளது மோகபாசத்தினின்றும் விலகும்!" என்றனன். மோஹபத்கானது வார்த்தைகளைக் கேட்டு ஜஹாங்கீரது மனம் வேறுபட்டது. மோஹபத்கான் உடனே உத்தரவுக் காகிதத்தையும் எழுதுகோலையும் அவன்முன் நீட்டி, அவனது கையெழுத்தைப் பெற்றனன். அச்சமயம் ஜஹாங்கீரது கைகள் நடுக்கமுற்றன. கையெழுத்திட்டவுடன் மூர்ச்சையடைந்தான். ஆனால் மோஹபத்கான் அதைக் கவனியாது, உத்தரவுக் காகிதத்தைப் பெற்று, நூர்ஜஹானது கூடாரத்தை நோக்கி நடந்தனன்.

## நாற்பத்தெட்டாவது அத்தியாயம்.

இராஜத் துரோகத்திற்காக நூர்ஜஹானுக்குத் தேகாந்த சிட்சை விதித்து ஆக்ஞாபத்திரத்திற் பாதுஷா கையொப்பமிடவே, மோஹபத்கான் அடைந்த ஆனந்தத்திற்கு அளவில்லாதிருந்தது, மோஹபத்கான் அவ்வுத்திரவைப் பெற்று, நூர்ஜஹானது கூடாரத்தை நாடிச் செல்லும்பொழுது, தான் ஒரு பெரும் இராஜ காரியத்தைச் செய்து முடித்ததாக எண்ணினன். அச்சமயம் நூர்ஜஹான் கூடாரத்தில்

ஈச்வரனது அபூர்வ லீலையை நினைத்து உட்கார்ந்திருந்தனள். டில்லீச்வரனது பட்டராணியாயிருந்தும், காராக்கிரகத்தில் நாட்களைக் கழிக்கவேண்டி யிருப்பதை நினைத்து மனம் நொந்தாள். மலர்ந்த கமலத்தையொத்த அவளது முகம் மழுங்கியிருந்தது. கருத்த கேசலாபம் கட்டப்படாமல் தொங்கிக்கொண்டிருந்தது. அச்சமயம் அவளை நோக்கிய கல்லுங் கரையுமென்றால் நாம் எம்மாத்திரம்? மோஹபத்கான் வந்திருக்குஞ் சங்கதியை ஓர் வேலைக்காரன் மூலமாக அறிந்த மாத்திரத்தில், நூர்ஜஹான் கண்கள் சிவக்கக் கோபங்கொண்டு எழுந்து நின்றாள். ஆனால் கொஞ்சம் யோசனையிலாழ்ந்திருந்தபின், தன் தலைமேலிருந்த துணியை யிழுத்து முகத்தை மறைத்து, "போ! அவனை உள்ளே வரச்சொல்" என்றனள்.

நூர்ஜஹானது அனுமதியைப் பெற்று மோஹபத்கான் கூடாரத்திற்குள் நுழைந்து, நூர்ஜஹானுக்குச் சலாஞ் செய்து "ராணி அம்மையே! பாதுஷாவின் உத்தரவை வாசிக்கின்றேன், கொஞ்சம் காதுகொடுத்துக் கேட்கவேண்டும்" என்றனன். நூர்ஜஹான் யாதொன்றும் பேசாது, தன் முகத்தை மறைத்தவண்ணம் மோஹபத்கானை நிந்தித்து நின்றாள். மோஹபத்கானும் அவளது உத்தரவிற்குக் காத்திராது, பாதுஷாவினது ஆக்ஞா பத்திரத்தை வாசிக்கலுற்றான். 'தேகாந்த சிட்சை' என்னும் வார்த்தை காதில் விழுந்த மாத்திரத்தில், நூர்ஜஹான் மூர்ச்சையடைந்து கீழே விழ்வாளெனத் தோற்றியது. தன்னைப் பிராணனெனக் கருதியிருந்த பாதுஷா தனக்கு தேகாந்த சிட்சை விதித்துள்ளதை நினைத்து மிக்க துக்கத்தையடைந்தனள். கோபத்தின் வேகத்தால் மோஹபத்கான் சமீபமிருப்பதை மறந்து, மிக்க உரத்த குரலில், "ஓ! ஓ! இப்புருஷன் ஜன்மமேன்? நன்றிகெட்ட ஜன்மம்!" எனப் பகர்ந்துகொண்டே அருகிலிருந்த ஓர் ஆசனத்திலமர்ந்தனள். கொஞ்சநேரங் கழித்துப் பெருமூச்செறிந்து பின்வருமாறு முணுமுணுத்திருந்தனள்: "பாதுஷாவல்லாது கேவலமான வேறெவனாயினும் இச்சிட்சையை அளித்திருக்கும்பட்சத்தில் நான் களிகொண்டு பீரங்கி வாயின்முன் தயாராய் நிற்பேன். ஆனால் யாருக்கு என் பிராணனை அர்ப்பணஞ் செய்திருந்தேனோ, அவரே எனக்கு மரணதண்டனை விதித்துள்ளாரென்றால், எனது துரதிர்ஷ்டத்தை யாதெனப் பகர்வேன்! தேவா! நான் ஜனித்த நாள் முதற்கொண்டு, உனது அபூர்வ லீலைகளுக்கு என் முதுகைக் காட்டி வருகின்றேன். ஆயினும் என் மனதில் உன்னைக் குறித்துத் துவேஷமுண்டாகவில்லை. இன்றோ உனது லீலை எல்லையைக் கடந்துள்ளது. மரணத்திற்கு நான் கிஞ்சித்தேனும் பீதி கொள்ளுபவளல்ல. அமீராயிருந்தாலும், பக்கிரியாயிருந்தாலும் மரணம் யாரையும் விடப்போவதில்லை. ஆனால் என் நாதனது கரத்தால் எனக்கு முடிவு வந்துள்ளதைக்குறித்தே நான் தற்சமயம் அடங்காத் துயரமடைகின்றேன். துக்கமே! இவ்வுலகில் அன்புடன் உன்னை யார்தான் வரவேற்றுபசரிப்பார்? ஆயினும் நீ இச்சமயம் உன் வாஸ்தவமான ஸ்வரூபத்துடன் என்னைக் காண வந்துள்ளாயாகையால், மனப்பூர்வமாய் நானுன்னை வரவேற்று உபசரிக்கின்றேன். இவ்வுலகில் ஒருவருக்கொருவர் சொந்தமில்லை எனச் சாதுக்கள் சொல்லியிருப்பது வீண்போமோ? புருஷன் ஸ்திரீயினிடமும் ஸ்திரீ புருஷனிடமும் பிரேமை கொண்டிருப்பது கேவலம் அற்ப சுகத்தைக் கருதியே யென்பதிற் சந்தேகமில்லை." இவ்வண்ணம் முணுமுணுத்துக் கொஞ்சநேரம் யோசனையிலாழ்ந்திருந்தபின், நூர்ஜஹான் மோஹபத்கானை நோக்கி "மோஹபத்கான்! —



வின் ஆக்ஞையை அங்கீகரிக்கத் தயாராயிருக்கின்றேன். ஆனால் நான் விரும்புவதொன்றுண்டு. மரணத்திற்குமுன் ஒருமுறை மன்னனைத் தரிசிக்க என் மனம் இச்சை கொள்ளுகின்றது. ஆகையால் இதைமட்டும் கிருபைகூர்ந்து கொடுக்கவேண்டும்" என்றனள். நூர்ஜஹானது முகத்தைக்கண்ட மோஹபத்கான் மனமிரங்கி அவளிஷ்டத்தைப் பூர்த்தி செய்வதாகப் பகன்றனன்.

மோஹபத்கானுக்குப் பயந்து ஜஹாங்கீர் ஆக்ஞா பத்திரத்திற் கையொப்பமிட்டானாயினும், மோஹபத்கான் அதை விடுத்துச் சென்றபின் பைத்தியம் பிடித்தவனைப்போல் கையொப்பமிட்ட கரத்தைப் பூமியிற் குத்தினான். தன் பிராணேச்வரியைத் தானே கொன்றதாக நினைத்து மனம் நொந்தான். இதுவரை தான் செய்துள்ள பாபகர்மங்களைக் காட்டிலும் இதுவே அகோர பாதகமென எண்ணினான். "பிராணேச்வரி! நூர்ஜஹான்! நான் எக்கரத்தால் உன்னை அன்புகொண்டு அணைத்து வந்தேனோ, அதே கரத்தால் உன் சிரத்தைக் கொய்யும் அகோர பாபத்தைச் செய்தேன். நரகத்தில் தள்ளி வேடிக்கை பார்க்கவே கடவுள் எனக்கு இத்துர்ப்புத்தியைக் கொடுத்தாரென்பதில் சந்தேகமில்லை. பன்முறை கிரந்தங்களில் நான் நரக வர்ணனையை வாசித்துள்ளேன். அந்நரக வாசத்தை நான் அனுபவிக்காமலிருக்க இயலாது. ஈச்வரன் தயாளுவாயிருப்பதால் சாதாரண பாபங்களைச் செய்து வருவோரை க்ஷமித்து வருகின்றான். ஆனால் நான் செய்துள்ள பாபமோ க்ஷமிக்கத்தகுந்ததல்ல. நானிவ்வுலகில் ஜனிப்பானேன்? ஏதாயினுமொரு யுத்தத்தில் உயிர் துறந்திருந்தால் இப்பொழுது திரஸ்கரிக்கும் ஜனங்கள் என்னைப் புகழ்ந்து பேசி வருவார்கள். அடே! ஜஹாங்கீர்? இத்துஷ்ட கரத்தை யாராயினும் துண்டித்துச் செல்லுங்கள்" என்றனன். கூடாரத்திற்கு வெளியிலிருந்த சேவகன், பாதுஷா கடைசியாகச் சொன்ன வார்த்தைகளைக் கேட்டு உள் நுழைந்தான். பாதுஷா அவனைக் கண்டவுடன் "மோஹபத்கானைச் சீக்கிரமழைத்துவா!" என்றனன்.

மோஹபத்கானும் அதிசீக்கிரத்தில் வந்து சேரவே, பாதுஷா மிக்க ஆத்திரத்துடன் நூர்ஜஹானைக் குறித்து விசாரிக்கலானான். அச்சமயம் இரு சேவகர்கள், மற்றும் ஒரு தாசி மூவர்களுடன் நூர்ஜஹான் ஆங்கு வந்து சேர்ந்தனள். குருடன் வேண்டுவது ஒரு கண். ஆனால் கடவுள் இரண்டு கண்களையும் கொடுத்தால் அவன் எவ்வளவு ஆனந்தத்தை அனுபவிப்பானோ அவ்வண்ணமே பாதுஷாவும் ஆனந்தமுற்றான். நூர்ஜஹான் தன் முகத்தை மறைத்திருந்த வஸ்திரத்தை விலக்கி, ஒரு குற்றவாளியைப்போல் தலைகுனிந்து நமஸ்கரிக்கவே, பாதுஷா மிக்க துக்கத்திற்குள்ளாயினன். அவளது பரிதாபகர முகத்தைப் பார்க்கச் சகியாதவனாய், தன் முகத்தை இருகரங்களாலும் மூடிக்கொண்டான். பிறகு ஆக்ஞா பத்திரத்தில் கையொப்பமிட்ட கரத்தை அவள் பாராதிருக்கும்வண்ணம் பின்னால் மறைத்துக் கொண்டனன். கொஞ்சநேரம் ஒருவரையொருவர் பார்த்து நின்றிருந்தனர். இருவரது வாய்களும் மூடுபட்டிருந்தன. மோஹபத்கான் கல்லையுங் கரைக்கும் இக்காட்சியைக் கண்டு ஸ்தம்பித்தனன். கொஞ்சநேரங் கழித்தும் பாதுஷா, 'என் கண்மணீ!' எனப் பகர்ந்து அவளை ஆலிங்கனஞ் செய்ய முன்னாற் செல்லவே, நூர்ஜஹான் இரண்டடி பின்னால் நகர்ந்து, அருகில் வரவேண்டாமெனக் கரத்தால் சமிக்ஞை செய்து, மிக்க மரியாதையுடன் நின்று, "நடந்தது நடந்துவிட்டது. இனி அதைக் குறித்துப் பேசுவதிற் பலனில்லை.

நான் கேட்டுக்கொள்வது ஒன்றே. உமது கரத்தாலேயே நான் இத்தண்டனையையடைய வேண்டும்" என்றனள். இதைக் கேட்டுப் பாதுஷா ஜஹாங்கிர் மூர்ச்சித்து ஒரு விருட்சத்தைப்போல் திடீரெனத் தரையில வீழ்ந்தனன்.

நாற்பத்தொன்பதாவது அத்தியாயம்.

பாதுஷா மூர்ச்சித்துக் கீழேவிழுவே மோஹபத்கான மிக்க அவசரமுடன் அடுத்த கூடாரத்தினுள் நுழைந்து ஒரு செம்பில் தண்ணீர் கொணர்ந்து, பாதுஷாவின் முகத்தில் தெளித்தான். கொஞ்ச நேரத்தில் பாதுஷா மூர்ச்சை தெளிந்து, கணகளைத் திறந்து எழுந்துட்கார்ந்தான். ஆனால் புத்தி சாதுரியமுள்ள நூர்ஜஹான் மௌனமுடனிராது பாதுஷாவையுற்று நோக்கித் "தாமதமேன்? நான் தயாராயிருக்கிறேன்; உமது சிட்சையை நிறைவேற்றலாம்" என்றனள்.

இவ்வண்ணம் மனதைப் பிளக்கும் வார்த்தைகளைக் கேட்டுப் பாதுஷா இருகாதுகளையும் இறுகப் பொத்திக்கொண்டனன். விஷத்தை உண்ட ஒருவன் எக்கஷ்டத்தை அடைவானோ, அவ்வண்ணமேயாகி நூர்ஜஹானை நோக்கி, "போதும் போதும, எரியும் உடலில் எண்ணையை ஊற்றவேண்டாம். வேறு வழியின்றி நான் ஆக்ஞாபத்திரத்தில—" என்று சொல்லி முடிப்பதற்குள் நூர்ஜஹான், "தாம் புருஷரன்றோ? அக்பர் சக்கரவர்த்தியின் ஜேஷ்ட புத்திரராயும், இந்துஸ்தானத்திற்கே பாதுஷாவாயுமிருந்தும், வேறு வழியின்றிச் செய்ததாகப் பகருகின்றீர். டில்லி சிம்மாதனத்தில் உம்மை உட்காரவைத்தவரைத் தூஷியாது, உமமைத் தூஷிப்பதிற் பலனில்லை" என்றனள்.

இவளது கடைசி வார்த்தைகளைக் கேட்டு மோஹபத்கான் மிக்க மகிழ்வடைந்தான். நூர்ஜஹானை இவன் இந்நாள்வரை வேறுவிதமாக நினைத்திருந்தான். பாதுஷாவின் மனதைச் சோதிக்கும் பொருட்டு "அரசே! மத்தியிற் பேசுவதைக் குறித்து மன்னிக்கவும். அரசர்களே தேவர்களே அன்றோ? ஒரு முறை தாம் ஆக்ஞாபித்தபின் அதினின்றும் பிறழுவது தமமையொத்த பாதுஷாவிற்கு ஏற்குமோ? இனிமேல் உமதாக்ஞையில் யாருக்காவது நம்பிக்கை இருக்குமா? இராஜத்துரோகத்தை விட பயங்கரமான குற்றம் வேறொன்றுமில்லை. இராஜாவிற்குத் துரோகஞ் செய்பவன், பிரஜைகளுக்குந் துரோகஞ் செய்தவன் ஆவான். இராஜாவிற்கும் பிரஜைகளுக்கும் துரோகஞ் செய்வது பெருத்த பாதகமல்லவா? இக்குற்றத்திறகு வேறெலலாத் தேசங்களிலும் தேகாந்த சிட்சையே விதிக்கபபட்டிருக்கிறது" என்றான்.

"மோஹபத்கான்! நீ உரைப்பது வாஸ்தவமே! ஆயினும் எனது நூர்ஜஹானுக்குத் தேகாந்த சிட்சை கொடுப்பதைப்பற்றிப் பகராதே" எனப் பாதுஷா சொல்லி முடிப்பதற்குள் நூர்ஜஹான்மத்தியில், "ஏன்? நூர்ஜஹான் யார்? நியாயமென்னும் வீட்டினுள் பட்சபாதம் நுழைய வழியுண்டா? கீரியும் பாம்பும் எவ்வண்ணம வைரிகளோ, அவ்வண்ணமே நியாயமும் பட்சபாதமும் எனப் பாதுஷாவிற்குப் புதிதாகச் சொல்லவேண்டியதில்லை. குற்றவாளியெனப் பாதுஷாவால் நிச்சயிக்கப்பட்டபின, சிட்சை செய்தே தீரவேண்டும். நான் என்ன! பாதுஷாவின அந்தப்புரத்தில் வைக்கப்பட்டுள்ள எண்ணிறந்த ஸ்திரீகளுள் கேவலம் ஒருவள். இதுவுமன்றி இராஜத்துரோகமெனும் பெருங் குற்றத்திற் குள்ளாயிருக்கின்றேன். ஆகையால் என்னிடம் இரக்கங் கொள்ளுவது ஆகாத காரியம். எழுந்திருந்து சீக்கிரம் இந்த இராஜத்துரோகியின் சிரத்தைக்கொய்து, உமது நியாயத்தை இவ்வுலகில் நிலைநிறுத்தும்! "பேஷ்! பேஷ்! ஆஹா! நியாயத்தை நிலை



நிறுத்தவேண்டிப் பாதுஷா தன் பட்டராணிக்குந் தேகாந்த சிட்சை விதிக்கப் பின்வாங்கவில்லை" என உலகத்திலுள்ளோர் புகழ்ந்து உம்மை வாழ்த்துவார்கள். இப்படிப்பட்ட சமயம் மறுபடியும் வாய்ப்பது கஷ்டமே" என்றனள். நூர்ஜஹானது வார்த்தைகளைக் கேட்டுப் பாதுஷா யாது செய்வதென்றறியாமலிருந்தனன். உடனே தன்னாசனத்தை விட்டெழுந்து நூர்ஜஹானைக் கட்டித் தழுவி, "என் கண்ணே, நூர்ஜஹான்! நான் செய்துள்ள அபராதத்திற்காக க்ஷமிப்பாய். மோஹபத்கான்! இவள் ஒருவள் மட்டும் இராஜத் துரோகியல்ல! நானும் குற்றவாளியே! ஆகவே எங்களிருவரது தலைகளையுங் கொய்வதே மேல்" எனப் பகர்ந்துகொண்டே நூர்ஜஹானது கரத்தைப் பிடித்துக்கொண்டு மேலே நோக்கி நின்றனன்.

இவ்வண்ணம் சம்வாதம் நடந்து கொண்டிருக்குஞ் சமயம், மோஹபத்கானது மனதிற் பற்பல எண்ணங்களுதித்தன. நூர்ஜஹானது புத்திசாதுரிய மிக்க வார்த்தைகளைக் கேட்டு மகிழ்ந்தனன்; பாதுஷாவிடம் மனமிரங்கினன். ஆனால் கடைசியாகப் பாதுஷா தானுமிறக்கச் சித்தமாயிருப்பதாகத் தெரிவிக்கவே, மோஹபத்கான் மனஞ் சகியாது, "அரசே! இதென்ன இவ்வாறு பகருகின்றீர்?" எனவே, "ஆனால் நீர் சொல்லும் வண்ணஞ் செய்கின்றாயா? கொண்டுவா, என் ஆக்ஞாபத்திரத்தை, விட்டுவிடு என் பிராணேச்வரியை" என்றனன் பாதுஷா.

மோஹபத்கான் வேறு பதிலொன்றுமில்லாது ஆக்ஞாபத்திரத்தைப் பாதுஷாவிடங் கொடுத்துக் கூடாரத்தை விட்டு வெளியே வந்து, ஆங்கு காவலிருந்தவர்களை வாட்களைக் கீழே வைத்துச் செல்லும்படி ஆக்ஞாபித்தனன். பிறகு அவ்விருவரையுங் கூடாரத்தில் விடுத்துத் தன்மித்திரர்களிடஞ்சென்று சங்கதிகளனைத்தையும் சவிஸ்தாரமாகச் சாற்றினன். பாதுஷா நூர்ஜஹானுடன் ஆக்ரா அடைந்தனன். அந்தப்புரத்திலனைவரும் ஆனந்த மடைந்தனர். ரஜபுதனாராணிகள் புதிய வஸ்திரங்களுடுத்திக் கண்ணைப் பறிக்கும் எண்ணிறந்த ஆபரணங்களை அணிந்து, தேவாலயங்களுக்குச் சென்று துதித்துவந்தார்கள். மகமதியராணிகள் மசூதிக்குச் சென்று அல்லாவை வணங்கி வந்தார்கள். அரண்மனையிலெங்கும் குதூகலமே குடிகொண்டிருந்தது. நூர்ஜஹானால் பாதுஷாவும் விடுவிக்கப்பட்டார் என்ற சங்கதி அந்தப்புரத்திலுள்ள ஸ்திரீகளுக் கெட்டவே அவர்களெல்லோரும் நூர்ஜஹானது மஹாலில் கூடி அவளை வாழ்த்தினார்கள். நாலாபக்கங்களிலும் இச்சங்கதி பரவ, நூர்ஜஹானைக் குறித்தே ஜனங்கள் யாவரும் பேசி வந்தார்கள். நூர்ஜஹான் வழக்கப்படி பாதுஷாவிற்குப் பின் உட்கார்ந்து சகல இராஜகாரியங்களையும் மிக்க ஜாக்கிரதையுடன் பார்த்து வந்தனள்.

ஐம்பதாவது அத்தியாயம்.

ஓர் நிர்ஜன ஆரணியத்திற் ஜனித்த ஒரு பெண் டில்லி ராஜாங்கத்தைச் சரிவரப் பார்த்து வந்தாளெனில், ஸ்திரீகள் சமையலறைக்குள் இருக்கவே பிறந்தவர்கள், ஸ்திரீகளுக்குக்கல்வி ஏன் எனப் பகருவதெல்லாம் வீணன்றோ? நூற்றாண்டுகளுக்கு முன் சாதாரணக் குடும்பத்திற் பிறந்த ஒருவள் மகுடத்தைத் தரியாது தன் புத்திக் கூர்மையெனுங் கிரீடத்தைத் தரித்துச் சம்சார சக்கரத்தை யல்லாது ஓர் பெரும் இராஜாங்கச் சக்கரத்தையும் ஓட்டி வந்தனள். பாதுஷாவின் அந்தப்புரத்திலிருக்கும் எண்ணிறந்த ஸ்திரீகளுக்குள் சக்களத்திகளது சண்டைகளுண்டாவது சகஜமேயாயினும் தன் புத்திக் கூர்மையால் அவையொன்று மில்லாது தடுத்தனள். மோஹபத்கானை யொத்த பெருத்த வீரர்களும் கரங்கள் கூப்பி, "தாம்

ஸம்மாத்திரம்' என நிராசை கொண்டு, மௌனமுடன் வீற்றிருக்கவேண்டி வந்தது. நூர்ஜஹான் தன் பிரஜைகளுக்குச் சுகத்தைக் கொடுக்க வேண்டுமென்ற ஒரே கருத்தைக் கொண்டிருந்தனள். இராஜாங்க சூத்திரம் தன் கைக்கீழ் வரவே, ஜஹாங்கீர் முன்னால் ஜனங்களுக்குச் செய்து வந்த அக்கிரமங்களை அகற்றினாள். நியாயதேவதை நூர்ஜஹானைத் தன் சகோதரியெனக் கருதி எங்கும் உலாவி வந்தனள். ஜஹாங்கீர் இவளுக்கு முன் பொய்மை போலாடி வந்தானாயினும் தன் ஜாதியோர்களுக்கு மட்டுமே அநுகூலமாகயிருந்து வந்தனன். இந்தப்பக்ஷபாத புத்தியைக்கண்டு மனஞ் சகியாத நூர்ஜஹான், இந்துக்களும் மகமதியர்களும் ஒரே ஈச்வரனிடம் பக்தி கொண்டுள்ளார்கள், ஒரே கடவுளைப் பல தர்மத்தோர்கள் பல நாமதேயங்களால் அழைத்து வருகின்றனர், இந்துக்கள் ஈச்வரனைப் பூஜித்து வருவதுபோல் மகமதியர்கள் அல்லாவைத் துதிக்கின்றனர். தாம் இந்து மகமதியர்களது பாதுஷாவாக இருக்கின்றீர். உமது பிரஜைகளுக்கு ஈச்வரஸ்தானத்திலிருந்து வருகின்றீர். ஈச்வரன் எவ்வண்ணம் இந்து மகமதியரென்ற ஜாதிபேதமில்லாதிருக்கின்றனனோ அவ்வண்ணமே தமது தர்பாரிலும் இந்து மகமதியரென்ற ஜாதிபேதமில்லாதிருக்கவேண்டும்'' என்று அடிக்கடி சொல்லி வருவாள். சுருங்கச் சொல்லுங்கால், நூர்ஜஹான் பிரஜைகளைத் தன் புத்திரர்களாகப் பாவித்து வந்தனள். ஜஹாங்கீரது ஆட்சியில் தேசமெங்கும் அலங்கோலமாயிருந்தது. சிலர் தாமே பாதுஷாவெனக்கருதிக்குடிகளை வருத்தி வந்தார்கள். இத்தகைய நிந்தனைக் கிடமான காரியங்களெல்லாம் நூர்ஜஹானது காலத்தில் இல்லாதிருந்தன. நூர்ஜஹான் குடிகளுக்காகப் பற்பல இடங்களில் எண்ணிறந்த கிணறுகளை வெட்டினாள். சத்திரங்களைக் கட்டினாள். குடிகளைச் சந்தோஷப்படுத்தினாள். ஆனால் ஜஹாங்கீரோ எப்பொழுதும்போல் சிற்றின்பத்திலேயே ஈடுபட்டிருந்தனன். நூர்ஜஹானது சகவாசம், மதுபானம் இவற்றைத் தவிர அவன் வேறெதையும் வேண்டவில்லை. இராஜாங்க விஷயத்தில் அவன் கொஞ்சமேனும் மனதைச் செலுத்தியவனல்ல.

நூர்ஜஹான் தான் பட்டராணியானபின் பிரஜைகளுக்கு நன்மை செய்வதே நோக்கமாயிருந்தாள். ஜனங்களுக்கு நன்மை செய்வதே கடமையெனக் கண்டு, தனது வயதுகாலத்தில் தன் மனதை நல்ல வழியிற் செலுத்திவந்தாள். எந்த இடங்களில் அநியாயமும் அக்கிரமமும் செழித்திருந்தனவோ, அவ்விடங்களில் சிரித்த முகத்துடன் நியாய தேவதையும் சாந்த தேவதையும் ஒருமித்து வசித்து வந்தார்கள். பிரஜைகள் யாவரும் நூர்ஜஹானைத் தமது தாயெனக் கருதி வந்ததில் ஆச்சரியமென்ன! இவளது கீர்த்தி இந்துஸ்தான முழுவதும் பரவியது. பலவிடங்களில் இவளைக் குறித்துக் கவிகள் பாடினார்கள். சாமானிய ஜனங்கள் இரவும் பகலும் இவளை ஸ்துதி செய்துகொண்டிருந்தார்கள். நூர்ஜஹான் தன் முதிர்ந்த வயதில் எவ்வாறு பிரஜைகளைச் சந்தோஷிக்கச் செய்து வந்தனளோ, அவ்வாறே பாதுஷாவிற்கும் ஆனந்தத்தைக் கொடுத்து வந்தனள்.

டில்லிச்சகதிபதியான ஜஹாங்கீர் பாதுஷா 1527-ம் வருஷம் அக்டோபர் மாதம் 28-ம் தேதி இவ்வுலகை நீத்தனன். இவனிறந்த பின், ஓர் ரோஜாப் புஷ்பம் பறித்த கொஞ்சநேரத்திற்குள் வாடி வதங்குவதுபோல் நூர்ஜஹானது அழகும் குறைந்துகொண்டே வந்தது. ஒரு மரத்தை அடியோடு வெட்டி விடுங்கால், அதைச் சுற்றிப் படர்ந்திருக்கும் கொடி எவ்விதம் வாடுமோ, அவ்வித அவஸ்தைக் குள்ளாயினள். பாதுஷாவின் மரணத்திற்குப் பின் இவள் சில நாட்களே உயிருடனிருந்தனள். லாகூரினின்றும் மூன்றாவது மைலில் 'ஷஹாதாரா' என்னுமிடத்தில், இகலோகத்தின் சகல ஆசைகளையும் தியாகஞ்செய்து, தன் பர்த்தாவிற்குச் சமீபத்தில் மகா நித்திரையில் இன்று இருந்து வருகின்றனள்.

(சுபம்.)

# பெரிய எஞ்ஞமும் ஸாக்ஷாத்காரமும்.

(ஸ்ரீமதி பி. மங்களாபாயி.)

(முன் தொடர்ச்சி.)

(5) மேனாட்டு ஜனங்கள் வாயுதத்துவம் வரையில் கண்டு பிடித்திருக்கின்றனர். இத்தத்துவத்தை அவர்கள் தமது சுவாதீனமே செய்து கொண்டிருக்கின்றனர்; அதனாற்றான் சாதாரண ஜனங்களுக்கு ஆச்சரிய முண்டாகும்படியான யந்திரங்களைக் கண்டுபிடிப்பதற்கு அவர்கள் ஸமர்த்தர்களாயிருக்கின்றனர். அவர்கள் இன்னும் ஆகாச தத்துவத்தைக் கண்டு பிடிக்கவில்லை; காரணம், ஆகாசம் மிகவும் சூக்ஷ்மமாயிருக்கின்றது. சூக்ஷ்மமென்றால் மெல்லியது அல்லது நுட்பமானது. பிருதிவியைவிட அப்பு நுட்பமானது, அப்புவைவிட தேஜஸ் சூக்ஷ்மமானது. தண்ணீரில் தேஜஸின் கிரணம் பிரவேசிக்க முடியும். சாதாரணமாக ஓர் ஆள் ஆழமுள்ள தண்ணீரின் அடி காணப்படுவது தண்ணீரின் தெளிவைப் பொருந்தினதாயிருக்கிறது. தேஜஸை விட வாயு சூக்ஷ்மமானது. வாயுவைவிட ஆகாசம் சூக்ஷ்மமானது. இத்தகைய அந்த ஆகாச தத்துவமானது மிகவும் சூக்ஷ்மமாயிருக்கிறபடியால் அதற்கு (அதை) சூந்நியம் என்று சொல்லுகிறார்கள். அது தத்துவமே அல்லவென்றும் சிலர் சொல்லுகின்றனர்! (தற்காலம் 'ஈதர்' என்னும் சூக்ஷ்மமான பொருளைத் தான் ஆகாசம் என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்). ஆகாச தத்துவம் கண்டுபிடிக்கப்பட்டு அது சுவாதீனமாய் விட்டால் மனிதனுக்குச் சிருஷ்டியில் என்ன சமத்காரத்தை வேண்டுமானாலும் செய்து காட்டமுடியும். தற்காலத்திய யந்திரங்களின் சமத்காரங்களை விடவும் அற்புதமான செயல்களை அவன் செய்து காட்டுவான். ஆகாசத்தைவிட மனஸ் தத்துவம் சூக்ஷ்மமானது. மனஸ்தத்துவத்தைவிட புத்தி தத்துவம் சூக்ஷ்மமானது, புத்தி தத்துவத்தை விட பிரகிருதி தத்துவம் சூக்ஷ்மமானது; பிரகிருதி தத்துவத்தைவிட பரமாத்தும தத்துவமானது மிகவும் சூக்ஷ்மமானது. "सा काष्ठा सा परागतिः" அது இதுதான். இந்தகதி குருவின் கிருபையாற்றான் கிடைக்கக்கூடியது. குருவின் அநுக்கிரகம் ஸத்துவ விருத்தியினால் ஆகிறது. ஸத்துவ விருத்தியானது சுலபமான நாமத்தின் அநுஷ்டானத்தினால் உண்டாகிறது. மேலும், துவனிரூபமான நாமமானது ஆகாச தத்துவத்தினுடையதேயானபடியால் இந்த ஸாதனத்தால் பரமாத்துமாவானவர் சீக்கிரத்தில் வசப்படுகிறார் (சுவாதீனமாகிறார்.)

* * *

(6) முதற் கோடியில் "கற்பனை என்னும் பிரவாஹம் ஓய்ந்து, வியாதியின் விதைகள் நாசமடைகின்றன" என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதன் பேரில் வினாவிடைகள் நடந்தன. அப்பொழுது சுவாமி சொன்னார்: "ரோகபீஜங்கள் (வியாதியின் விதைகள்) முதலில் மனதில் சஞ்சரிக்கின்றன. பிறகு சரீரத்தின்பேரில் அதன் பரிணாமமாகிறது. ப்ளேக் போன்ற பயங்கரமான தொத்து வியாதியிருக்குங் காலத்தில் பயத்தை விட்டு தைரியமாய் நடந்து கொண்டால் ப்ளேக் முற்றிலும் பாதிப்பதில்லை. காரணம், ரோகபீஜங்கள் முதலில் மனதிற்றான் பிரவேசிக்கின்றன. பயத்தினால் தளர்ச்சியுண்டாகிறது; தளர்ச்சியடைந்தால் ரோகபீஜங்கள்

உட்புகுகின்றன. மனது சுத்தியடைந்த பிறகு தளர்ச்சியடைவதில்லை. என்றால் ஆரோக்கியமும் நிர்ப்பயமுமான நிலைமை (ஸ்திதி) பிராப்தமாகிறது. இது அந்த மனச்சுத்தியின் இயற்கையாகும் (சுபாவமாகும்). மனோவிருத்தியாகாத சிசுக்களுக்குத் தொத்து வியாதிகள் வருகின்றன; அதற்குக் காரணம் யாது?" இந்த வினாவிற்கு விடையளித்தனர்.

முதலில் ரோகபீஜங்கள் தாயின் மனமென்னும் பூமியை நாடுகின்றன. சிசு அவளுடைய ஸ்தனத்தைப் பானம் செய்கின்றது, என்றால் அதன் மூலமாய் வியாதியுண்டாகிறது. இது சிருஷ்டி நியமத்தை அநுசரித்திருக்கிறது முதலியன.

இரண்டாவது பரமாத்தும தத்துவம் நிர்விகற்பமாயிருக்கின்றது; கற்பனை என்பதுதான் அவித்தையாகும்; அவித்தையினால் திரிவிததாபமும், ஜனன மரணமென்னும் சுழற்சியும் ஏற்படுகின்றன. ஸத்துவ சுத்தியால் கற்பனைகள் அடங்குகின்றன, என்றால் ஸ்வரூப ஸாட்சாத்காரத்திற்கு முக்கியப் பிரதிபந்தங்களாகிய லயமும் விட்சேபமும் ஒழிகின்றன. லயம் என்றால் நித்திரை, விட்சேபமென்றால் சித்தத்தின் சஞ்சலத்துவம். கற்பனையினுடைய அல்லது விருத்தியினுடைய சலனம் குறைந்தால் ஹரி குரு கிருபையால் ஸ்வரூப ஸாக்ஷாத்காரத்தின் ஆவிர்பாவமுண்டாகிறது.

மேற்கூறிய நாமத்தின் அநுஷ்டானத்தால் பன்னிரண்டாவது ஸ்தானம் சுத்தியடைந்தால் அம்மனிதன் கவலை வறுமை இவைகளினின்றும் நிச்சயமாக விடுதலையடைந்தானென்றே நினைக்கவேண்டும். (இந்தியாவுக்கு தற்சமயம் இதுதான் தேவையாயிருக்கிறது. இந்தியாவின் தைந்நியம் நாசமடையவேண்டும். ஆதலால் இந்திய ஸமாஜத்தின் ஒவ்வொரு குடும்பத்திலும் இந்த நாமத்தின் அநுஷ்டானம் ஆரம்பமாகவேண்டும். இவ்வாறு ஆகும் தினந்தான் ஸுதினம்.)

* * *

(7) இவ்வாறாக ஸ்வாமி மஹாராஜ் அவர்கள் திருவாய்மலர்ந்தருளிய அந்த நாமாநுஷ்டானத்தைப் பற்றிய உபந்நியாஸமானது மஹாநதியின் பிரவாஹத்தைப்போல கம்பீரமாகவும் பிரேமாவேகத்துடனும் நடந்துகொண்டிருக்கும்பொழுது ஸகாம புத்தியுடன் (பலனை இச்சித்து) கேள்வி கேட்க வந்தவர்கள் கற்பூரத்தின் வாசனையில் ஓடிப்போகும் எறும்புகளைப் போல் மெல்ல மெல்ல எழுந்து போகலாயினர். போகும்போது எவரெவர் ஸ்வாமி மஹாராஜ் அவர்கள் முன்னிலையில் தேங்காய், பழம், மிட்டாய் முதலியன கொண்டுவந்து வைத்தனரோ அவற்றையெல்லாம் பிரஸாதமென்று அவரவர்களுக்குத் திருப்பிக்கொடுத்து விட்டனர். இது அவருடைய வழக்கமாகும். ஆனால் எதனாலோ யாருக்குத் தெரியும், மஹா ராஜஸ்ரீ காடப்பா அண்ணா அவர்கள் தம் தோப்பிலிருந்து கொண்டு வந்து வைத்த ஒன்பது மாங்கனிகளை மாத்திரம் ஸ்வாமியவர்கள் வெகு அன்புடன் புஜித்தனர். இதுமட்டுமல்ல, ஸ்ரீகைவல்லியாசிரம ஸ்வாமிகள் அவரிடமிருந்து மறுபடியும் அத்தகைய மாங்கனிகளைத்தருவித்து அவற்றை அவர் குர்லஹொஸூருக்கு ஸ்வாமி மஹாராஜ் அவர்களுக்காகக் கொண்டுபோய் அவற்றைத் தக்கபடி உபயோகப்படுத்தப்பட்டது. ஸ்வாமி மஹாராஜ் அவர்கள் அம்மாங்கனிகளை மாங்கனிகளென்றோ அல்லது நாவின் ஆசைக்காக பட்சித்தனரா? சத்! இப்படிச் சொல்பவன் தத்தாரியும் பாபியுமாவான். பகவான் கோபாலகிருஷ்ணன் கோபிகள் வீட்டிலிருக்கும் (இல்லத்திலிருக்கும்) பால், தயிர், மோர், வெண்ணெய் முதலியவற்றைத் திருடித் தின்ற



கொண்டிருந்தும் இத்தகைய புத்தியுடன் தானென்று சொல்லுவது போலாகும். ஆனால் அப்படியல்ல, பக்தர்களுடைய பிந்துவை (துளியை)ப் பெற்றுக்கொண்டு அவர்களுக்கு ஸிந்து (கடல்) வைக் கொடுப்பதானது பகவானுடைய சட்டம் அல்லது பிருதாகவே இருக்கின்றது. இதே திருஷ்டியுடன் காடப்பா அண்ணா அவர்களுடைய அந்த மாங்கனிகளுக்கு ஸ்வாமி மஹாராஜ் அவர்கள் தனது பவித்திரமான உதரத்தில் இடந்தந்தனரென்று சொல்லவேண்டும். நிற்க.

* * *

(8) நிஷ்காம புத்தியுடன் (பலனை இச்சியாது) ஜபம்—நாமஸ்மரணை—செய்துகொண்டிருக்கும்பொழுது தொகையின் கணக்கென்னவென்கிற கேள்விவந்தது. அப்பொழுது கணக்குடன் கூடிய ஜபத்தின் மகத்துவத்தைப்பற்றி ஸ்வாமியவர்கள் பிரமாணங்கள் கொடுத்துச் சொன்னார். அதாவது மனதிற்கு ஓர் விதமான பந்தனையும் வேண்டியிருப்பதில்லை. அது அடங்காக்காளையாயிருக்கின்றது. அதன் கழுத்தில் இந்த எண்ணிக்கை என்னும் கனமான கட்டையைக் கட்டிவிடவேண்டும். அப்பொழுது தான் சரிவர வேலைசெய்யும். இங்குமங்கும் கொண்டு தள்ளும் வழக்கம் குறையும் (அடங்கும்). வேண்டுமானால் அநுபவம் கொண்டு பார்க்கலாம். முதன் முதலில் எண்ணிக்கையினிடம் சற்று அதிகமாக லக்ஷ்யம் செல்லுகின்றது; பிறகு சில தினங்களில் ராமஜபத்தின் கண் அதிகமாகவும் எண்ணிக்கையின் கண் குறைவாகவும் செல்லுகிறது; அதன் பிறகு சங்கியை கணிப்பது மிகவும் சகஜமாகி விடுகின்றது. சங்கியையுடன் கூடிய ஜபத்தால் மனதின் ஞாபகசக்தி விருத்தியடைகிறது. இதர விவகாரங்களும் அதேவிதமாக நடைபெறுகின்றன. இவ்வளவு சங்கியை ஆயிற்றென்று தெரிந்தவுடன், மனதிற்கு ஓர்விதமான உற்சாகம் ஏற்பட்டு மனதின் தியாஸம் (சிந்திக்கும் சக்தி) விருத்தியடைகிறது. தியானத்தினால் தன்மயத்துவம் பிராப்தமாகிறது.

வேதாந்தத்தில் சொல்லப்பட்டிருக்கும் ஸப்த (ஏழு) பூமிகைகளுள் ஐந்து பூமிகைகள் (படிகள்) மேற் சொன்னவிதமான நாமஸ்மரணத்தினால் சகஜமாக ஏறிப்போக முடியும். 1 சுபேச்சை = சுபத்தின் இச்சை; 2 விசாரணை; 3 தனுமானஸா; 4 ஸத்வாபத்தி; 5 அஸம்சக்தி இவை தான் அப்பூமிகைகளாகும். யோகவாசிஷ்டம் முதலிய நூல்களில் இதைப்பற்றி விஸ்தரித்திருப்பது அறிஞர்களுக்குத் தெரிந்தேயிருக்கும்.

* * *

(9) இவ்வாறாக நாமஜபம் செய்யும்படி சொல்லும்பொழுது பலசுருதி முதலியவைகளைப்பற்றி அதிகமாய் விஸ்தரித்துப் பேசாமல் சகஜமாய் நாமஜபத்தைச் செய்யும்படி சிபார்சு செய்தால் எவருடைய பூமிகை பூர்வ புண்ணியத்தினால் சுத்தமடைந்திருக்கின்றதோ அவர்களுக்கு அது உடனே பற்றிக்கொள்ளும். பிறகு அவர்கள் வெகு சீக்கிரத்தில் சித்தமாவார்கள் (தயாராவார்கள்). இது ஓர் பிரயோகத்தின் விதம் என்றும் ஸ்வாமிகள் சொன்னார்கள். ஆனால் இவ்வாறு பலனை இச்சியாவண்ணம் செய்பவர்கள் வெகு சிலரே; பலனை இச்சித்துச் செய்பவர்களுடைய தொகைதான் அதிகமாயிருக்கும். அப்பேர்ப்பட்டவர்களை முதலில் பலசுருதி கேட்கும்படி செய்யவேண்டும். கேட்டுங்கூட ஊக்கத்துடன் செய்பவர்கள் சிலரே கிடைக்கின்றனர் என்றும் ஸாதுக்களுடைய அநுபவமிருக்கின்றது.

“எல்லாவற்றைவிட எளிதாயிருந்தபோதிலும், புத்திமானானவன்தான் எடுத்துக்கொள்வான்” என்று துகாராம் சொல்லியிருக்கிறார்

பலனை இச்சித்துத்தானாகட்டுமே, அவனுடைய இச்சையை நிறைவேற்றி அவனை நிஷ்காமனாகச் செய்யும் சக்தி அந்த நாமத்திலும் அந்த நாமத்தை யுடையவனிடத்திலுமிருக்கின்றது.

நாமத்திற்கும் நாமத்தையுடையவனுக்கும் பேதமே இல்லை; ஆனால் முதலில் இது அநுபவத்திற்கு வருவதில்லை, பிறகு வருகிறது.

“பகவானுடைய மந்திரந்தான் பகவானென்றறிந்து, அந்த மந்திரத்தை எடுத்துக்கொள்ளுங்கள்.”

ஸ்ரீராமவல்லபதாஸ்.

“மந்திரத்தின் பீஜாக்ஷரங்கள்தான், சித்ஸ்வரூபமும் கம்பீரமுமான ஞானமாயிருக்கின்றன.”

ஸ்ரீ ஏகநாதருடைய பாகவதம்.

“நாமம்தான் சைதன்னியத்தின் இருப்பிடம்.”

துகாராம்.

இத்தகைய தாரணையுடன் மந்திரத்தின் ஜபத்தை நடத்திவந்தால் பரமாத்தும ஸாக்ஷாத்காரமாவதற்கு வெகு நேரமொன்றும் செல்லாது. நிற்க.

“தர்மார்த்தமான காமவாசனை (இச்சை) யுடன் என்னை பஜிக்கத் தலைப்பட்டால், அதையும் நிறைவேற்றி நான் சாயுஜ்ய பதத்தைக் கொடுப்பேன் என்பதை உணருங்கள். இச்சையை நிறைவேற்றி முக்தியைத் தருவதற்கு எனக்குச் சக்தி இல்லையா? பக்தர்களுடைய சககாரியும் ஸ்ரீபதியுமாகிய நான் ஒருபொழுதும் அவனை அதோகதியடையவிடமாட்டேன்” ||636|| “தெரியாமல் என்னுடைய நாமத்தைச் சொல்லும் பாபிக்குங்கூட சாயுஜ்ய பதம் கிடைக்கும்பொழுது பேதமின்றி அனன்னிய பாவத்துடன் என்னுடைய பக்தியைச் செய்யும் பக்தனுக்கு அதோகதி ஏது?” || 637 ||

ஏகநாதருடைய பாகவதம்—
29-வது அத்தியாயம்.

* * * *

(10) இவ்வாறாக பரமஞானி, பரமபக்தர், பரம விரக்தர், பரம வித்துவான், பரமஹம்ஸ பரிவிராஜகாசார்யரான ஸ்ரீமத் வாஸுதேவானந்த ஸரஸ்வதி என்னும் யோகிவர்யருடைய திருமுகத்திலிருந்து பரம சாந்தரும் பரம குரு பக்தருமாகிய ஸ்ரீயுத் ரா. பா. காமத் அல்லது காடப்பா அவர்களுடைய செவியில் நாமரகஸ்யத்தைப் புகட்டப்பட்டது. அதைக் காடப்பா அண்ணா அவர்களுடைய திருமுகத்தால் இதை எழுதுபவனுக்குக் கேள்வியினால் எவ்வளவு கிரகிக்க இயன்றதோ, அதைச் சற்று அநுஷ்டித்து, சிற்றறிவின்படி ஜனங்களுடைய நன்மையை உத்தேசித்து, எழுதுகோலிலிருந்து எவ்வளவு இறக்க முடிந்ததோ அவ்வளவு இறக்கப்பட்டிருக்கிறது. இதில் ஏதாவது குற்றங் குறைகள் காணுமாகில், அது இதை எழுதுபவனுடைய புத்திதோஷமென்றெண்ணி ஸ்வாமி மஹாராஜ் அவர்களுடைய சிஷ்யோத்தமர்களும், ஸந்தமஹானுபாவர்களும் அவற்றைத் திருத்திக்கொண்டு இதைப்பற்றிய அபிப்பிராயத்தை எழுதித் தெரிவிக்கவேண்டுமாய்ப் பணிவுடன் கேட்டுக்கொள்ளுகிறேன்.

* * * *

(11) இப்பொழுது சாது சிரேஷ்டர்களுடைய திருமுகத்தால் ஷட் சாஸ்திரங்களைச் சிரவணம் செய்து சப்த ஞானம் சம்பாதித்தல், அதை ஆஸ்தையுடன் ஆசாரணத்திற்குக் (அநுஷ்டானத்திற்குக்) கொண்டுவருதல் இவ்விரண்டும் வெவ்வேறு விஷயங்களாம். வெறும் சப்த ஞானத்தினால் காரியமாவதில்லை; ஆசா



ணத்தாற்றான் அதுவாகிறது. இதற்காக மேற்படி நாமாநுஷ்டத்தை ஆசரித்து எவர் சாக்ஷாத்காரத்தை அடைகின்றனரோ, அந்த அநுபவத்தைப் பிறருக்கும் அநுபவப்படுத்திக் கொடுத்தாரோ அந்த நாமயோகியின் ஸ்வாநுபவத்தை உரைத்தாலன்றி இவ்விஷயம் முடிவு பெறமாட்டாது. ஆதலால் அது இங்கு எழுதுவது அவசியமாயிருக்கின்றது.

குருபக்தி பாராயணரான காடப்பா அவர்கள் ஸ்வாமி மஹாராஜ் அவர்களுடைய நாமாநுஷ்டானத்தைப்பற்றிய உபந்நியாசத்தைப் பக்தியுடன் சிரவணம் செய்து, வேதாந்த பரிசீலனத்தினால் சங்கையுடன் கூடிய ஜபத்தைப் பற்றிக் கொஞ்சம் விகற்பம் உண்டாகிக் கொண்டதைவிட்டு அவர் சங்கையையுடன் கூடிய ஜபம் செய்ய ஆரம்பித்தனர். அல்லது அவர்பேரில் அபிமானமுள்ள தேவதை ஏதாவதிருந்தால்—அந்தக் கல்யாண சக்தியானது—அவரை அவ்வாறு செய்யத் தூண்டிற்றென்றும் சொல்ல யாதொரு ஆட்சேபமுமில்லை. அவர் இவ்வநுஷ்டானத்தை வெகுதூரம் நடத்தியபிறகு ஒருநாள் சாயங்காலம் உலாற்றுவதற்குப் போனபொழுது கூட மூன்று நான்கு சிநேகிதர்கள் இருந்தனர். அவர்களை நோக்கி அவர் சொன்னதாவது: “வீண்வம்பு வார்த்தைகளில் ஆயுளின் விலையற்ற காலத்தை (நேரத்தை) ஏன் கழிக்கவேண்டும்? அதைவிட ஸ்வாமியவர்கள் அருளிச்சொன்னபடி நாம ஜபம் செய்வதனால் கெடுதலென்ன இருக்கிறது?” சற்றுநேரம் எல்லோரும் மௌனமாயிருந்தனர். ஒவ்வொருவரும் அவ்வாறு செய்வதாக மனதில் தீர்மானித்துக்கொண்டனரோ யன்றி, ராஜஸ்ரீ வாமன பீமராவ் ஏஜாவீகர் அவர்கள் அன்றுமுதல் செய்த உறுதியானது நிகாற்றதாயிருக்கிறது. ஸ்வாமி மஹாராஜ் அவர்களுடைய சூசனையின்படி காடப்பா அவர்கள் சகஜமாய் சொல்லிப் பார்த்தனர். அது வாமனராவ் அவர்கள்பேரில் நன்றாகப் பரிணமித்தது. அன்றுமுதல் இன்றுவரையில் அவர் (24) இருபத்துநான்கு கோடி ஜபம் செய்திருக்கின்றனர். அவருக்கு அதன் ஆச்சரியகாமான பலனும் கிடைத்தது. அவருடைய பன்னிரண்டு கோடி ஜபம் முடிந்ததும் அவருக்கு அந்த நாம ஸ்மரண ரூபமான சாதனத்தைப் பரவச் செய்யும்படி ஸ்ரீகளிடமிருந்து உத்தரவாயிற்று. அதன்பிறகு அவர் ஜனங்களுக்கு நாமஸ்மரணத்தின் உபதேசம் செய்யலாயினர். ஆச்சரியமென்னவெனில், அவர் எவரெவர்க்கு அநுஷ்டானம் செய்யும்படி சொன்னாரோ அவர்களெல்லோரும் யாதொரு விதமான விகற்பமும் கொள்ளாமல் அநுஷ்டானத்தைச் செய்ய ஆரம்பித்தனர். இவ்வாறாக நாமாநுஷ்டானம் பரவலாயிற்று. இதற்குக் காரணம்

“முதலில் செய்தனர், பிறகு கூறினர்”

என்னும் ஸ்ரீ ஸமர்த்தருடைய வாக்கியத்தின்படி அவர் செய்தனர். இதன்றி வேறென்ன இருக்கக்கூடும்? சர்க்காரிடமிருந்து அதிகாரதானம் கிடைத்தபிறகு அந்த மனிதனுக்கு ஓர் விதமான கௌரவம் கிடைக்கிறது. அந்த கௌரவத்தினால் சகல ஜனங்களும் அவ்வதிகாரி சொல்வதை எதிர்பேசாது கேட்கிறார்கள். இந்த கௌரவம் அந்த மனிதனுடையதன்று, சர்க்காருடையது. ஆதலால் அவ்வாறு நடக்கிறது. அவ்வாறே உபதேசிக்கும் ஸாதுஸந்தர்களுடைய விஷயமும். பாகவதர்கள் ஆயிரம் பெயர்கள் வருகின்றனர்; கதை, கீர்த்தனம் செய்யும்பொழுது நாம ஸ்மரணத்தைப் பற்றி உபதேசமும் செய்கின்றனர்; உபந்நியாசம் செய்கிறவர்கள் உபந்நியாசம் செய்கின்றனர்; நூலாசிரியர்கள் நூல்களில் அல்லது சமாசாரப் பத்திரிகைகளில் நிருபம் எழுதுகின்

றனர். ஆனால் அவற்றைக் கேட்டு அல்லது படித்து உறுதியுடன் அவ்வாறு அநுஷ்டிக்க எத்தனை பெயர்கள் ஆரம்பித்திருக்கின்றனர்? நமது நாம யோகியாகிய வாமனராவ் அவர்கள் சகஜமாய்ச் சொன்னால் போதும், அதைக் கேட்கவேண்டுமென்று தோன்றுகிறது என்பது வெகு பெயருடைய அநுபவம். இவர் ஒன்றும் பெரிய வித்துவானல்லர், சீமானல்லர், அல்லது உபந்நியாசகருமல்லர்; அவர் சாதாரணமாக ஓர் சுகவஸ்து (சுகமாக வாழும்) பிராமணராவார். ஸ்டாம்பு முதலியவை எழுதிக்கொடுத்து அதன்பேரில் அவர் நிர்வாகம் நடந்து வந்தது. விருத்தாப்பியத்தினால் இப்பொழுது அதுவும் நின்றுவிட்டது.

நாமத்தை உத்தேசிக்கின்றனரென்று குரு சிஷ்ய சம்பந்தம் பாராட்டுவதில்லை. சில மாதங்களுக்குமுன் (வருஷங்களுக்குமுன்) ராஜஸ்ரீ காடப்பா அண்ணா அவர்களுடன் அவர் கோமாந்தகத்திற்குச் சென்றிருந்தனர். அங்கு அவர் சுற்றச் சுற்ற 300 பெயர்கள் நாமாநுஷ்டானத்தைப் பின்பற்றுபவர்கள் கிடைத்தனர். அவர்களுள் வெகு பெயர்கள் சிரத்தையுடன் அவருக்குக் கொடுக்க தட்சிணை கொண்டுவந்தனர். ஆனால் ஒருவரிடத்திலிருந்தும் ஒரு பைசாவாவது அவர் பெறவில்லை. இத்தகைய நிஷ்காம புத்தியுடன் நடந்து கொண்டிருந்தமையால் அவரிடத்தில் ஓர்விதமான அதிருச்யமான சக்தியும் தேஜஸும் விருத்தியடைகிறது என்று சொல்வதற்கு ஆட்சேபமே இல்லை.

* * * *

(12) தனது தினசரிப் புத்தகத்தில் (டயிரியில்) அவர் தன் நாம ஜபாநுஷ்டானத்தின் அநுபவத்தையும், பிறருடைய அநுபவத்தையும் எழுதி வைத்திருக்கின்றனர். அதைப் பார்த்து அதைப் பற்றிய, உண்மையைத் தெரிந்து கொண்டு ஜனங்களுடைய உபயோகத்தின் பொருட்டு இந்த நிருபத்தின் மூலமாய் சுருக்கமாக எழுதி அச்சிட்டு வெளியிடுகிறேன். புத்திமான்களும் சிரத்தையுள்ளவர்களும் இதைப் பற்றி விசாரிக்கவேண்டும் :—

(1) முதற்கோடியில், என்றால் ஒருகோடி ஜபம் முடிவு பெறுவதற்குள், அவருடைய விக்ஷேபம் (தாபம்) நாசமடைந்தது. வீண் கற்பனைகள் எழுவது ஒய்ந்து விட்டது. (சில வருஷங்களாக கோர்ட்டில் அவருடைய ஓர் வியாஜ்யம் நடந்து கொண்டிருந்தது. அதே சம்பந்தமான கற்பனை இரவும் பகலும் மனதில் சுழன்று கொண்டிருந்தது. கண்டவர்களிடத்திலெல்லாம் அதைப் பற்றியே பேசுவதாயிருந்தது. அது அடங்கியது) கற்பனை எழுவதனால் அவருக்கு நித்திரையும் பிடிக்காமலிருந்தது. இருதயத்திற்குத் தாபம் உண்டாய்க் கொண்டிருந்தது. அதெல்லாம் ஒய்ந்து நன்றாக நித்திரை பிடிக்கலாயிற்று. இது முதல் தனுஸ்தானத்தின் சுத்தியின் அநுபவமாகும்.

(2) இரண்டாவது கோடியில் கடன் அடைபட்டது. தகப்பனார் காலத்தில் வரவேண்டிய பணம் வராமல் தடைப்பட்டுக் கிடந்தது. அது தானாகவே வசூலாயிற்று. வாரந்தோறும் சந்தையின்பொழுது இவருக்குப் பிறரிடமிருந்து பணம் கடன் வாங்கவேண்டியதாயிருந்தது. அந்தப் பண விஷயமான கஷ்டம் நீங்கியது. இது இரண்டாவது தனஸ்தான சுத்தியின் அநுபவமாகும்.

(3) மூன்றாவது கோடியில்—பின் வருமாறு நேர்ந்தது. ராஜஸ்ரீ காடி குத்தி என்னும் உபநாமமுள்ள லக்ஷாதீசரான சாவகார் ஒருவர் மூரகோடில் இருக்கின்றனர். அவரிடம் இவருடைய நிலத்தைப்பற்றி ஓர் வழக்கு இருபத்திரண்டு வருஷங்களாக நடந்து கொண்டிருந்தது. சாக்ஷிகள் போதாததனால் அதைப் பதினாறு முறை தள்ளப்பட்டது. கடைசி முயற்சி என்று இவர் இந்தத் தடவை வழக்குச் செய்யலாயினர். அது யாதொரு விதமான பிரயாசமுமின்றி, சாக்ஷிகள் இல்லாமலே வெறும் கடிதங்களின் மூலமாகவே அவர் பக்ஷமாய்த் தீர்ப்பாயிற்று. அவ்வாறே சகோதரன் சண்டை போட்டு வேறே போயிருந்தான். அவன் அன்புடன் நடந்து கொள்ளலானான். இது மூன்றாவது பராக்கிரமஸ்தானம் அல்லது பிராதுருஸ்தானம் இவைகளின் சுத்தியின் அநுபவமாகும்.



(4) நான்காவது கோடியில் — மேற்படி வழக்குத் தீர்ந்து நிலத்தைத் தன் வசப்படுத்திக் கொள்ளப்போனபோது மூன்றாவது மனிதன் ஒருவன் மேற்படி நிலம் தனதென்று தடை செய்யலானான். நிலத்தைத் தன் வசப்படுத்திக் கொள்ள விடவில்லை. அதன் பேரில் சில்லரை நம்பரில் வழக்கு நடத்தி அதைத் தடைசெய்யக்கூடாதென்று கோர்ட்டில் தீர்ப்பு செய்யப்பட்டு நிலம் வசப்படுத்திக் கொள்ளப்பட்டது. அநேக வருஷங்களாக எதற்காகப் பிரயத்னப்பட்டுத் துன்பங்கள் அநுபவிக்கப்பட்டதோ அதன் ஸார்த்தகமாய் ஆனந்த முண்டாயிற்று. இது நான்காவது சுகஸ்தானத்தின் அநுபவமாகும்.

(5) ஐந்தாவது கோடியில்—இவருடைய மகன் இவருக்குப் பிரதிகூலமாயிருந்தான். அவன் அநுகூலப்பட்டான். அவ்வாறே அவருக்கு அத்தியாத்தும கிரந்தங்களை சிரவணம் செய்யவேண்டுமென்கிற பிரபலமான இச்சை மேலிட்டது. இது ஐந்தாவது புத்திரன் அல்லது வித்தியாஸ்தானத்தின் சுத்தியின் அநுபவமாகும்.

(6) ஆறாவது கோடியில்—மேற்படி வழக்கில் தோற்றவர்களும் காரணமின்றி விரோதமாக நடந்துகொண்ட சாக்ஷிக்காரர்களும் இவரைச் சரணமடைந்தனர். அவர்களுக்கு ஏதோ சங்கடம் ஏற்பட்டு சிக்கலில் அகப்பட்டுக்கொண்டனர். இவரைத்தவிர விடுதலையடைய வேறு வழியில்லாமற் போயிற்று. அதனால் யோசனை கேட்பதற்காகவும் வேறு அநுகூலமான சகாயத்தின்பொருட்டும் இவருடைய காலைப்பிடித்து அவர் யாசிக்கலாயினர். அவர்களுக்கு இவர் தக்க உதவி புரிந்தனர். அதனால் அவ்வூரில் முன்பு சத்துருவாகத் தோன்றியவர்களெல்லோரும் மித்திரர்களாயினர். அவர் மனதிலிருந்த பீதி (அந்த ஜனங்கள் எந்த சமயத்தில் என்ன செய்வார்களோ என்கிற பீதி) இல்லாமலாயிற்று. இது ஆறாவது சத்துருஸ்தான சுத்தியின் அநுபவமாம்.

(7) ஏழாவது கோடியில்—சில வருஷங்களாக நடந்த வியாஜ்ஜியத்தால் அதிகப் பணம் செலவழிந்து போனமையாலும், அதனால் அடிக்கடி பணவிஷயமாக இடையூறுகள் நேர்ந்தமையாலும் அவருடைய பத்தினி அவரிடம் மிகவும் விரோதமாக நடந்து கொண்டிருந்தாள். இப்பொழுது அவள் அநுகூலமாக நடந்துக் கொள்ளலானாள். இது ஏழாவது ஜாயாஸ்தான சுத்தியின் அநுபவமாகும்.

(8) எட்டாவது கோடியில்—இவருடைய முதுகில் ஓர் சிரங்கு இருந்தது. அது வரவர நாளடைவில் ஓர் தேங்காயவ்வளவு பெரிதாயிற்று; அது தானாகவே உடைந்து வாசியாயிற்று. மரணவேதனை உண்டாயிருந்தது, அது ஔஷதோபசாரமின்றி அநுகூலப்பட்டிராது. அது அஷ்டம மிருத்யு அல்லது கண்டாந்தரஸ்தானம் சுத்தியடைந்ததன் அநுபவமாகும்.

(9) ஒன்பதாவது கோடியில் — ஸகுண ஸாக்ஷாத்காரமாயிற்று—ஒருநாள் சாயங்காலம்

இவருடைய மேயப்போன பசு வழக்கப்படி வீட்டிற்குத் திரும்பிவரவில்லை என்று அதைத் தேடும் பொருட்டு இவர் ஊருக்கு வெளியில் போய்ப் பசுமாடுகள் மேயச் செல்லும்இடத்தை நோக்கிச் சென்றனர். வெகு நேரம் தேடியும் அது கிடைக்கவில்லை. பிறகு களைத்துப்போய் ஊருக்கு வெளியில் அவ்வழியிலிருக்கும் ஓர் ஹநுமான் கோவிலுக்குப்போய் ஹநுமானுக்கு நமஸ்காரம் செய்தார். பசுமாட்டை மறந்துவிட்டார். ஹநுமானுடைய ஹிருதயத்துடன் இவருடைய ஹிருதயம் கூடியது. (ஹநுமானுடைய மனமும் இவருருடைய மனமும் ஒன்று சேர்ந்தது). நெஞ்சடைக்க வாய்குழரப் பின்வருமாறு பிரார்த்தனை செலுத்தலாயினர்! "ஹே பிரபோ! உன்னைப் போன்ற ராம பக்தன் ஒருவருமிலர். உனக்கு எப்பொழுதும் ஸ்ரீ ராமனுடைய தரிசனம் கிடைக்கிறது; ஆனால் கலியுகத்தில் என்னைப் போன்றபாமரனுக்கு அதெப்படிக்கிடைக்கும்?" என்று பேசிக்கொண்டிருக்கையில் அவருடையவாக்கு ஓய்ந்துவிட்டது, மெய்ம்மறந்தார், அஷ்டபாவங்களும் பொங்கிவந்தன. இருளாயிருந்த விடத்தில் திடீரென்று பிரகாச முண்டாயிற்று. அதில் அழகிய நீலமேக வர்ணமும், தாமரை இதழ்களைப் போன்ற கண்களும், சர்வ அலங்காரத்துடன் கூடிய பரமானந்தகனனான ஸ்ரீராமசந்திரமூர்த்தியின் திவ்வியமான தரிசனம் கிடைத்தது. அந்த சமயத்து அவ்வானந்தமானது புலன்கள் அல்லது மனதிற்கு எட்டக் கூடிய தன்று; அவைகளுக்கு மேலிருந்தது. இந்த ஸம்பவத்தை அவர் சொல்ல வாரம்பித்தாரானல் இன்னமும் அவருடைய ஸ்திதி மாறி விடுகிறது.

'நீ தர்மத்தின் உருவம்' என்று எந்த பகவானை மஹாஸாது துகாராம் மஹாராஜ் அவர்கள் சொல்லி அழைத்தனரோ அவருடைய யோகிகளுக்கும் துர்லபமான பிரத்தியக்ஷ தரிசனம் இவருக்குக் கிடைத்தது. இது ஒன்பதாவது தர்மஸ்தான சுத்தியின் அநுபவமாகும்.

(10) பத்தாவது கோடியில்—விஜாபூர் ஜில்லாவில் எடகூர் என்னும் ஊரில் பிரசித்திபெற்ற 'அடவி ஆசார்யர் என்னும் சுரோத்திரியரும் தபஸ்வியுமான பிராமணர் இவருடைய வீட்டிற்கு வந்து இவருக்கு தரிசனம் கொடுத்து உபதேசபரமான வார்த்தைகளைப் பேசிப் போயினர். தேசஸ்த வைஷ்ணவர்களில் இந்த ஆசாரியர் இந்தப் பிராந்தத்தில்மிகவும் பிரசித்தி பெற்றவராயிருந்து கௌரவம் பொருந்தினவராயும், பூஜ்யமானவராயுமிருந்தனர். இவர் வெகு எஞ்ஞங்களும் யாத்திரையும்செய்திருந்து மிகவும் அநுபவமுள்ள வித்வானுயிருக்கிறார். இவரைத் தரிசிக்க மிகவும் பெரிய பெரியவர்களெல்லோரும் இச்சை கொள்ளுகின்றனர். தரிசனத்தால் தாம் தன்யரென்று (கிருதார்த்தரென்று) நினைக்கிறார்கள். இவருடைய தரிசனமும் சம்பாஷணையும் அனுயாசமாக வாமனராவுக்குக் கிடைத்தது. இது பத்தாவது கர்மஸ்தான சுத்தியின் அநுபவமாகும். அல்லது அத்தகைய பெரியோரிடமிருந்து அதற்காக (தர்மஸ்தான சுத்திக்காக)இவருக்குக் கிடைத்த ஸர்டிபிகேட்டேயாகும்.

(11) பதினொன்றாவது கோடியில்—ஸ்ரீ விசுவேசுவர க்ஷேத்திரத்தில் (கேங்கேரியில்) இவருக்குத் தானகவே கிருஹலாபமுண்டாயிற்று. அன்றி எத்தனையோ வருஷகாலமாக சாகுபடி இல்லாமற் கிடந்த இவருடைய நிலத்தில் பயிர் செய்யப்பட்டு நல்ல விளைச்சலுண்டாயிற்று. இது பதினொன்றாவது ஸ்தான சுத்தியின் அனுபவமாகும்.

(12) பன்னிரண்டாவது கோடியில்—நாமஸ்மரணரூபமான தனத்தைத் தக்கபடி உபயோகிக்கும்படியும் லோகத்தில் ஸாதனத்தைப் பரவச்செய்யும்படி கனவில் திருஷ்டாந்தமாயிற்று. (கனவில் உத்தரவாயிற்று). ஸர்வேசுவர ஸர்க்காரிடமிருந்து அதிகார தானம் கிடைத்தது (தேதி 12—8—13). இது பன்னிரண்டாவது வியயஸ்தான சுத்தியின் அநுபவமாகும்.

இவருடைய அநுபவம் இவ்வாறுயிருக்கின்றது. சிலர் இந்த அநுஷ்டானத்தை ஆரம்பித்தது முதல் அவர்களுக்குண்டான அநுபவத்தை இவருக்குத் தெரிவித்ததை இவருடைய டைரியில் குறிக்கப்பட்டிருக்கின்றது; ஆனால் விஸ்தாரபயத்தால் அதை எல்லாம் இங்கு கொடுப்பதில்லை. இதுவரையில் இவரிடத்தில் சுமார் இரண்டாயிரத்து இருநூற்று ஐம்பது (2250) பெயர்களுடைய பெயர்கள் பதிவுபடுத்தப்பட்டிருக்கின்றன. அதில் சகல வகுப்பினரும் ஜாதியினருமிருக்கின்றனர்.

'ஜாதி'—பிராமண—தேசஸ்தர், கர்ராடே, கொங்கணஸ்தர்கள், கெடை ஸாரஸ்வதர், கனோஜ் இத்யாதியும், அவ்வாறே ஜைனர், லிங்கங்கட்டிகள், மராட்டியர், ஆதித்திராவிடர் இவர்களுமிருக்கின்றனர். அதிகமாய்ச் சொல்லுவானேன்; மகமதியருங்கூட இம்மார்க்கத்தைப் பின்பற்றி யிருக்கின்றனர்.

சில மஹாநுபாவர்களாகிய குருவின் சிஷ்யர்கள் இவரிடத்தில் தமது பெயரைப் பதிவுபடுத்தியிருக்கின்றனர். அன்றி இக்காலம் முதல் ஜபசங்கியை முன்னிலும் அதிகரித்திருக்கின்றது. அவர்களுடைய ஸம்பிரதாயமான ஸாதன மார்க்கம் மிகவும் தெளிவடைந்து வருகிற உதாகாரணங்களும் பல கிடைக்கின்றன.

'நாம மந்திரம்' பன்னிரண்டு எழுத்துக்களுடையது; வாஸுதேவமந்திரம் பதின்மூன்றெழுத்துக்களுடையது; நான்கு எழுத்துக்களுடையது, மூன்றெழுத்துக்களுடையது, இரண்டெழுத்துக்களுடைய ராமமந்திரம், ஆறு எழுத்துக்களுடைய 'ராம் கிருஷ்ண ஹரி' மந்திரம் அவ்வாறே ஷடாக்ஷரமும் பஞ்சாக்ஷரமுமுள்ள சிவமந்திரம், தத்தகுரு, விட்டல், வெங்கடேச, நாராயண, சிதம்பரம், மாருதி, கஜானன, வீரபத்திர, மல்லிகார்ஜுன, காலிகா, பகவதி ரேணுகா, நவதுர்க்கா, கிருஷ்ண, பஸவேசுவர, அர்ஹந்த, அல்லா இத்தியாதி நாம ஜபம் அவரவர்கள் அவரவர்களுடைய இஷ்டப்படி ஜாதியை அநுஸரித்துச் செய்யவாரம்பிக்கின்றனர். இந்த ஜபம் சிலர் மாலையால் செய்கின்றனர். சிலர் விரல்களால் செய்கின்றனர். சிலர் கடியாரத்தின்மூலமாய்ச் செய்கின்றனர் சில ஏழை ஜனங்கள் மெல்லிய கயிற்றிற்கு முடிகள் போட்டு அதன்மூலமாய்ச் செய்கின்றனர். (ஓர் லிங்கங்கட்டியான கடைக்காரன் இவ்வாறாக நாள் ஒன்றிற்கு 50 ஆயிரம் வரையில் ஜபம் செய்வது காணப்படுகிறது.)

(தொடரும்).



# பங்கஜவல்லி அல்லது பால்ய விவாகத்தின் பயன்.

(ஒரு சிறு கதை)

(ஸ்ரீமதி K. கமலாம்பாள்.)

## I.

இரவு சுமார் எட்டு மணி இருக்கும், பூர்ண சந்திரன் மிகுந்த அழகுடன் பிரகாசித்துக் கொண்டிருந்தான். அப்பொழுது, சென்னை தங்கசாலைத் தெரு ஓர் மெத்தை வீட்டின் மேன்மாடியில் ஒருவர் சாய்வு நாற்காலியில் உட்கார்ந்து பேபர் வாசித்துக் கொண்டிருந்தார். அவருக்கு சுமார் முப்பத்தைந்து வயது

அல்லது ஒன்றிரண்டு அதிகமிருக்கலாம். அந்த அறையில் நானாவித ரவிவர்மா படங்களும், சில போட்டோக்களும் மாட்டப்பட்டிருந்தன. கீழே அதிக விலையுயர்ந்ததும், மிகுந்த அழகுடையதுமான ரத்ன கம்பளம் விரிக்கப்பட்டிருந்தது. ஒரு சுவற்றில் பெரிய கெடியாரம் ஒன்று வைக்கப்பட்டிருந்தது. அவருக்கெதிரில் ஓர் ரவுண்டு மேஜையின்மேல் ஒரு வெள்ளிக் கூஜாவில் பாலும் அதின்மேல் ஒரு டம்ளரும் இருந்தது. ஒரு வெற்றிலைத்தட்டு அதன் பக்கத்தில் வைக்கப்பட்டிருந்தது. அப்பொழுது சுவற்றிலிருந்த கெடியாரம் டாங்! டாங்! என்று மணி ஒன்பது அடிக்கவே, அந்த அறையின் கதவு திறக்கப்பட்டது. உடனே அவ்வீட்டு யஜமானியாகிய கல்யாணி அம்மாள் உள் நுழைந்தாள். அங்கு உட்கார்ந்திருப்பவர் அந்த வீட்டு யஜமானன் நாராயணசாமி அய்யர். அவர் வாசிப்பதிலேயே முழுகவனமும் இருந்ததால், அவள் வருவதைக் கவனிக்கவில்லை. அவள் அவருக்குப் பக்கத்தில் கீழே உட்கார்ந்தாள். சுமார் பத்து நிமிஷத்திற்குப் பிறகு அவர் திரும்பிப் பார்க்க, தன் சம்சாரமாகிய கல்யாணி உட்கார்ந்திருக்கவே அதிக வியப்புடன் "கல்யாணி, எப்பொழுது வந்தாய்? நீ வந்ததை நான் பார்க்கவில்லையே! வந்து ரொம்ப நாழிகை ஆயிற்றோ?" எனக் கேட்டார்.

கல்யாணி;—நீங்கள் வாசிப்பதிலேயே நோக்கமாயிருந்தபடியால் நான் வந்ததை நீங்கள் பார்க்கவில்லை. நீங்கள் படித்துக் கொண்டிருக்கும்பொழுது, திருடன் ஒருவன் உள் நுழைந்து, எதையாவது திருடிச் சென்றாலும் உங்களுக்குத் தெரியாது.

நாராயணசாமி:—நீ ஏதாவது கவனமாய்ப் படித்துக் கொண்டிருந்தாலும், வேறு விஷ கவனிக்க இடமிருக்காது. நீ அவ்வளவு தூரம் முயற்சியாய்ப் படிக்கப்போவதுமில்லை, உனக்குத் தெரியப்போவதுமில்லை.

கல்:—எனக்குத்தான் ஒன்றும் தெரியாதே! அதைப்பற்றி இப்பொழுது என்ன! நான் தங்களிடம் முக்கியமான சில விஷயங்களைக் குறித்துப் பேசலாமென்று வந்தேன்.

நா:—என்ன அவ்வளவு முக்கிய சமாசாரம்! சொல் பார்ப்போம். நாழிகையாயிற்று; எனக்குத் தூக்கம் வருகிறது.

கல்:—நம்முடைய ஒரே குழந்தையாகிய பங்கஜவல்லிக்கு இப்பொழுது ஆறு வயது முடிந்து ஏழாவது ஆரம்பமாகிறது. அவளுக்குக் கலியாணம் செய்யவேண்டும்.

நா:—இது ஏற்கனவே பல தரம் சொன்ன பழைய கதை தானே? இது தானா முக்கிய சமாசாரமென்று சொல்லி என் தூக்கத்தைக் கெடுத்தாய்?

கல்:—உங்களுக்கு அது பழங் கதையாகத் தோன்றுகிறது. எனக்கு அது முடிகிற வரைக்கும் புதிது தான்.

நா:—ஆறு வயதிலேயே கலியாணம் செய்ய வேண்டிய அவசியம் என்ன ஏற்பட்டது?

கல்:—தங்களுக்கு அது அவசியமாக இராது; சொல்லுகிறேன் கேளுங்கள். பெண் குழந்தைகளைக் கன்னிகாதானம் செய்துகொடுக்க வேண்டியது முக்கியம். கன்னிகாதானம் என்பது ஏழு வயதில் தான் செய்யவேண்டும். அப்படிச் செய்துகொடுத்தால் அதின் பலனாக எனக்கும் பிள்ளை பிறக்குமென்று எல்லோரும் சொல்லுகிறார்கள். நம்மூரிலும் எவ்வளவோ பெண்களுக்குச் சிறு வயதில் விவாகமாயிருக்கிறது.

நா:—நம்மூரில் எந்தச் சிறு பெண்களுக்கு விவாகமாயிருக்கிறது?



கல்:—அடுத்தாத்து அன்னம்மாள் பெண் காமாக்ஷிக்கு ஏழு வயதில் போன மாதம் விவாகமாயிற்று. கோடியாத்துக்கோமளாம்பாள் பெண் சீதைக்கு ஆறு வயதிலேயே கலியாணம் முடிந்துவிட்டது. எதிராளாத்து சுப்புலக்ஷ்மி பெண் ரஞ்சனிக்கு வருகிற மாதம் கலியாணம். எல்லோரும் சிறுவயதில் கலியாணம் செய்யாமலா இருக்கிறார்கள்? தாங்கள்தான் பால்ய விவாகம் கூடாதென்று ஒரே பிடிவாதம் பிடிக்கிறீர்கள். இதைப்பற்றி ஆறு மாதமாக எவ்வளவோ தரம் உங்களிடம் சொல்லியிருக்கிறேன்.

நா:—ஊரிலுள்ளவர்களில் இரண்டு மூன்று பெயரைப் பொருக்கி எடுத்துச் சொல்லி விட்டாய். பால்ய விவாகம் செய்வதால் வரும் கெடுதலைப் பற்றி உனக்கொன்றும் தெரியவில்லை.

கல்:—பால்ய விவாகம் செய்வதால் என்ன கெடுதல்?

நா:—என்ன கெடுதலா! சொல்லுகிறேன் கேள். ஏழு வயதில் ஒரு குழந்தைக்கு விவாகம் செய்தால் அதினால் ஒரு கெடுதல் ஏற்பட்டால் அக்குழந்தையின் கதி என்ன ஆகும்?

கல்:—பதினைந்து வயது பெண்களுக்கு கலியாணம் செய்து அப்பொழுது ஏதாவது ஏற்பட்டால் என்ன செய்கிறது? எல்லாம் அவாவர்களுடைய தலை விதிப்படி நடக்கும்.

நா:—நீ சுத்த முட்டாள், பதினைந்து வயதுப் பெண்களுக்கு ஒரு கெடுதல் ஏற்பட்டால் அந்தப் பெண்கள் தகுந்த வயதுடையவர்களாதலால், அதனால் வரும் கஷ்ட சுகங்களைத் தெரிந்து கொள்ளவாவது இடமிருக்கும். பால் மணம்மாறாக் குழந்தைக்குத் தாலியைக் கட்டி விட்டு, அதை ஏன் துன்பத்திற்குள் ளாக்கவேண்டும்? அது அனுவசியம் தானே. நாமே கவலையை விலைக்கு வாங்கி அனுபவிப்பதுபோலல்லவா இருக்கிறது நீ சொல்வது. நாம் கூடியவரையில் தகுந்த வயது வந்த பிறகு, அதாவது அவர்களுக்கு உலக விஷயங்கள் கொஞ்சமாவது தெரிந்த பிறகு, விவாகம் செய்தால் பிறகு ஈசன் செயல் எப்படியோ அப்படி நடக்கட்டும். நான் சொல்வது தப்போ, சரியோ நீயே யோசித்துப் பார்த்தால் அதின் உண்மை விளங்கும்.

கல்:—தாங்கள் வக்கீல் கோர்ட்டில் வாதிப்பதைப்போல் மட மடவென்று பேசி விட்டீர்கள். எனக்கு நான் சொல்வதுதான் சரி என்று தோன்றுகிறது. நான் சொல்லுகிறதைச் சொல்லி விட்டேன், பிறகு உங்கள் இஷ்டப்படி செய்யுங்கள்.

நா. :—நீயோ இப்பொழுதே விவாகம் செய்துவிடுவது ரொம்பவும் அவசியமென்று ஒரே பிடிவாதம் பிடிக்கிறாய். எனக்கோ அப்படிச் செய்வதில் கொஞ்சங்கூட இஷ்டமில்லை. இது தர்மசங்கடமாக இருக்கிறது. அதற்கு வேளை வந்துவிட்டால், யார் தடை செய்த போதிலும் நிற்கப்போவதில்லை. நீ சொன்னபடி செய்துவிட்டால் நமது பெண்ணின் அதிர்ஷ்டம் எப்படியோ யாருக்குத் தெரியும்?

கல். :—நீங்கள் என்ன இவ்வளவு கவலைப்படுகிறீர்களே? எந்தக் காரியத்தை ஆரம்பிப்பதாயிருந்தாலும், பகவான்மேல் பாரத்தைப் போட்டுவிட்டு தைரியமாகச் செய்தால் ஒரு குறைவும் வராது.

நா. :—நீ என்ன தைரியம் சொன்னபோதிலும் என் மனச்சாட்சி இடந்தரவில்லை. பிராப்தம் உள்ளபடி நடக்கட்டும். நாழிகை ஆயிற்று, படுக்கைக்குப் போகவேண்டும் (என்று சொல்ல, இருவரும் தூங்கப் போய்விட்டார்கள்.)

## II.

முன் அத்தியாயத்தில் சம்பாஷித்துக்கொண்டிருந்த தம்பதிகளின் முழு விவரங்களும் அறிய நமது வாசகர்கள் பிரியப்படுவார்களாதலால் அதை முதலில் விவரிப்போம்.

நாராயணசாமி அய்யர் என்பவர் சென்னையிலேயே சுமார் பதினைந்து வருஷமாயிருப்பவர். அவ்வூரிலுள்ள பணக்காரர்களில் அவரும் ஒருவர். சுற்றுப்பக்கங்களிலுள்ள கிராமங்களில் நிலபலங்களும் கொடுக்கல் வாங்கலும் உண்டு. அதைத்தவிர எண்பது ரூபாய் சம்பளத்தில் ஒரு உத்தியோகமும் பார்த்து வருகிறார். தெய்வ பக்தியும், உதார குணமும் உள்ளவர். F. A. வரையில் படித்திருக்கிறார். அவருடைய குடும்பத்தில் அவர் தாயார் பாகீரதி அம்மாள், சம்சாரம் கல்யாணி, பெண் பங்கஜவல்லி இந்நால்வர்தான். ஒரு பரிசாரகனும், இரண்டு வேலைக்காரர்களும் ஒரு வேலைக்காரியும் இருக்கிறார்கள்.

முன் தன் பத்தினியிடம் கலியாண விஷயமாய்ப் பேசியதைப்பற்றி தான் எவ்வளவோ யோசித்துப் பார்த்தும் ஒன்றும் புரியவில்லை. பிறகு தன் தாயாராகிய பாகீரதியம்மாளையும் கேட்க, அவளும் அப்படிச் செய்வது அவசியமென்றும், தனக்கு மிகவும் தள்ளாமையாயிருப்பதால் இன்னும் நாலைந்து வருஷங்கூட இருப்பது நிச்சயமில்லையென்றும், அதனால் இந்த வருஷமே செய்வது உத்தமமென்றும் சொன்னாள்.

அவருக்குக் கொஞ்சங்கூட அதில் இஷ்டமில்லாவிட்டாலும் வயது சென்ற தன் தாயாரின் பேச்சைத் தட்ட முடியவில்லை. ஆகையால் அவர்களின் சொற்படி நடப்பது முக்கியமாய்விட்டது. கல்யாணி அம்மாளுக்கு வரனைப்பற்றிய விஷயம் அவ்வளவு முக்கியமில்லை. எப்படியாவது தன் பெண்ணுக்குக் கலியாணம் ஆனால் போதும்.

கடைசியில் நாராயணசாமி அய்யர் தஞ்சாவூரில் இருக்கும் தன் தங்கை சாவித்திரியின் மூத்த பிள்ளையாகிய பன்னிரண்டு வயதுடைய ராஜகோபாலனுக்கு இரண்டாயிர ரூபாய் வரதட்சிணையுடனும் ஐந்நூறு ரூபாய் சீருடனும் கன்னிகாதானம் செய்து கொடுப்பதாக நிச்சயம் செய்துகொண்டு வந்து சேர்ந்தார். சாவித்திரியின் புருஷன் தஞ்சாவூரில் வக்கீலாயிருக்கிறார். அவருக்கு ராஜகோபாலனைத் தவிர இரண்டு பெண்களும் ஒரு பிள்ளைக் குழந்தையும் இருக்கிறது.

வரனைப்பற்றிய விஷயத்தில் எல்லோருக்கும் பூரண திருப்தி. கலியாணப்பெண்ணாகிய பங்கஜவல்லிக்கோ யாதொரு தகவலும் தெரியாது. கலியாணமென்றால் ஆக்கில் மேளம் கொட்டும், சாரட்டில் ஏறிக்கொள்ளலாம், புதுப்பாவாடை, சித்தாடை கட்டிக்கொள்ளலாம் என்று நினைத்துக்கொண்டிருக்கிறாள். அவள் தன் தோழிகளுடன் சந்தோஷமாக விளையாடிக்கொண்டிருந்தாள். கலியாண தினமும் சமீபித்தது. சம்பந்தி, மாப்பிள்ளை முதலியவர்கள் முதல் நாள் சாயங்காலம் வந்து சேர்ந்தார்கள். அவர்களைத் தங்கள் வீட்டுக்குச் சமீபத்திலிருக்கும் பெரிய மாடி வீட்டில் இறக்கினார்கள். அந்த வீட்டில் பெரிய பந்தல் போட்டிருந்தது.

கலியாண வீட்டிலும் பெரிய கொட்டகைப் பந்தல் போட்டு, தேர்ச்சீலைகள், வாழை, கமுகு முதலியவைகள் கட்டி வெகு அழகாக இருந்தது. அன்றையதினம் ராத்திரி, பாணவேடிக்கை, மத்தாப்பு முதலியவைகளுடனும், சேர்த்தியான மேளம், பாண்டு முதலிய வாத்தியங்களுடனும் வெகு விமரிசையாக மோட்டாரில் மாப்பிள்ளையை அழைத்தார்கள். மறுநாட் காலை எட்டு மணிக்குத் தன் பெண்ணாகிய பங்கஜவல்லியைத் தன் தங்கை பிள்ளை ராஜகோபால



னிகாதானம் செய்து கொடுத்தார். வைதிகர்கள் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு ரூபாய் விதம் பூரி கொடுத்து, யாவருக்கும் சம்பிரமமாய்ச் சாப்பாடு போட்டார். தினம் பாட்டுக் கச்சேரி, கதை, பிரசங்கம் முதலியவைகள் நடந்தன. நான்கு நாட்களும் நலங்கு, ஊஞ்சல் எல்லாம் கிரமமாய் நடந்து, நாலாம் நாள் ஊர்வலமும் நடந்து, ஐந்தாம் நாள் சம்பந்திகள் ஊர்போய்ச் சேர்ந்தார்கள். அநேகமாய் எல்லாக் கலியாணங்களிலும் சில்லரை மனஸ்தாபங்களும், காப்பிச் சண்டை முதலிய சச்சரவுகளும் நடப்பது சகஜம். ஆனால் பங்கஜவல்லியின் கலியாணம் யாதொரு விக்கினமுமின்றி வெகு சந்தோஷகரமாக நிறைவேறிற்று. கல்யாணி அம்மாளுக்கு உண்டான சந்தோஷம் சொல்லத்தரமல்ல. தன் எண்ணப்படியே கலியாணம் நடந்ததற்கு சுவாமிக்கு அர்ச்சனை, அபிஷேகம் முதலியன செய்து வைத்தாள். தனக்கு இனிமேல் யாதொரு கவலையும் இல்லை என்று சொல்லிக்கொள்ளுவாள். இதற்கு நேர் விரோதமாகக் கலியாணம் ஆனது முதற்கொண்டு நாராயணசாமி அய்யர் கவலைப்பட்டுக்கொண்டே இருந்தார். எவ்வளவோ தைரியமாக அவர் இருந்தபோதிலும், அவர் மனம் மட்டும் மிகுந்த கஷ்டத்துடனேயே இருந்தது. வெளிக்குச் சந்தோஷமாக இருந்தபோதிலும், சில சமயங்களிலும், தான் தனிமையில் இருக்கும்பொழுதும் தன் பெண்ணினுடைய அதிர்ஷ்டம் எப்படியோ, நல்லதிர்ஷ்டமாக இருக்கவேண்டுமே தெய்வமே, என்று சொல்லிக்கொள்ளுவார். இப்படியே கொஞ்ச நாட்கள் சென்றன. கலியாணம்கழித்து சுமார் இரண்டு மூன்று மாதத்திற்கெல்லாம் பாகீரதி அம்மாள் சிவலோகப்பிராப்தி அடைந்தாள். அவளுடைய உத்தரக்கிரியைகளெல்லாம் ஒருவாறு நிறைவேறின.

## III.

தீபாவளி வந்தது, அவ்வருஷம் தலை தீபாவளியாதலால், நாராயணசாமி அய்யர் தன் தங்கை புருஷனாகிய சீனிவாசய்யருக்கு, எல்லோரையும் அழைத்துக்கொண்டு இரண்டு தினம் முன்னதாகவே தீபாவளிக்கு வரும்படி கடிதம் எழுதியிருந்தார். அவர்களும் அவர் எழுதியபடியே வந்து சேர்ந்தார்கள். தீபாவளிக்கு மாப்பிள்ளைக்கு வைரக் கடுக்கன், வைர மோதிரம், தங்க அரைஞாண், வேஷ்டி, விலையுயர்ந்த பட்டுகள் முதலியவைகள் வாங்கியிருந்தார். மற்றப்படி அவர்களுக்குச் செய்ய வேண்டிய சகல மரியாதைகளும் குறைவின்றி நடத்தினார். அவர்களும் பங்கஜவல்லிக்கு ஒரு புடவை, ரவிக்கையும், ஒட்டியாணமும் செய்து வந்தார்கள். தீபாவளியானதும் எல்லோரும் சந்தோஷத்துடன் ஊருக்குப் போகப் புறப்பட்டுக்கொண்டிருந்தனர். எல்லோரும் வண்டியில் ஏறியாய்விட்டது. மாப்பிள்ளையாகிய ராஜகோபாலன் தன் அம்மாமியிடம் சொல்லிக்கொண்டு வரும்பொழுது வாசற்படி தலையில் இடித்தது. அதைக் கண்ட கல்யாணி அம்மாள் "ராஜகோபாலா! சற்று கீழே உட்காரு. கொஞ்சம் தீர்த்தம் சாப்பிட்டுவிட்டுப் போகலாம்" என்று சொல்லி, பரபரப்பாய் ஒரு டம்ளரில் தீர்த்தம் கொண்டுவந்து கொடுத்தாள். அவனும் கீழே உட்கார்ந்து தீர்த்தம் சாப்பிட்டுவிட்டு வண்டியேறினான். அப்பொழுதே நாராயணசாமி அய்யருக்குக் கவலை இன்னும் கொஞ்சம் கூட விருத்தியாயிற்று. மெள்ள சமாளித்துக்கொண்டு அவர்களை ஊருக்கு அனுப்பினார். அவர்களும் ஊர்போய்ச் சேர்ந்தார்கள். அன்று ராத்திரியே தன் மனைவியைக் கூப்பிட்டு "ராஜகோபாலன் ஊருக்குப் போகும்பொழுது தலையில் இடித்ததே, அப்பொழுது முதல் எனக்குக் கவலை ஜாஸ்தியாக இருக்கிறது" என்று நாராயணசாமி அய்யர் சொன்னார்.

கல். :—தலையில் இடிப்பது ஒரு அதிசயமா? என்னமோ நிமிர்ந்தாற்போல் போயிருப்பான், இடித்துவிட்டது. இதற்கென்ன கவலை?

நா. :—இத்தனை பேர்களிருக்க அவன் தலையில் இடிப்பானேன்? மேலும் இரண்டு மூன்று நாட்களாய் அவன் இங்கிருக்கவில்லையா? அப்பொழுதெல்லாம் இடிக்காமல் ஊருக்குப் புறப்படும்பொழுது இடித்தது என் மனதிற்குத் திருப்தியாக இருக்கவில்லை.

கல்:—உங்களுக்குக் கலியாணம் நடந்ததுமுதற்கொண்டுதான் திருப்தியில்லை. இப்பொழுது அது இன்னும் அதிகமாயிற்று. உங்களுக்கு ஒன்று இஷ்டமில்லாட்டால், அதற்கு ஏதாவது சொல்லிக் கொண்டிருப்பீர்கள்.

நா: —உன் சொல்லைக்கேட்டுக் கலியாணம்செய்தது முதல் கவலையை விலைக்கு வாங்கியாய் விட்டது. அது வேண்டாமென்றால் போகுமா?

கல்: —என் சொல்லைக் கேட்டதினால் இப்பொழுது என்ன வந்து விட்டது? நீங்கள் அனாவசியமாகக் கவலைப்பட்டால் அதற்கு நானென்ன செய்யமுடியும்?

நா —உன்னை ஒன்றும் செய்யச் சொல்லவில்லை. நடக்கிறது நடந்தே தீரும். என்ன தான் தைரியமாக இருந்தபோதிலும் என் மனம் நிம்மதியடையவில்லை.

கல்: —நீங்கள் ஒன்றுக்கும் விசாரப்படாமலிருங்கள். வாருங்கள், சாப்பிட நாழியாயிற்று (என்று சொல்ல, இருவரும் சாப்பிடச் சென்றார்கள்.)

IV.

இங்கு இப்படியிருக்க, தஞ்சாவூரில் என்ன நடக்கிறது என்று பார்ப்போம். பங்கஜவல்லியின் கணவனாகிய ராஜகோபாலன் தினம்தவறாமல் பள்ளிக்கூடம் போய்வருவான்.. தீபாவளி கழித்துச் சுமார் மூன்று மாதங்களுக்குப்பிறகு ஒரு நாள் சாயந்திரம், ராஜகோபாலன் பள்ளிக்கூடத்திலிருந்து வரும் பொழுதே "அம்மா! எனக்கு மத்தியானம் முதல் தலையை வலித்துக் கொண்டிருந்தது. பிறகு நாழிகை ஆக ஆக அது ஜாஸ்தியாக வலிக்கிறது" என்று சொல்லிப் புஸ்தகத்தை வைத்துவிட்டுக் கீழே உட்கார்ந்தான். உடனே சாவித்திரி "ஏனப்பா, திடீரென்று தலைவலி வந்தது? ஒரு நாளாவது அப்படிச் சொல்லமாட்டாயே?" என்று சொன்னாள்.

ராஜ:—எனக்கு ஒருநாளும் இப்படி வலித்ததில்லையே. வரவர ரொம்ப உபத்திரவப்படுத்துகிறது. எனக்குத் தாங்க முடியவில்லை; ஜ்வரமும் வரும் போலிருக்கிறது.

சாவி.: —(மிகுந்த வருத்தத்துடன்) இப்படி என் சமீபத்தில் வா, உடம்பைத் தொட்டுப் பார்ப்போம் (என்று கூப்பிட்டாள்).

உடனே அவன் சமீபத்தில் வர உடம்பைத் தொட்டுப் பார்த்தாள். அப்பொழுதுதான் ஜ்வரம் வர ஆரம்பம் பண்ணிக்கொண்டிருந்தது. சாவித்திரி மனதில் பயத்துடனிருந்தாலும், வெளியில் தைரியத்துடன் "ஒன்றுமில்லை, சற்றுக் கதகதப்பாக இருக்கிறது. தலைவலிக்குக் கொஞ்சம் அமிர்தாஞ்சனம் தடவிவிட்டு, ராத்திரி கஞ்சி கொஞ்சம் சாப்பிட்டுவிட்டுத் தூங்கினால் விடிந்ததும் ஒன்றுமிராது. சற்று படுத்துக்கொள். அமிர்தாஞ்சனம் கொண்டு வருகிறேன்" என்றாள்.

ராஜ.:—எனக்கு ஆகாரமேஒன்றும் வேண்டாம் போலிருக்கிறது. அப்பா இன்னும் கச்சேரியிலிருந்து வரவில்லையா? தங்கைகளிருவரும் பள்ளிக்கூடத்திலிருந்து வரவில்லையா?



சாவி. :—இப்பொழுதுதானே மணி நாலரை ஆகிறது. தானே சற்று நேரங்கழித்து வருகிறார்கள். நீ சற்று படுத்துக்கொண்டிருந்தால் தலைவலிக்குக் கொஞ்சம் சாதகமாக இருக்கும்.

ராஜ.:—எனக்குப் படுத்துக்கொள்ளவும் பிடிக்கவில்லை. அவர்களோடாவது சற்று பேசிக்கொண்டிருந்தால் சௌகரியமாக இருக்குமென்று தோன்றுகிறது (என்று சொல்லிக் கொண்டிருக்கும்பொழுது பள்ளிக்கூடத்துக்குச் சென்றிருந்த அவன் தங்கைகளாகிய விசாலமும் ருக்மணியும் "அண்ணா' எங்களுக்குமுன் நீ வந்துவிட்டாயா?" என்று கேட்டுக்கொண்டே உள்ளே வந்தார்கள்.)

ராஜ. :—எனக்கு உடம்பு கொஞ்சம் சரிப்படவில்லை. அதனால் விளையாடக்கூட முடியவில்லை. ஆகையால் சீக்கிரம் வந்துவிட்டேன். நானும் உங்கள் வரவைத்தான் எதிர்பார்த்துக்கொண்டிருந்தேன். வந்து இந்த பெஞ்சியில் உட்காருங்கள் (என்று சொன்னான்.) உடனே அவர்களிருவரும் "அண்ணா! கொஞ்சம் இரு. அம்மாவிடம் பட்சணம் வாங்கிக்கொண்டு வருகிறோம். உனக்கும் வாங்கி வரட்டுமா?" (என்றார்கள்.)

"எனக்கு வேண்டாம் நீங்கள் வாங்கிக்கொண்டு சீக்கிரம் வாருங்கள்" என்று சொல்ல உடனே அவர்கள் போய் பேருக்கு ஒரு முறுக்கும் ஒரு ரவா உருண்டையும் வாங்கி வந்து பெஞ்சியில் உட்கார்ந்தார்கள். சாவித்திரி அமிர்தாஞ்சனம் கொண்டுவந்து ராஜகோபாலனுக்குத் தடவிவிட்டு, "விசாலம்! ருக்மணி! நீங்களிருவரும் அண்ணாவிடம் பேசிக்கொண்டி[illegible]லன் அழுகிறான். அ[illegible]ருகிறேன்" என்று சொல்லிப் போனாள். [illegible] கோபாலனும் அவன் தங்கைகளும் விளையாட்டாக ஏதோ பேசிக்கொண்டிருந்தார்கள்.

ராஜகோபாலனுக்கு ஜ்வரம் வரவர ஜாஸ்தியாகவே, 'அம்மா, அப்பா' என்று பெருமூச்சுவிட ஆரம்பித்தான். அதைக்கண்ட ருக்மணி, அவன் அம்மாவைக் கூப்பிடுகிறானென்று எண்ணி அவளிடம் போய் "அம்மா! அண்ணா உன்னைக் கூப்பிடுகிறான். சீக்கிரம் ஓடிவா" என்று சொல்லவே, அவள் மிகுந்த பயத்துடன் ஓடிவந்து அவனைத் தொட்டுப் பார்க்க, ஜ்வரம் மிகுந்த வேகத்துடன் அடித்துக் கொண்டிருந்தது. கண்களை மூடிக்கொண்டு படுத்திருந்தான். உடனே அவனைக் கூப்பிட, அவனுக்குப் பேசவும் முடியவில்லை. அவள் மிகுந்த வியாகூலத்துடன் "கோர்ட்டுக்குப் போனவரும் இன்னும் வரவில்லை. டாக்டரைக் கூப்பிடச்சொல்லுவோமென்றால் சேவகனையும் காணோமே! நான் என்ன செய்வேன்! பகவானே! நீர்தான் என் குழந்தையைக் காப்பாற்றவேண்டும்" என்று சொல்லிக்கொண்டிருக்கும்பொழுதே சீனிவாசய்யர், சேவகனாகிய வீராசாமியுடன் வந்து சேர்ந்தார். வந்ததும் ராஜகோபாலன் படுத்திருப்பதைப் பார்த்து, "சாவித்திரி! ஏன் ராஜகோபாலன் படுத்துக்கொண்டிருக்கிறான்?" என்று கேட்க, அவள் அதிக வருத்தத்துடன் "அவனுக்கு சாயந்திரம் முதல் ஜ்வரம் அடித்துக்கொண்டிருக்கிறது. கூப்பிட்டால் பேசவும் மாட்டேனென்கிறான்" என்று கண்ணால் மலமலவென்று கண்ணீர் உதிர்த்தாள். அவர் "நீ எதற்காக அழுகிறாய்? ஜ்வரம் வந்தால் டாக்டரைக் கூப்பிட்டுக் காட்டினால் சௌக்கியமாகி விடுகிறது. இதற்கு இவ்வளவு வருத்தம் எதற்கு? உனக்கு எப்பொழுதும் தைரியமென்பதே கிடையாது. நீ பேசாமலிரு. இதோ ஒரு நிமிஷத்தில் டாக்டரை அழைத்து வரச் சொல்லுகிறேன்" என்று சொல்லி

"வீராசாமி! நீ நம்முடைய மோட்டாரைக் கொண்டுபோய் டாக்டர் மாதவராவ் அவர்களை அதிசீக்கிரம் அழைத்துக் கொண்டுவா" என்று அனுப்பிவிட்டு, ராஜகோபாலன் அருகில் சென்று பார்த்து, "சரி எல்லாவற்றிற்கும் டாக்டர் வரட்டும்" என்று சொல்லி அங்கிருந்த சோபா ஒன்றில் உட்கார்ந்தார். சுமார் 10 நிமிஷத்திற்கெல்லாம் வாசலில் மோட்டார் சப்தம் கேட்கவே சீனிவாசய்யர் எழுந்திருந்து வாசற்படியிற் போகுமுன், மோட்டாரிலிருந்து மாதவராவ் இறங்கி வந்து "குடீவ்னிங் ஸார்" என்று சொல்ல இவரும் அதே மாதிரி சொல்லி அவரை அழைத்து வந்து ராஜகோபாலனைப் பார்க்கும்படி சொல்லவே அவர் நன்றாய்ப் பார்த்து "ஜ்வரம் கடுமையாகத் தானிருக்கிறது. என்னுடன் வீராசாமியை அனுப்புங்கள், மருந்து அவனிடம் கொடுத்தனுப்புகிறேன். அதிகமாக அவனைத் தொந்திரவு செய்யவேண்டாம். ஆகாரம் ஜவ்வரிசிக் கஞ்சி கொஞ்சம் வேண்டுமானால் கொடுக்கலாம். வேண்டாமென்று சொன்னால் மிகவும் நல்லது. நான் அனுப்பும் மருந்தை ராத்திரி 4 வேளைக்குக் கொடுங்கள். பிறகு காலமே ஆறு மணிக்கு நான் வந்து பார்த்து மருந்து கொடுக்கிறேனென்று வீராசாமியையும் அழைத்துக்கொண்டு போனார். கொஞ்ச நேரத்திற்கெல்லாம் மருந்துடன் வீராசாமி வந்து சேர்ந்தான். மருந்தை ராஜகோபாலனுக்குக் கொடுத்தார்கள். அன்றிரவு ஒருவருக்கும் சரியான சாப்பாடுமில்லை, தூக்கமுமில்லை. பொழுது விடிந்தது. ஜ்வரம் அதிகமாயிற்றே தவிரக் குறையவில்லை. டாக்டர் தான் சொல்லிய படியே காலை ஆறு மணிக்கே வந்து விட்டார். வந்ததும் சீனிவாசய்யர் 'வாருங்கள், வாருங்கள்; உங்களது வரவைத் தான் ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறேன். அவன் கையைப் பாருங்கள்; நேற்று இருந்ததைவிட இன்று ஜாஸ்தியாக இருக்கும்போலிருக்கிறதே" என்று சொன்னார். அதற்கு டாக்டர் 'இருங்கள் பார்ப்போம்' என்று கையைப் பார்த்து 'ஆமாம், நீங்கள் சொல்வதுபோல் ஜ்வரம் இன்று அதிகமாகத் தானிருக்கிறது, ஆனாலும் பாதகமில்லை. நான் வரும்பொழுது சில மருந்துகள் கொண்டு வந்தேன். ஆனால் இப்பொழுது இருக்கும் ஸ்திதியில் அதைக்கொடுக்கக்கூடாது. நான் நேற்றுமாதிரி வீராசாமியை அழைத்துப்போய் மருந்து கொடுத்தனுப்புகிறேன். அதை இரண்டு மணிக்கொருதரம் கொடுங்கள். அதைத் தவிர ஒரு மருந்து எழுதிக்கொடுக்கிறேன். அது ஷாப்பில் அகப்படும். அதைக் காலை, மாலை இருவேளையும் கொடுங்கள். பிறகு சாயந்திரம் நான் வருகிறேன்' என்று சொல்லிப்போய் சேவகனிடம் மருந்து கொடுத்தனுப்பினார். அதையும் ஷாப்பில் வாங்கிய மருந்தையும் அடிக்கடி கொடுத்துக்கொண்டிருந்தார்கள். ஆகாரமோ ஒன்றும் செல்லவில்லை, கூப்பிட்டாலும்எப்பொழுதாவது ஒரு தரம் நினைவிருக்கும்பொழுது பேசுவான்; இல்லாவிட்டால் அதுவுமில்லை. டாக்டர் வந்து காலை, மாலை இருவேளையும் தவறாமற் பார்த்து வந்தார். அன்றை தினம் முதல் வீட்டிற்கு சனியன் பிடித்தது. சீனிவாசய்யர் கோர்ட்டுக்குப் போகவில்லை. இரண்டு வாரத்திற்கு லீவு வாங்கிக்கொண்டார். ஏற்கனவே பயந்திருந்த சாவித்திரிக்கு இன்னும் பயமும் கவலையும் அதிகமாயின. சாவித்திரிக்கு தைரியம் சொன்ன சீனிவாசய்யரும் அதிக மனவருத்தத்திற்குள்ளானார். தனிமையாயிருக்கும் பொழுது கவலை ரொம்ப அதிகமாயிருக்கும். இப்படியே ஒரு வாரமாயிற்று. வியாதி அதிகமாயிற்றே யொழியக் குறையவில்லை. அதனால் சீனிவாசய்யர் சென்னை நாராயணசாமி அய்யராகிய தன் சம்பந்திக்குப் பின்வருமாறு கடிதம் எழுதினார். அப்பொழுது உடம்பு இருந்த மாதிரி தந்தி அடிக்கும்படி தானிருந்தது. ஆனால் நாராயணசாமி அய்யருக்கு அதிக பயமாக இருக்குமென்று கடிதம் எழுதினர்.



தஞ்சாவூர்,
15—4—1916.

ராஜகோபாலனுக்கு ஒரு வாரமாக ஜ்வரமாக இருக்கிறது. ஆகாரம் செல்லவில்லை, டாக்டர் மாதவராவ் தினம் மருந்து கொடுத்துக்கொண்டு வருகிறார். கூடிய சீக்கிரம் சௌகரியமாகப் போய்விடுமென்று நினைத்து இதுவரையில் உங்களுக்குக் கடிதம் எழுதவில்லை. தற்சமயம் உடம்பு ஒரே மாதிரியாக இருப்பதால், தாங்கள் எல்லோரையும் அழைத்துக் கொண்டு கூடிய சீக்கிரம் வந்து சேரவும்.

தங்கள் வரவை ஆவலுடன்
எதிர்பார்க்கும்
R. சீனிவாசய்யர்

என்று எழுதினர்.

## V.

இது இப்படியிருக்கச்சென்னையில் நாராயணசாமி அய்யர் காலை சுமார் எட்டுமணிக்குக் காப்பி சாப்பிட்டுவிட்டுக் கூடத்துஊஞ்சலில் தாம்பூலம் தரித்துக்கொண்டு உட்கார்ந்திருந்தார். அப்பொழுது தபாற்காரன் இரண்டு கடிதங்களைக் கொண்டுவந்து கொடுத்தான். அதில் ஒன்று கச்சேரிக் கடிதம், மற்றொன்று தஞ்சாவூர்க் கடிதம். கச்சேரிக் கடிதத்தைப் பார்த்து விட்டு தஞ்சாவூர் என்று முத்திரையிட்ட கடிதத்தைப் பார்த்ததுமே அவர் மனதிற்கு ஏதோ சங்கடமாக இருந்தது. அதைப் பிரித்துப் பார்க்கவே மிகுந்த வியாகூலத்துடன் 'கல்யாணீ' என்று கூப்பிட, உள்ளேயிருந்த கல்யாணி அம்மாள் 'எதற்காகக் கூப்பிட்டீர்கள்?' என்று கேட்டுக் கொண்டே வந்தாள். உடனே அவர் 'தஞ்சாவூரிலிருந்து கடிதம் வந்திருக்கிறது. வாசிக்கிறேன் கேள்' என்று அதில் எழுதியிருந்த சமாசாரத்தை வாசித்துக் காட்டிவிட்டு 'நான் முன் உனக்குச் சொல்லும் பொழுது மனதிற்கு ரொம்பவருத்தமாக இருந்ததே, இப்பொழுதாவது நான் சொன்னதுதான் சரி என்று மனதிற்குப் படுகிறதா?'

கல்:—நீங்கள் ஆரம்ப முதற்கொண்டு அஸ்து என்று சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள். இப்பொழுது உடம்பும் அசௌக்கிய மென்றால் கேட்பானேன். மனிதர்களென்றால் உடம்புக்கு ஒன்றும் வராமலா இருக்கும்? கல்லால் கட்டி சாந்தால் பூசியிருக்குமா?

நாரா.:—"போதும் உன்னுடைய சமாசாரம். உன் புத்தி உலக்கைக் கொழுந்தும் குந்தாணி வேறுமாக இருக்கிறதே! உன்னை நோவதிலும் பலனில்லை. மறுபடி அந்தக் கடிதத்தை வாசிக்கிறேன், கவனமாய்க் கேள்" என்று சொல்லி முற்றிலும் படித்தார். கல்யாணியும் கவனமாய்க் கேட்டாள். "கேட்டாயா கடிதத்திலுள்ள சமாசாரத்தை? உடம்பு ரொம்ப ஜாஸ்தியாக இருந்துதான் இந்தக் கடிதம் கிடைத்திருக்கிறது. இனிமேல் இப்பொழுது தஞ்சாவூருக்குப் போகச் சரியான வண்டி கிடையாது. ராத்திரி எட்டு மணி வண்டிக்குத்தான் போகவேண்டும். புறப்படத் தயாராக இரு" என்று சொல்லித் தான் ஒரு நாற்காலியில் உட்கார்ந்தார். அப்பொழுது வாசலில் விளையாடச் சென்றிருந்த பங்கஜவல்லி உள்ளே வந்தாள். அவளைக் கண்ட நாராயணசாமி அய்யருக்குத் தன்னையறியாமல் கண்ணில்ஜலம் வந்தது. அதைப் பார்த்த பங்கஜவல்லி தன் தகப்பனரிடம் போய் "ஏன் அப்பா! கண்ணில் ஜலம் வருகிறதே" என்று தன் பாவாடைத் தலைப்பால் கண்ணைத் துடைத்தாள். உடனே அவர் மனம் வருந்தி "ஒன்றுமில்லை, கண்ணில் தூசி விழுந்தது, அதுதான்" என்று சொன்னார். உடனே அவள் உள்ளேபோய்ப் பார்க்கத் தன் அம்மா மூட்டை கட்டிக்கொண்டிருந்

தாள். அவளிடம் போய் "அம்மா! எதற்காக மூட்டை கட்டுகிறாய்?" என்று கேட்டாள். அதற்கு அவள் "எனக்கொன்றும் தெரியாது, உன் அப்பாவைப் போய்க் கேள்" என்று சொல்லவும், அவரிடம் வந்து "அப்பா! அம்மா மூட்டை கட்டுகிறாளே, எந்த ஊருக்குப் போகப்போகிறாள்? யாருக்குக் கலியாணம்?" என்று கேட்கவும், அவர் துக்கம் இன்னும் விருத்தியாயிற்று. "தஞ்சாவூரிலிருந்து நம்மை வரும்படியாகக் கடிதம் வந்திருக்கிறது. அதற்காகத்தான் மூட்டை கட்டுகிறாள்" எனவே, பங்கஜவல்லி "அப்பா! எனக்கு நாளைக்குப் பரீட்சை. நான் ஊருக்குப் போனால் பரீட்சைக்கு இருக்க முடியாது. வாத்தியாரம்மா கோபித்துக்கொள்ளுவார்கள். அம்மா மட்டும் போகட்டுமே. நீங்களும் நானும் இங்கிருப்போமே. எதற்காக நம்மை வரும்படி கடிதம் எழுதியிருக்கிறார்கள்?" என்று கேட்க, அவர் உள்ளதைத் தன் பெண்ணிடம் சொல்லக்கூடாதென்று எண்ணி, "என்ன காரணமென்று தெரியவில்லை. நாம் எல்லாரும்தான் போவோமே. உனக்குப் பரீட்சையானால் இரண்டொரு தினத்தில் வந்துவிடலாம்" என்று சொன்னார். 'சரி' என்று சொல்லி வாசலில் விளையாடச் சென்றாள். அங்கு தன் தோழிகளிடம் தான் ஊருக்குப் போவதைத் தன் வாத்தியாரம்மாளிடம் தெரிவிக்கும்படி சொன்னாள். இரவு எட்டு மணி ரயிலுக்கு எல்லோரும் தஞ்சாவூர் போகப் புறப்பட்டு ரயிலேறிக் காலை பத்து மணிக்குத் தஞ்சாவூர் ஸ்டேஷனில் இறங்கினார்கள். ஒரு வண்டி வைத்துக்கொண்டு வக்கீல் சீனிவாசய்யர் வீட்டிற்கு வண்டியை விடும்படி வண்டிக்காரனுக்குச் சொன்னார்.

## VI.

வண்டியிலிருந்தபடியே நாராயணசாமி அய்யர் யோசிக்கலானார். "என் மனமானது ரொம்பக் கலக்கமடைகிறதை நினைத்தால் நான் போகுமுன் விபரீதம் ஒன்றும் காதில் விழாமலிருக்க வேண்டுமென்று கடவுளைப் பிரார்த்திக்கிறேன். நான் என்ன செய்வேன் ஈசா!" என்று வண்டியிலேயே சாய்ந்து விட்டார். பங்கஜவல்லி "அப்பா! அதோத் தெரிகிறதே அந்தக் கட்டிடத்தைப் பாருங்கள். எவ்வளவு பெரிதாக இருக்கிறது" என்று சொல்ல, அவர் பதில் சொல்லாததைக் கண்டு தான் பார்த்துக் கொண்டே சென்றாள். கல்யாணி ஒன்றும் தோன்றாமல் திக்பிரமை அடைந்திருந்தாள். இவர்கள் குறித்த இடத்திற்குச் செல்ல இன்னும் அரை பர்லாங்கு தூரம் இருக்கிறது. ஒரே கத்தலும், இரைச்சலும் இவர்கள் காதுக்கு எட்டிற்று. 'மருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்' என்பது போல் நாராயணசாமி அய்யர் திடீரென்று எழுந்து 'அது என்ன சத்தம்?' என்று வண்டிக்காரனைக் கேட்க, அவன் 'ஒன்றுமில்லை, கொடும்பாவி கட்டி இழுக்கிறார்கள்' என்று சொன்னான்.

இன்னும் சற்று தூரம் போனதும் சீனிவாசய்யரின் வேலைக்காரனான வீராசாமி வந்துகொண்டிருந்தான். உடனே நாராயணசாமி அய்யர் பரபரப்புடன் அவனைக் கூப்பிட்டு "ராஜகோபாலனுக்கு உடம்பு எப்படியிருக்கிறது?" என்று கேட்க, அவன் "முன்போலத்தானிருக்கிறது. நீங்கள் போங்கள், நான் கடைக்குச் சென்று சீக்கிரம் வருகிறேன்" என்று சொன்னான். இவர்கள் வீட்டிற்குவந்து சேர்ந்தார்கள். வாசலில் சீனிவாசய்யர் கவலை நிறைந்த முகத்துடன் நின்றுகொண்டிருந்தார். இவர்கள் வண்டியை விட்டு இறங்கியதும் 'வாருங்கள்' என்று உள்ளே அழைத்துச் சென்றார். இவர் முகத்தைக் கண்டதும் நாராயணசாமி அய்ய [illegible] த்தமாகி விட்டது. உள்ளே



போய் ராஜகோபாலன் படுத்திருந்ததைப் பார்த்தார். மூச்சுதான் மயிரிழைபோல் ஓடிக்கொண்டிருந்தது. அவர் எவ்வளவோ அடக்கிப் பார்த்தும் அவரையும் அறியாமல் 'ஜகதீசா! இனி நானென்ன செய்வேன்?' என்ற சொற்கள் அவர் வாயிலிருந்து வந்தன. அப்படியே பொத்தென்று கீழே சாய்ந்து விட்டார். அவரைக் கல்யாணி அம்மாள் தாங்கிக்கொண்டாள். அவளுக்கு இன்னதுதான் செய்கிறதென்று புலப்படவில்லை.

பங்கஜவல்லிக்கு ஒன்றுமே தெரியவில்லை. அவள் அங்கு உட்கார்ந்திருந்த ராகவனுடனும் ருக்மணி, விசாலத்துடனும் விளையாட ஆரம்பித்தாள். இதைப் பார்த்த பெற்றோர்களினுடைய துக்கம் பன்மடங்கு அதிகமாயிற்று. உள்ளேயிருந்து சாவித்திரி வந்தாள். அவளைப் பார்க்கப் பரிதாபகரமாக இருந்தது. அந்த சமயம் டாக்டர் வந்தார். நாராயணசாமி அய்யர் அவரைப் பார்த்து "மாதவராவ்! பையனுடைய உடம்பு எப்படியிருக்கிறது? பார்த்துச் சொல்லுங்கள்" எனவே, அவர் பார்த்துவிட்டு, "இன்றையதினம் ஞாயிற்றுக்கிழமையல்லவா? புதன்கிழமை தினம் அமாவாசை கனத்த நாளென்று சொல்லுவார்கள். ஆகையால் அது போகுமட்டும் கொஞ்சம் கவலைதான்" என்று சொல்லி மருந்து கொடுத்துச் சென்றார். ராஜகோபாலனை நாராயணசாமி அய்யர், கல்யாணி அம்மாள் இருவரும் எவ்வளவுதான கூப்பிட்டுப் பார்த்தாலும் அவன் பேசவில்லை. அவனுக்குத் தன் ஞாபகமே கிடையாது.

இப்படியே திங்கட்கிழமை முழுவதும் சென்றது. செவ்வாய்க்கிழமை காலை டாக்டர் வாவில்லை. மூச்சும் சற்றுப் பெரிதாக வந்துகொண்டிருந்தது. உடனே எல்லோரும் பயந்துகொண்டு வீராசாமியை டாக்டரை அழைத்துவரும்படி அனுப்பினார்கள். அவன் சென்று சற்று நேரத்திற்கெல்லாம் மருந்துடன் திரும்பி வந்து, 'டாக்டர் ஊரில்லை, நாளைக்குத் தான் வருவாராம். உடம்பு ஏதாவது அதிகமென்று தெரிந்தால் இந்த மருந்தைக் கொடுக்கச் சொன்னார்' என்று கொடுத்தான். உடனே அதை வாங்கி ராஜகோபாலனுக்குக் கொடுத்தார்கள். மறுபடி பெரிய மூச்சே வந்துகொண்டிருந்ததேயொழியக் குறையவில்லை. எல்லோரும் அவனைச்சுற்றி உட்கார்ந்து விசனப்பட்டுக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது பங்கஜவல்லி அம்மாவிடம் சென்று 'அம்மா! அத்தான் ஏன் படுத்துக்கொண்டிருக்கிறார்? நீங்கள் எல்லாரும் ஏன் இங்கு உட்கார்ந்திருக்கிறீர்கள்?' என்று கேட்க, கல்யாணி 'அடி பங்கஜம்! உன் அத்தானுக்கு உடம்பு சரிப்படவில்லை. அது தான் பெருங்கவலையாக இருக்கிறது' என்று சொன்னாள். அதற்குப் பங்கஜவல்லி 'இப்பொழுது எழுந்திருக்க மாட்டாரா? எவ்வளவு நாழிகை படுத்திருக்கிறது?' என்றாள். அதற்குஅவள் தாயார் 'என் கண்ணே! உன் அதிர்ஷ்டம் எப்படியிருக்கிறதோ? நான் என்ன? செய்யப்போகிறேன்?' என்று சொல்லி, அவளை மடியில் உட்காரவைத்துக்கொண்டாள். சாயந்திரம் நான்கு மணி ஆயிற்று; மூச்சு ஒடுங்க ஆரம்பித்தது. டாக்டரோ வரவில்லை, அங்கிருப்பவர்களுக்கோ இன்னதுதான் செய்வது என்று தெரியவில்லை. எல்லோரும் இங்கும்அங்குமாக அலைந்துகொண்டிருந்தனர். சுமார் ஐந்து மணி இருக்கும்; ராஜகோபாலன் இவ்வுலகையும் இவனையே நம்பிருக்கும் எல்லோரையும் விட்டுப் பிரிந்து மேலுலகிற்குச் சென்றான். அப்பொழுது அங்கிருந்தவர்களின் நிலைமையை வாசிப்பவர்களே அறிந்துகொள்ள வேண்டுமே தவிர என்னால் சொல்லத்தரமல்ல. எங்கு பார்த்தாலும் அழுகைக் குரல்; நாராயணசாமி அய்யர் சாகாத பிணம்போல் இருந்தார். சாவித்திரி ஸ்தம்பமாய்ப் போய்விட்டாள். கல்யாணி பித்துப்

பிடித்தவள் போலானாள். சீனிவாசய்யருடைய கஷ்டம் கொஞ்சம் நஞ்சமல்ல. பங்கஜவல்லியும் மற்றக் குழந்தைகளும் எல்லோரும் அழும்பொழுது தாங்களும்கூட அழுது கொண்டிருந்தார்கள். பங்கஜவல்லி தனக்கு வந்திருக்கும் கஷ்டம் இன்னதென்று அறிந்தவளில்லை.

இவர்கள் எவ்வளவு நாழிகை அழுதுதான் என்ன பிரயோஜனம்? 'ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும் மாண்டார் வருவரோ மானிலத்தீர்' என்பது போல ஆயிற்று. கூட இருந்தவர்கள் ஒருவாறு அவர்களைச்சமாதானப்படுத்தி மேல் நடக்கவேண்டிய காரியங்களைச் செய்யலானார்கள். அப்பொழுது சாவித்திரி பங்கஜவல்லியைப்பார்த்து 'என் கண்ணே! நான்தான் அதிர்ஷ்டமில்லாப்பாவி, உனக்காவது கொஞ்சம் மங்கிலியப்பலன் இருக்கக்கூடாதா!' என்று அவளைக் கட்டிக்கொண்டு கதறினாள். தஞ்சாவூரில் அநேகமாய் அவர்களுக்குத் தெரியாதவர்களே கிடையாது. ஒரே கூட்டம். கடைசியில் அடக்கம் செய்யச் சென்றார்கள். போகும் வழியில் அரளிச் செடி பூத்திருந்தது. அதைப் பார்த்த பங்கஜம் 'அம்மா! எனக்கு இந்தப் பூவைப்பறித்துத்தா' என, கல்யாணி ஹோவெனக் கதறி 'அடி கண்ணே! நீ இவ்வயதில் பூவென்னும் ஆசையை மறக்கவேண்டி வந்ததே' என்று அலறினாள். பங்கஜமோ அதை அவசியம் பறித்துத் தரும்படி கத்தவே அதைப் பறித்துக் கொடுத்து அழைத்துப்போய் மேல் நடக்கவேண்டிய காரியங்களைப் பார்த்துக் கொண்டு வீடு வந்து சேர்ந்தார்கள். அப்பொழுது வந்து படுத்தவர்தான் நாராயணசாமி அய்யர், பிறகு எழுந்திருக்கவே இல்லை. கல்யாணியம்மாளின் நிலைமை மிக்கப் பரிதாபகாமாயிருந்தது. சுமார் ஒரு மாதத்திற்கெல்லாம் இவர்கள் சென்னை வந்து சேர்ந்தார்கள். அப்பொழுதும் நாராயணசாமி அய்யர் படுத்த படுக்கையாகவே இருந்தார்.

VII.

தஞ்சாவூரில் சீனிவாசய்யர், சாவித்திரி இருவரும் பைத்தியம் பிடித்தவர்கள் போலானார்கள். குழந்தைகளுக்கு வேளா வேளையில் ஆகாரங்கூடக் கிடையாது. அவர்கள் அப்பா, அம்மா அழும்பொழுது தாங்களும் கூட அழுகிறதும் பேசாமலிருக்கும்பொழுது தாங்களும் பேசாமலிருக்கிறதுமாக இருந்தார்கள்.

இப்படியே ஏழுவருஷங்கள் சென்றன. அப்பொழுதும் நாராயணசாமி அய்யர் படுக்கையை விட்டு எழுந்திருக்கவில்லை. பங்கஜவல்லிக்கு அப்பொழுது வயது பதினொன்று. ஒருநாள் கல்யாணி சாயங்கிரம் பங்கஜவல்லியின் தலையில் ஒரு ரோஜா புஷ்பத்தை வைத்திருந்தாள். பங்கஜம் அடுத்த வீட்டில் தன் தோழியைப் பார்க்கச் சென்றிருந்தாள். போய்த் திரும்பும் பொழுது அங்கிருந்த ஒரு பெண் தன் தாயாரைப் பார்த்து 'அம்மா பங்கஜம் பூ வச்சக்கலாமோ' என்று சொல்ல 'அவள் சிறுசுதானே. என்ன செய்கிறது. அவள் அழுதிருப்பாள். அதற்காக வைத்திருக்கிறாள். என்ன வைத்தால்தான் என்ன. வாசனையில்லாத பூவாய்ப்போச்சு' என்று சொல்ல அதற்குப் பெண் 'என் அம்மா இனிமேல் அவள் நம்முடைய பாட்டியைப் போல் வெள்ளைப் புடவை கட்டிக்கொள்ள வேண்டுமாமே. அடுத்தாத்து சுப்பு சொன்னாள்' என்றாள். உடனே அவளுடைய தாயார் 'போதும் வாயைமூடு' என்று அதட்டினாள். இதைக் கேட்டுக்கொண்டே வந்த பங்கஜம் தன் தாயாரிடம் அவர்கள் பேசியதைத் தெரிவித்து 'என் அம்மா! அப்படியெல்லாம் நான் இருக்கவேண்டுமா?' என்றாள். அதற்குக் கல்யாணி என்ன பதில் சொல்லுவாள், பெரிதாக அழ ஆரம்பித்தாள்.

'அடி பங்கஜம்! உனக்குச் சிறுவயதில் கல்யாணம் செய்வதில் உன் தகப்பனாருக்குக் கொஞ்



சங்கூட இஷ்டமில்லை; பாவி நான்; என் வாக்கில் சனி இருந்தது. என்னால் நீ இக்கதிக்குள்ளானாய். அவன் இறந்தது முதல் இன்னும் அவர் படுக்கையை விட்டு எழுந்திருக்கவில்லை. நான் என்ன செய்வேன் பங்கஜம்; அநேகமாய் சில நாளில் இறந்து விடுவேன், என்னை நீ தூஷிக்காதே. நீ இந்நிலைமையை அடைய நான் தான் காரணம். நீ இருக்கும் நிலைமையையும், உன் தகப்பனார் இருக்கும் ஸ்திதியையும் நினைக்க எனக்கு இருக்க நீதியில்லை என்பிராணன் அநேகமாய்ப் போய்விட்டது. அவர் கூப்பிட்டாலும் பேசுவதில்லை. ஆகாரமும் சரியாய்ச் சாப்பிடுவதில்லை. அவர் உயிர் இருக்கும்பொழுதே நான் போய்ச்சேரவேண்டும். இப்பொழுது இருக்கும் மாதிரி தற்கொலை செய்து கொண்டாலும் தகும். ஆனால் இரண்டு காரணங்களைக்கொண்டு அப்படிச் செய்ய இடந்தரவில்லை. என்னவென்றால், ஒன்று, உன்னை இக்கதியில் தனிமையாக விட்டுச்செல்ல மனதில்லை. மற்றொன்று, தற்கொலை மகா பாதகமென்று பெரியோர்கள் சொல்லுவார்கள். நான் போன ஜன்மத்தில் என்ன பாபம் செய்தேனோ, இந்த ஜன்மத்தில் நீ இக்கதியாயிருந்து பார்த்து வயிறெரிந்து கொண்டிருக்கிறேன். தற்கொலையும் செய்து இன்னும் பாபமூட்டையைச் சுமப்பதற்கு இஷ்டமில்லை, என்றாலும் என் உடம்பு இருக்கும் மாதிரி இன்னும் இரண்டொரு மாதத்திற்குக்கூடத் தாங்காது. உன்னைத் தனியே விட்டு எப்படிப்போவேனோ?' என்று அழுதாள்.

அப்பொழுதுதான் பங்கஜத்திற்குத் தன் தற்கால நிலைமை கொஞ்சம் தெரிந்தது. தெரிந்து என்ன செய்வது? அவள் தன் தாயாரைப் பார்த்து 'அம்மா! நம்மாலாவது ஒன்றுமில்லை, எல்லாம் ஈசன் செயல். உன்னாலென்றும் என்னாலென்றும், நீ செய்தாயென்றும் நான் செய்தேனென்றும் சொல்வது பிசகு. எதுவும் அவா[illegible] தலை விதிப்படித்தான் ஆகும். அன்று எழுதியவன் அழித்தெழுதப் போவதில்லை. நீயும் இப்படி வருத்தப்பட்டு, அப்பாவும் படுத்த படுக்கையாக இருந்தால் கடைசியில் என் கதி என்ன?' என்றாள். இப்படி அதிக துக்கத்துடனேயே ஒருமாதமாயிற்று. கல்யாணியும் படுக்கையில் வியாதியாக விழுந்தாள். பங்கஜத்தின் பாடுதான் திண்டாட்டத்தில் வந்தது. பெற்றோர்கள் இருக்கும் நிலைமையைத் தஞ்சாவூரில் இருக்கும் தன் அத்தையாகிய மாமியாருக்குக் கடிதம் எழுதினாள். அவளும் அவள் புருஷன், குழந்தைகளும்தங்கள் கஷ்டங்களைக்கூடப்பாராட்டாமல் வந்தார்கள். வந்துபார்க்க, தன் பிள்ளை போனதுகூடப்பெரிதல்ல; கல்யாணி, நாராயணசாமி அய்யர் இருக்கும் நிலைமையும், பங்கஜவல்லி படும் வேதனையும் பார்க்க சகிக்கவொண்ணாது துக்கத்திலாழ்ந்தார்கள். டாக்டரைக் கூப்பிட்டுப் பார்த்தும் பலனில்லை. தேகவியாதிக்கு மருந்துண்டு. மனோவியாதிக்கு மருந்தேது? இப்படியே பத்துநாளிருந்து மனவேதனையினாலேயே கல்யாணி அம்மாள் இவ்வுலகைவிட்டு நீங்கினாள். இந்த சமாசாரம் காதில்விழுந்த தட்சணமே நாராயணசாமிஐயர் 'ஐயோ! அவள் மிகவும் நல்லவளாயிற்றே? அவளும் போய் விட்டாளா?' என்றுசொல்லி மனது ஏங்கி, மூன்று நாளைக்கெல்லாம் அவரும் இப்பூலோக வாழ்வை விட்டுப் போய் விட்டார். அப்பொழுது, பங்கஜவல்லி பட்ட துயரம் சொல்லி முடியாது. கணவனிறந்தபொழுது அவள் சிறியவளாயிருந்தபடியால் ஒன்றும் தெரியவில்லை. இப்பொழுது கணவனிறந்த துக்கமும், பெற்றோர்கள் போன துக்கமும் சேர்ந்து அவளை வாட்டிற்று. மாமனார், மாமியார் இருவரும் தங்கள் துக்கத்தைக் காட்டிலும், தன் நாட்டுப் பெண் துக்கத்தைச் சகிக்கமாட்டாமல், அவளுக்கு வேண்டிய ஆறுதல்களைச் சொல்லிக் கொண்டு வந்தார்கள். இருவர் காரியங்களும் ஆன பிறகு, பங்கஜவல்லியைத் தஞ்சாவூருக்கு

அழைத்து வந்து, தங்களிடத்தில் அதிக அன்பும் ஆதரவுமாக நடத்தி வந்தார்கள். தம் பிள்ளைக்குப் பிறகு அவளையே பிள்ளையாக பாவித்து, அவளுக்கு அநேகவித ஆறுதல்களைச் சொல்லி வந்தார்கள். நாராயணசாமி அய்யர் சொத்து பூராவையும் விற்று பாங்கில் போட்டு வைத்தார்கள்.

பங்கஜவல்லியின் பொழுது போக்குக்காக ராமாயணம், பாரதம், பாகவதம் முதலிய பக்தி ரசம் பொருந்திய கதைகளை வாசிக்கச்சொல்லி வாங்கிக் கொடுத்திருந்தார்கள். அவள் சில சமயங்களில் தற்கொலை செய்து கொள்ள முயற்சிப்பாள்; மறு நிமிஷம் அது மாறிவிடும். ஏனெனில் தற்கொலை மகாபாதகமென்று தான் வாசித்ததில் தெரிந்து கொண்டதாலும், தன்னை ஒரு குறைவுமில்லாமல் நடத்திவரும் மாமன், மாமியினுடைய அன்பினாலுமே. ருக்மணியும், விசாலமும். பள்ளிக்கூடம் போவதை நிறுத்தி விட்டபடியால், அவர்களிருவரும் இவளுடன் சேர்ந்து வாசிப்பதும், தெரியாதவைகளைச் சொல்லிக்கொள்வதுமாக இருந்தார்கள். அவர்களுக்குக் கலியாணம் செய்ய வேண்டிய வயது வரவே, இரண்டு பேருக்கும் தகுந்த வரனை நிச்சயித்து, கலியாணம் நடத்தினார்கள். பங்கஜவல்லி மிகுந்த சந்தோஷத்துடன் 'நாம் தான் அதிர்ஷ்டமில்லாமற் போனோம்; இவர்களாவது தீர்க்கசுமங்கலிகளாக இருக்கட்டும்' என்று அடிக்கடி சொல்லுவாள். இப்படியே அவளுடைய பொழுது போய்க் கொண்டு வந்தது.

நேயர்களே! பால்யத்தில் விவாகம் செய்வதில் பலன் பார்த்தீர்களா? ஒரு நல்ல குடும்பமே வீணாகப் போய் விட்டது. 'பால்யத்தில் விவாகம் செய்த பேர்களெல்லாம் விதவையாய்ப் போய் விடுவார்களா?' என்று கேட்கலாம். நன்றாய் இருந்தால் தான் நல்லதாகப் போய்விட்டது. இல்லாவிட்டால் எவ்வளவு கஷ்டம் பார்த்தீர்களா? உலகில் நூற்றுக்கு எழுபத்தைந்து பாலிய விதவைகளாகத் தானிருக்கிறது. ஆகையால் கூடியவரையில் பெண்களுக்குத் தகுந்த வயது வந்த பிறகு விவாகம் செய்வது தான் நல்லது.

சுபம்.

# விருந்தோம்பல்.

(கோமதியப்பன் எழுதியது.)

"இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு."

என்ன அற்புத மொழிகள்! 'மனைத்தக்க மாண்புடையளாகித் தற்கொண்டான் வளத்தக்காள்' ஆக விளங்கும் பெண்மணியை வாழ்க்கைத் துணையாகக் கொண்டு 'அறிவறிந்த மக்கட் பேறு' ஆகிய பெரும்பேறு உற்று அறன் வழி நின்று அன்பு பூண்டொழுகும் மகத்தான இல்லறத்தில் இருந்து பொருளோம்பி வாழ்வதெல்லாம் எதற்காக? விருந்தினரை உபசரித்து வேளாண்மை (உபகாரம்) செய்வதன் பொருட்டுத்தான். ஆதலின் இல்வாழ்க்கை ஏனைய லட்சணங்களை எல்லாம் இனிது பொருந்தி விளங்கினும் விருந்தோம்பலைப் பெறுததாயின், அது பயனற்றதாகும். ஆனால் சாதாரணமாகத் தற்போது நமது நாட்டு இல்லற வாசிகள் தக்க மனைவியரையும், தக்க கணவரையும் கொண்டிருத்தலிலும், பொருளீட்டலிலும், புதல்வரைப் பெறுதலிலும் தங்கள் கவலையெலாஞ் செலுத்தித் தங்கள் நலம், தங்கள் மக்கள் நலம் இவற்றையே நாடிய சிந்தனையினராக இருக்கின்றனரேயன்றி விருந்தோம்பலின் அவசியத்தையும் மகிமையையும் உண்மையாக உணர்ந்து அதனை மேற்கொண்டொழுகுவதால் உண்டாகும் ஒரு இன்பத்தை, ஒரு திருப்தியை அனுபவிப்பார் சிலரேயாவர். ஆடிக்கொருமுறை அமாவாசைக்கொருமுறை அபூர்வமாய் வரும் தடுக்கக்கூடாத விருந்தினருக்கு விருந்திட்டதால் செலவு அதிகமாயிற்று என நினைத்து நினைத்துக் கணக்கிட்டுக் கணக்கிட்டு மனமுளையும் மாதர்களும் புருஷர்களுந் தான் அதிகமாயிருக்கிறார்கள். 'போனமாதம் அந்தப் பாழும் விருந்தாளி வராவிட்டால் எனக்கு ஒரு பேஸரி மூக்குத்தியாவது குழந்தைக்கு ஒரு காப்பாவது செய்திருப்பேனே!' என்பனவாதிய ஏக்கம் குடும்பங்களில் சாதாரணம்.



பொதுவாகத் தற்போது நாட்டில் ஏழைமை மிகுந்திருக்கிறதென்பது மெய்யே. ஆனால் சகோதரி சகோதரர்களே! தினந்தினம் வந்த விருந்தை ஓம்புவார்கள் வாழ்க்கை வறுமையால் வருந்திப் பாழ்படுவதில்லை என்றும், இனிய முகத்துடன் நல்விருந்து ஓம்புவார்கள் இல்லத்தில் லக்ஷ்மீதேவி எப்பொழுதும் மனமகிழ்ந்து வசித்துக்கொண்டிருப்பாள் என்றும், விருந்தினரைத் திருப்தி செய்தபின் மீந்திருக்கிற உணவை உண்பானுடைய விளை நிலத்திற்கு வித்தும் இடல் வேண்டுமோ! (வித்து இடாதிருந்தாலுங்கூட அது செழிப்பாக விளைச்சல் கொண்டு பயன் தரும் மகிமை பொருந்திவிடும்) என்றும், திருக்குறள் என்ற தெய்வ நூலிற் கூறியுள்ள கருத்துக்கள் வெறுமனே அலங்காரமாகச் செய்யப்பட்டிருக்கின்றன என்று நினைக்கிறீர்கள்! அன்று, அன்று. அவை மகத்தான உலகியற் சத்தியங்கள் என்று உள்ளத்தில் உறுதியாக உணர்வீர்களாக. ஆதலின் விருந்தோம்பல் என்னும் உயர்ந்த கடமையைப் புறக்கணித்துப் பொருளை மீதப்படுத்திச் சேர்த்து வாழலாம் என்று எண்ணுவது முழு மடமையும் கேட்டிற் குரியதுமாகும். சிக்கனமும் செல்வச் சேர்க்கையும் அவசியந்தான். ஆனால் சிக்கனத்திற்குரிய உண்மையான வழிகளைக் கொண்டு அறத்தைக் கடைப்பிடித்தொழுகுவீர்களானால் செல்வம் தானே சேருமே. விருந்தினரை ஓட்டித் தங்கள் சொந்த வயிறுகளையும் அரை விருந்தினராகக் கருதி, அரை வயிற்றுக்கு உண்டு பல வருஷங்களாக எச்சிற் கையால் காகம் ஓட்டாது மிச்சம் பிடித்த மொத்தத் தொகையோடு மேற்கொண்டும் கடன் வாங்கியும், கலியாண முதலிய விசேஷங்களுக்கு ஆயிரக்கணக்காக வீண் செலவு செய்தலை நிறுத்திச் சீர்திருத்துவதில் சிக்கனத்தைச் செலுத்தக்கூடாதா! பிச்சைக்காரன் முதல் பிரபுக்கள் வரையில் நமது சமூகத்தை வசப்படுத்திவிட்ட உபயோகமற்றதும் நீரிழிவு முதலிய கசுமால ரோகங்களை விளைவிக்கக்கூடியதுமாகிய காப்பிப்பானத்தை நிறுத்தல், பிராணிவதைக்கும் பெரும் பொருட் செலவிற்கும் உரிய மாமிச உணவை அகற்றல், அனாவசியமாய்த் தங்கள் வாயிற்குச் சற்றுந் தகாததாய் நினைத்த பொழுதெல்லாம் பலவகைப் பட்சணங்கள் செய்து வயிறு புடைக்க உண்ணுதலை ஒழித்தல் ஆகிய இவைகளில் சிக்கனத்தைச் செலுத்தக்கூடாதா! இன்னும் சிக்கனத்தைச் செலுத்தக்கூடிய விஷயங்கள் எவ்வளவோ இருக்கின்றன. அவைகளை விட்டுவிட்டு இல்வாழ்க்கைக்கு இன்றியமையாததாய் விதிக்கப்பட்ட விருந்தோம்பலை விலக்குதலினாலோ சிக்கனந் தேடவேண்டும்! கலியாண முதலிய விசேஷங்களுக்கு ஏராளமாய்ப் பொருளைச் செலவு செய்யவேண்டும் என்றும், காப்பிப்பானம், புலாலுணவு, பேருண்டி முதலியவை

வாழ்க்கைக்கு அவசியம் என்றும் எந்தத் திருக்குறளில் அல்லது வேறு எந்த நூலில் சொல்லப்பட்டிருக்கிறது? ஆனால் ஜனங்கள் இவற்றை அவசியத்திலும் அவசியமாகக் கொண்டு போற்றி, திருக்குறளில் உறுதி உரைக்கப்பட்டிருக்கிற தங்கக் கட்டளைகளை அலட்சியம் செய்கின்றனர். என்ன ஞானம்! என்ன ஞானம்!

இனி, விருந்தினர் என்பார் யாவர் என ஆராயின், "தென்புலத்தார், தெய்வம், விருந்தினர், சுற்றத்தார், தான் ஆகிய ஐவகையோரை உபசரித்தல்களிலே முன்னவையிரண்டும் கண்ணிற் காணப்படாதவரை நினைத்துச் செய்யப்படுவனவாதலானும், பின்னவையிரண்டும் பிறர்க்குக் கொடுத்த லல்லாமையாலும் நடுநின்ற விருந்தோம்பல் சிறப்புடையதாகி அவ்வில்லறங்கட்கு முதலாயிற்று" என்றனர் உரையாசிரியர் பரிமேலழகர். ஆதலின், சுற்றத்தார் அல்லாத பிறமானிடரே விருந்தினர் என்பது தெளிவாகின்றது. தனக்குப் பிரதிதினமும் உண்டி முதலிய உபசரணைகளும் சௌகரியங்களும் அமைத்துக்கொள்வது எவ்வளவு சாதாரணமோ, அப்படியே சுற்றத்தாரை உபசரித்தலையும் கருதிவிட்டார்கள் நமது முதியோர்கள். தற்காலத்திலோ மிக நெருங்கிய உறவினரை எப்போதாவது இரண்டொரு நாள் உபசரிப்பதே விருந்தினர் உபசரணையாகக் கொள்ளப்படுகின்றதன்றி, சுற்றத்தார் அல்லாதோராகிய அதிதிகள் என்னப்படும் உண்மையான விருந்தினரை உபசரிப்பது அத்தி பூப்பதாய்விட்டது. தன் கண்ணுக்குக் கண்ணாக வளர்க்கப்பெற்ற தன் சொந்தப் புத்திரியும் அவளை மணந்த தன் மருமகன் என்னத்தகும் மருமகனுங்கூட தன் வீட்டில் மூன்று நாளுக்குமேல் தங்கியிருந்தால் அவர்கள் மரியாதை இழக்கும்படிதான் நடந்து கொள்ள நேரிடும் என்பது இல்லறவாசிகள் இனிய கொள்கையாய்விட்டது. வந்த விருந்தினர் புறத்திருக்க, சாவா மருந்தாகிய தேவாமிர்தமாயினும் தானே உண்ணக்கூடாது என்று திருவள்ளுவர் தெரிவித்திருக்க, அயலகத்துக் குழந்தை, சில சமயம் தன் சொந்தக் குழந்தை, எதிரே தன்னைப் பார்த்து நிற்க, அவர்கள்முன் இருந்தாவது அல்லது மறைந்த விடந் தேடியாவது உண்ணும் உத்தமர்களும் உளர். தற்போது நிலைமை எப்படியிருந்த போதிலும் பிரதிதினமும் ஒரு அதிதிக்காவது விருந்தளித்து உபசரிக்கவேண்டியது இல்வாழ்க்கைக்கு இயைந்தது என்றும், சுற்றத்தாராயினும் பிறரேயாயினும் அடுத்து வந்தாரை ஆதரித்து உபசரிக்கவேண்டியது அத்தியாவசியம் என்றும், அப்பொழுதுதான் இல்லத்திற்கும் நாட்டிற்கும் செழிப்பும், இம்மை மறுமையில் வாழ்க்கைக்கு மெய்யின்பமும் உறுதிப் பயனும் ஏற்படும் என்பது எனது துணிபு.

விருந்தினருக்குச் செயலாகும் உபசரணைகளை விரிவாக நமது பழைய நூற்கள் பகர்கின்றன. முக்கியமாய் ஈசுவர அடியார்களாகிய அதிதிகளுக்குச் சோடச உபசாரம் என்ற பதினாறு வகை உபசரணைகள் செய்ய வேண்டுமென்றும் கூறப்பட்டிருக்கின்றது. அவைகளைப்பற்றியெல்லாம் இப்பொழுது நான் எடுத்துக் கூறாமல் தற்கால உபசரணை விஷயத்தில் யாவரும் அனுசரிக்கக் கூடிய இரண்டொரு விஷயங்களைச் சொல்லிவிட்டு எனது சிற்றுரை வியாசத்தை முடித்து விடுகின்றேன்.

"மோப்பக் குழையு மனிச்ச முகந்திரிந்து நோக்கக் குழையும் விருந்து" என்ற அருமைத் திருவாக்கு நேயர்கள் அனைவரும் கேட்டிருக்கக் கூடியதே. ஆகவே விருந்தோம்பலின் முக்கிய லட்சணம் முகமலர்ச்சியேயாம். விருந்தினர் எத்தகையோராயினும் பிறவீட்டிற்கு உண்ண



வந்திருப்பவர் ஆதலின், தமக்கு விருந்தளிப்போர் முகத்தில் சிறிது வாட்டமிருந்தாலும், அது தமது வருகையால் நேர்ந்தது என்று லஜ்ஜையுற்று மனம் வருந்துவர். அவ்வாறு அவர் வருந்த விருந்தளிப்பதிலும் சும்மாவிருப்பதே உசிதமானது. விருந்தளிப்போர்க்கு இருக்கவேண்டிய முகமலர்ச்சி அகபூர்வமான முகமலர்ச்சியாயிருத்தல்வேண்டும். விருந்தினர் எதிரில் பெரும் புன்னகையோடு முகமலர்ந்து இருந்து சமையலறைக்குச் சென்று, "வந்து தொலைந்து விட்டானே— என்ன செய்வது?—" என்றவாறு முகத்தைச் சுளித்துத் தன் மனைவியோடு முணுமுணு வென்று பேசுவது முற்றும் வெறுக்கத்தக்க இழிந்த செயலாம்.

விருந்தோம்பலின் பெருமையை உணர்ந்த உன்னதமான தகைமை கொண்ட புருஷோத்தமர்கள் நமது நாட்டில் ஒவ்வோரிடங்களில் உளர் எனினும் அன்னார்க்கு வாய்த்த மனைவியர் தங்கள் கணவர் பெரு நோக்கங்களுக்கு இசைந்தவாயில்லாமையால் அவ்வுத்தம புருஷர்கள் சித்த நலமெலாம் பயனின்றிப் பாழ்படுகின்றது. பெருங்குணமில்லாப் பேய் போன்ற பெண்ணொருத்தியை மனைவியாகக் கொண்ட தயாளசித்தமுள்ள அன்பன் ஒருவன் வீட்டில் ஔவை விருந்தினளாய்ச் செல்ல அப்பிராட்டியும் அவனும் அவன் மனைவியினால் பட்ட அவதிகளைப் பற்றிய கதை தமிழ் நாட்டில் சாதாரணமாக யாவரும் அறிந்திருக்கக்கூடியதே. ஆதலின் விருந்தினரைச் சரியாக உபசரித்தற்கு இல்லறத் தலைவனும் தலைவியும் மன மொத்திருக்க வேண்டியது அவசியம். அதுபற்றித்தான் இல்லற இயலில் "அன்புடைமை" என்ற அதிகாரத்திற்கு அடுத்ததாக "விருந்தோம்பல்" என்னும் அதிகாரத்தை வைத்தனர் திருவள்ளுவரும். தலைவனும் தலைவியும் முதிர்ந்த அன்பினும் பக்தமுற்று மன மொத்திருந்தாலன்றி இல்லற தருமங்கள் எதுவும் சரியாக நடைபெறுதென்றால் அவற்றில் முக்கியமானதாகிய விருந்தோம்பல் எவ்வாறு நடைபெறும்? முக்கியமாய் நமது நாட்டுப் பெண்களுக்கு உயர்ந்த கல்வியறிவும் விசாலித்த நோக்கங்களும் இருந்தால், பெண்பாலிடத்து இயற்கையாக உள்ள வசீகர சக்தியினால் அவர்கள் தங்கள் கணவரிடம் இதமாகப் பேசிப் பழகி விருந்தோம்பல் முதலிய தக்க நல்ல கருமங்களுக்கு அக்கணவரை இணங்கச்செய்துவிடுவார்கள். மனைவியே சற்கருமங்களிலிருந்து வக்கிரம் கொண்ட உக்கிரப் பிசாசாய் இருந்தால் அவள் மனத்தைத் திருப்பல் அவள் கணவனாலும் இயலாது, வேறு யாராலும் இயலாது.

முற்கூறியவாறு மனமொத்த இல்லறத் தலைவனும் தலைவியும் அக முக மலர்ந்து இன்சொற்கள் பல கூறி விருந்தினர்களுக்கு இருக்கை வசதி, ஸ்நான வசதி, பூஜை வசதிமுதலிய பலவிதச் சௌகரியங்களும் நன்கமைக்க வேண்டும். எப்பொழுதும் வீட்டுத் தலைவியே தன் கையால் போஜனம் பரிமாறல் வேண்டும். வேலைக்காரிகளையும் குழந்தைகளையும் விட்டுப் பரிமாறச்செய்வது மரியாதையன்று. பரிமாறும் பெண்கள் போஜன பண்டங்களை விருந்தினர்க்கும் வீட்டுத் தலைவருக்கும் சமம் சமமாகப் பரிமாற வேண்டும். விருந்தினருக்கு அதிகமாகவும் வீட்டினர்க்குக் கொஞ்சமாகவும் வைத்தலும் அல்லது அதற்கு மாறாக வைத்தலும் கூடாது. விருந்தளிப்போன் விருந்தினர் உண்பதைக் கவனித்துக்கொண்டேயிருந்து அவர் உண்ணும் நியதிக்குத் தக்கவாறு தான் உண்ணவேண்டும். அதாவது, அவர் துரிதமாய் உண்டால், அல்லது பைய உண்டால், அவ்வாறேதான் தானும் உண்டு விருந்தினரோடு கூடவே தன் போஜனத்தை முடிக்க வேண்டும். அவருக்கு முன்பாகச் சீக்கிரத்தில்

தனது போஜனத்தை முடித்தலும் கூடாது. அவர் போஜனத்தை முடித்ததும் தனது உண்ணலை ஒழிக்காமல் அவரைக் காத்திருக்கச்செய்வதும்கூடாது. பரிமாறுகிறதலைவியும்விருந்தினர் உண்பதைக் கவனித்துக் கொண்டேயிருந்து அவர் உண்ணுந் தன்மையினால் அவருக்குப் பிரியமான பதார்த்தங்கள் இவையிவையெனக் குறிப்புணர்ந்து அவைகளை அவருக்கும் தன் கணவருக்கும் மேன்மேலும் வைக்கவேண்டும். விருந்தினர் வேண்டாம் வேண்டாமென்று மிக வற்புறுத்தித் தடுத்தாலும் அன்னத்தையும் மற்றக் கறிவகைகளையும் அதிகமாக அவர்களுக்கு வைக்கும் துர் வழக்கம் சில பெண்களுக்கு உண்டு. வைத்தவைகளை விணுக்கித் தள்ளுவது மரியாதையன்று என்று நல்ல விருந்தினர்கள் பலர் அளவுக் கதிகமாகத் தமக்கு வைக்கப்பட்டவைகளைக் கஷ்டத்துடன் புசித்தே தீருகிறார்கள். அறிவற்ற பெண்ணாகிய தன் மனைவி அவ்வாறு அளவிற் கதிகமாக விருந்தினருக்கு அமுது முதலியன படைத்துவிட்டால், வேண்டப் படாததை இலையில் வைத்து விடும்படி விருந்தினருக்கு வீட்டுத்தலைவன் இதமாகச் சொல்ல வேண்டும். விருந்தினர் இலையில் அன்னம் இல்லாதிருக்கிற வரையில் சுவர் போல் நின்று விட்டுப் பின்னர் சாதப் பாத்திரத்தை எடுத்துக்கொண்டு சாதம் கொண்டுவரச் சமையலறைக்குச் சென்று, விருந்தினர் வெறும் இலையோடு காத்திருக்கும்படி செய்யும் மந்தப் பெண்களும் இருக்கிறார்கள். உண்ணுவோர்க்கு ஒரு குறைவுமில்லாதிருக்கிற சந்தர்ப்பம் பார்த்து உடனே சமையலறைக்குப் போய்ப் பாத்திரங்களில் குறைவுபட்ட பதார்த்தங்களைக் கொண்டுவந்து வைத்துவிடவேண்டும். இலை போட்டு நீர் தெளித்தவுடன் இலையில் உப்பும் அருகில் சுத்த ஜலமும் வைக்க ஒருபோதும் மறக்கக்கூடாது. முக்கியமாய் ஜலம் வைக்கப்பெறாமல், விருந்தாளிகள் பின்னர் தாகஅவஸ்தையால் வருந்தித் தண்ணீர் கொண்டுவரும்படி வீட்டு அம்மணியைக் கேட்டே வாங்கிப் பருகுவதைப் பல முறை நான் பார்த்திருக்கிறேன். உண்போர் போஜனம் முடிப்பதற்கு முன்னமே, கை கழுவத் தண்ணீரும், பின்னர் தரிக்கத் தாம்பூலாதிகளும் சித்தஞ் செய்திருக்க வேண்டியது தலைவியின் கடமை.

விருந்தினர் உண்ட இலையை அவர்களே எடுத்து வெளியில் எறியச் செய்விக்கும் மிருகத்தனமான வழக்கம் நமக்குள் பல விடங்களில் உண்டு. எக்காரணத்தாலேனும் விருந்தினர் உண்ட இலையை எடுத்தெறியத் தலைவிக்கு மனமில்லையாயின், விருந்தினர் உண்டபின் அவர் அறியாமல் ஒரு கூலியாளைக் கொண்டாவது இலையை எடுத்தெறிவிக்க வேண்டுமேயன்றி, விருந்தினர் பெண்பாலாயிருந்தாலும், அல்லது வேறு எக்காரணத்தை முன்னிட்டும் அவர்களை இலையெடுத்துப் போடும்படி செய்விக்கவே கூடாது.

பெண் விருந்தினர் வர நேர்ந்தால் அவளுக்கு விருந்தளித்துத் திருப்தி செய்வித்த பின்னர் வீட்டுத் தலைவி உண்பது முறையாகும். ஆனால் பரிமாறப் புத்திரியாவதுவேறு யாராவதுஇருந்தால் தலைவியும் விருந்தினளோடு கூட இருந்து புசிப்பது தவறாகாது.

சுருங்கச் சொல்லில், விருந்தினர் தங்கள் சொந்த வீட்டில் இருந்தால் சங்கோசமின்றி எவ்வளவு திருப்தியாய் உண்பரோ அவ்வாறே உண்டிருக்கும்படி சமயோசிதமாக வேண்டிய உபசாரணைகள் அனைத்தும் புரியவேண்டியது இல்லற வாசிகள் கடமை.

"பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவலகால வகையினானே" என்பதுஎனக்குப் பிரியமான முதுமொழி. ஆயினும் பழைமையிலும் புதுமையிலும் உள்ள நலங்களையெடுத்துக் கொண்டு, பயனற்றவைகளையும் தீங்கை விளைவிப்பனவற்றையும் உதறி ஒழித்துவிட வேண்டும். ஆதலின் விருந்தோம்பல் என்னும் இல்லற தருமத்தின் மகிமையையும் அவசியத்தையும் பற்றி முன்னோர் வற்புறுத்தியதைக் கூறி விருந்தினரை உபசரிப்பதற்குக் காலத்திற்கேற்றவாறு அனுசரிக்க வேண்டிய எனக்குத் தோன்றிய சில முறைகளையும் எடுத்துரைத்தேன். இவைகளை அங்கீகரித்து நேயர்கள் அவ்வாறே ஒழுகி வருவார்களாயின், நான் அதையே ஒரு பெரிய விருந்தாகக் கொண்டு மகிழும் ஒரு விருந்தினன் ஆவேன்.



# மைசூர் மகாராஜாவின் வர்த்தந்தி மகோத்ஸவம்.

(ஸ்ரீமதி S. R. ஜயம்மாள்.)

எழும்பூரில் ஹைகோர்ட் வக்கீல் ஜி. ராமசந்திர அய்யர் சம்சாரம் கமலவல்லியம்மாள் தன் பங்களாவில் நடுக் கூடத்தில் (Drawing hall) மத்தியானம் சுமார் 4 மணிக்கு (அன்று ஞாயிற்றுகிழமை யாதலால்) சாவகாசமாய்த் தன் பெண் லீலாவதிக்குத் தலை பின்ன உட்கார்ந்தாள். அவள் அருகில் தலைபின்னுவதற்கு வேண்டிய தைலம், சீப்பு, பூ முதலியவைகள் அணியாய் வைக்கப்பட்டிருந்தன.

கமலவல்லியம்மாள் பெண்ணுக்குத்தலைவாரிக் கொண்டே, "லீலா! நேற்றயதினம் மாலதி பள்ளிக்கூடத்திற்கு வந்திருந்தாளா?" என்று வினவினாள்.

லீலா, "ஏனம்மா? வந்திருந்தாளே" என்றாள்.

கமலம், "அவள் தாய் போன புதன்கிழமை கிளப்பில் என்னைக் கண்டபொழுது இந்த வருஷம் வெய்யிற் காலத்திற்கு அவர்கள் நீலகிரிக்குப் போவதாய்ச் சொன்னாள். அதைப் பற்றி உன்னிடம் மாலதி ஏதாவது சொன்னாளா?" என்றாள்.

லீலா, "ஆமாம், அம்மா. அவர்கள் நீலகிரிக்குப் போய், அங்கிருந்து நாம் போன வருஷம் மைசூர் மகாராஜா வர்த்தந்தி பார்க்க மாமா வீட்டுக்குப்போயிருந்தோமே, அதுபோல அவர்களும் போகப் போகிறார்களாம்" என்று சொல்லிக்கொண்டிருக்கும்பொழுதே அவள் தம்பி முகுந்தன் வாசலில் விளையாடிக்கொண்டிருந்தவன், "அம்மா, இங்கா மாமி, மாதி அக்கா எல்லாம் குதுரே வண்டிலே வந்துக்கா," என்று மழலைச் சொற்களில் சொல்லிக்கொண்டு வந்தான்.

கமலம், "அத்திப்பூ பூத்தாப் போல் அதிசயமாய் வீட்டிற்கு வந்தீர்களே, என்ன விசேஷம்? வாருங்கள், உட்காருங்கள்" என்றாள்.

ரங்கம், "இல்லை, இன்னம் பதினைந்து நாட்களில் நாங்கள் நீலகிரிக்குப் போகப்போகிறோம். அப்படியே மைசூருக்கும் வந்து மைசூர் மகாராஜாவின் வர்த்தந்தி மகோத்ஸவத்தையும் பார்த்துவிட்டுப் போவென்று என் நாத்தனார் எழுதி இருக்கிறார். நீங்கள் வர்த்தந்தி பார்த்திருக்கிறீர்களே. எப்படி இருக்குமென்பதைக் கேட்டுவிட்டு, நன்றாயிருந்தால் போகலாமென்று உத்தேசித்து வந்தேன்" என்று சொல்லிக் கொண்டு உட்கார்ந்தாள்.

அதற்குள் சமையற்கார சுப்பன் "டீ ஆய் விட்டது. கொண்டு வரட்டுமா?" என்று வந்து கேட்க, கமலம் "கொண்டுவா, இவர்களுக்கும் கொண்டுவா. வராத மனுஷாள் வந்திருக்காள்" என்றாள்.

ரங்கம் "தேவலை, வேண்டாம். நாங்கள் இப்பொழுதுதான் வீட்டில் சாப்பிட்டுவிட்டு வந்

தோம்" என்று சொல்லிக் கொண்டிருக்க, சுப்பன் சில தின்பண்டங்களுடன் டீ கொண்டு வந்து வைத்தான்.

கமலம், "எல்லாம் தேவலை, தின்னுங்கள். ராத்திரி சாப்பாடு குறைந்து விட்டால் போகிறது. ரங்கம்! மைசூரில் மகாராஜாவின் வர்த்தந்தி எல்லோரும் பார்க்கவேண்டியதுதான். மிகவும் நன்றாகத்தான் இருக்கிறது. வர்த்தந்தி சமயத்தில் அந்த அரண்மனையில் விளக்கேற்றி இருக்கும் வேடிக்கையைப் பார்ப்பதற்கே ஆயிரம் கண்களிருந்தாலும் போதாது. எங்கு பார்த்தாலும் பூஞ்செடிகளைப் போலவும் மனுஷர்கள் உருவங்களைப் போலவும் விளக்கேற்றுகிறார்கள். அரண்மனையின் வெளிச் சுவர் முழுக்கவும் மல்லிகைப்பூ வைத்துத் தைத்தாப் போல் வித்யுத் சக்தி (Electric) தீபங்கள் போடுகிறார்கள். இரவில் மைசூருக்கு அருகே இருக்கும் சாமுண்டி மலையின் மேல் ஏறி, அங்கிருந்து மைசூரைப்பார்த்தால், அரண்மனை ஒரு ராஜனைப் போலவும் ஊர் விளக்குகள் பிரஜைகளைப் போலவும் காண்கின்றன" என்றாள்.

ரங்கம், "ஆனால் கொஞ்சம் விஸ்தரித்துச் சொல்லுங்கள், கேட்போம்" என்றாள்.

கமலம், "வர்த்தந்தி உத்ஸவத்திற்கு அந்த சமஸ்தானத்துப்பெரியபெரிய உத்தியோகஸ்தர்களையும் அந்த ஊர் உத்தியோகஸ்தர்களைமட்டும் சம்சாரசமேதமாயும் அழைப்புப் பத்திரிகைகளினால் அழைக்கிறார்கள். விருந்தாளிகளுக்கு அங்கங்கு விடுதிகள் (Guest quarters) செய்திருக்கிறார்கள்.

"வர்த்தந்தியன்று காலை நானும் என் மதனியும் எங்கள் குழந்தைகளுடன் புதிய துணிகள் உடுத்திக்கொண்டு, வண்டியேறி, அரண்மனை அந்தப்புரவாசலில் இறங்கி, அவர்கள் நிறுத்தி இருக்கும் ஒரு ஆளிடம் எங்கள் அழைப்புப் பத்திரிகைகளைக் காண்பித்து, அந்த வழியாய் மெத்தைக்குப் போய்ப் பெண்களுக்குக் குறிப்பிட்டிருந்த இடத்தில் போட்டிருந்த நாற்காலிகளில் உட்கார்ந்தோம்.

"கீழே கல்யாணமண்டபமென்று வழங்கும் பெரிய கூடம் இருக்கிறது. மகாராஜா ஒரு தங்க சிம்மாசனத்தில் வீற்றிருக்க எதிரில் அழைக்கப்பட்ட உத்தியோகஸ்தர்கள் தர்பார் ட்ரெஸ் என்ற உடுப்புகளை அணிந்துகொண்டும், அரசுகளென்று அழைக்கப்படும மகாராஜாவின் ஜாதி ஜனங்களும், மிலிடெரி உத்தியோகஸ்தர்களும், வைதிகர்களும் நின்றுகொண்டிருந்தார்கள்.

"அந்த சமயத்தில் வைதிகர்கள் மந்திரகோஷம் செய்ய, வாத்தியங்கள் முழங்க, ராஜாவின் குல குருவாகிய ஸ்ரீ பாகாலஸ்வாமி முன் இரண்டு யானைகளும், பத்துக் குதிரைகளும்வர, பின் இன்னும் சில வைலகர்கள் வர, பல்லக்கில் வந்திறங்கினார். மகாராஜா தன் குருவை ஆதாவுடனும் பயபக்தியுடனும் ஒரு தங்கத பீடத்தில் இருத்தி அவர் பாதத்தை ரூபாய்களால் நிறப்பிப் பணிவிடை செய்து, அவரிடம் ஆசீர்வாதம் பெற்று அவரை அனுப்பிவிட்டுத் தன் ஆசனத்தில் அமர்ந்தார்.

"உடனேவைதிகர்கள் ஒவ்வொருவராய்வந்து ராஜனை ஆசீர்வதித்தார்கள். பின் உத்தியோகஸ்தர்கள் பத்து பத்துப் பெயர்களாய் ராஜனின் முன் வரிசையாக வந்து நின்று நமஸ்கரித்தனர். பின் அரசுகளும், மிலிடெரி உத்தியோகஸ்தர்களும் அப்படியே செய்தார்கள். பின் சமஸ்கவிகள் வந்து ராஜனுக்கு முத்து, ரத்னம்இவைகளில் ஆரத்திகளை எடுத்து முடிக்க, ராஜனும் எழுந்துவிட்டார். தர்பாரும் கலையவே, நாங் வீடு வந்து சேர்ந்தோம். அதற்குள் மணி 12 அடித்தது.



"எல்லோரும்சாப்பிட்டுவிட்டுச் சிரமபரிகாரம் கூடச் செய்து கொள்ளாமல், உடனே தலை பின்னிக் கொண்டு கொஞ்சம் ஆகாரம் எடுத்துக் கொண்டோம். மணியும் இரண்டடித்தது.

"பின் எல்லோரும் மறுபடியும் புதிய துணிகள் உடுத்திக் கொண்டோம். அதற்குள் என் தமையன், "நாழியாய்விட்டது. அப்புறம்இடம் கிடைப்பது கஷ்டம். உங்களுக்கு மகாராஜாவின் ஊர்வலம் பார்க்க, சென்ட்ரல் போலீஸ் ஸ்டேஷனில் இடம் சித்தம் பண்ணி இருக்கிறேன்" என்று சொல்லிவிட்டுப் போய்விட்டார். உடனேநாங்கள்வண்டியில் ஏறிக்கொண்டு அங்கு போய் இறங்கினோம். ஒரு போலீஸ் ஆளுக்கு எங்கள் ஆள் நாங்கள் இன்னார் வீட்டு ஜனங்களென்று சொல்ல, அவன் எங்களை மாடியின் மேல் அழைத்துச் சென்று என் தமையன் பெயர் எழுதிய சீட்டுக்களை ஒட்டிய நாற்காலிகளில் உட்காரவைத்தான்.

"அதற்குள் எல்லோர்வீட்டுமாடியின்மேலும் கீழும் ஜனங்கள் கூடி இருந்தார்கள். தெருவுகளில் எள்ளுப் போட்டால் எள்ளுவிழாது. அவ்வளவு ஜனநெருக்கம். ஊர்வலம் மாலை 5 மணிக்கு ஆரம்பமென்றால், பகல் 12 மணியிலிருந்து கூட்டம் கூடி இருந்தார்கள். அங்கங்கு போலீஸ்காரர்கள் கைகளில் பெரிய பெரிய தடிகளை வைத்துக் கொண்டு, ஜனங்களை ஒதுக்கிக்கொண்டிருந்தார்கள். நவராத்திரியைப் போல் வர்த்தந்தியைப் பார்க்கவும் ஜனங்கள் நானா தேசங்களிலிருந்தும் வருகிறார்கள். இப்பொழுதும் Special ரெயில் வண்டிகளில் ஜனங்கள் கூட்டம் கூட்டமாய் வருகிறார்கள்.

"வீதிகளில் எங்கு பார்த்தாலும் தண்ணீர் தெளித்து நிர்மலமாயிருந்தது. எங்கெங்கும் பச்சை மாதளைத்தோரணங்களும், பந்தல்களும் அனேக வர்ணங்களில் ஜண்டாக்களும் கட்டி இருந்தன. ஒவ்வொரு கடைக்காரனும் தன் தன் கடையில் மகாராஜாவின் படம் ஒன்றை வைத்து அதற்கு விதவித அலங்காரங்கள்செய்திருந்தான். ஒவ்வொரு தெருவிலும் விற்பவர்கள் விளையாட்டு சாமான்கள் முதலிய அநேக சாமான்களை விற்றுக்கொண்டிருந்தார்கள்.

"மற்ற ஜனங்களெல்லாம் தங்கள்வண்டியின் மேலோ மோட்டாரின் மேலோ தெருவுகளில் அங்கங்கு நின்றுகொண்டு வேடிக்கைப் பார்க்கிறார்கள். அங்கங்கு சில ஜனங்கள் எங்கு நிற்பதென்று தெரியாமலோ, அல்லது வேடிக்கை பார்ப்போமென்றோ திரள் திரளாய்த் தெருவுகளில் போய்க்கொண்டிருந்தார்கள்.

"அங்கங்கு சில வீடுகளில் 4-5பெரிய உத்தியோகஸ்தர்கள் ஒரு உத்தியோகஸ்தனைத் தலைவனாய் வைத்துக்கொண்டு, பூமாலை, தூராய் முதலியவைகளை வைத்துக்கொண்டு மகாராஜாவிற்கு அளிக்க நின்றுகொண்டிருந்தார்கள். சில ஆட்கள் மகாராஜா வரும் வரையில் தெருவில் ஒரு குப்பையும் இராமல் சுத்தமாய் வைத்துக்கொண்டிருந்தார்கள்.

"அப்பொழுது ஒரு யானையின்மேல் அம்பாரியில் வாத்தியம்(Band) வாசிப்பவர்களும், அதன் பின் இரண்டு ஒட்டைகளுடன் வந்தனர். இவைகளைக் கண்டதுமே ஜனங்கள் ஊர்வலம் ஆரம்பமாய் விட்டதென்று சொல்லத் தொடங்கினர்.

"அதன் பின்னால் பச்சைச் சட்டை, சிகப்பு நிஜார் போட்டுக்கொண்டு ஒரு வகுப்பு சிப்பாய்கள், அதன் பின்னால் மஞ்சள் சட்டை, சிகப்பு நிஜார் போட்டுக் கொண்ட சிப்பாய்கள் முதலிய அநேகவிதம் உடைதரித்துக்கொண்ட அனேக சிப்பாய் வகைகள் நடந்துபோக, அவர்கள் பின் குதிரைகளின் மேல் அனேக வகுப்பு சிப்பாய்களும் போனார்கள். அவர்களின் நடு நடுவில் வாத்தியம் வாசிப்பவர்கள் வாசித்துக்கொண்டு போனார்கள்.

"அதன் பின் அரசுகளொன்று அழைக்கப்படும் ராஜன் ஜாதி ஜனங்கள் பெரிய பெரிய ஜரிகை மேல்வேஷ்டிகளைப் போட்டுக்கொண்டு வெளுப்புநிஜார்களையும், நீண்டகருப்புச்சட்டைகளையும் போட்டுக் கொண்டு அநேக வர்ணங்களில் சரிகைத்தலைப் பாகைகள்கட்டிக்கொண்டு இரண்டு யானைகள் கட்டி இழுக்கப்பட்ட ஒரு பெரிய வண்டியில் உட்கார்ந்து கொண்டு போனார்கள்.

"அதன் பின் உயர்ந்த அரண்மனைப்பல்லக்குகளும், பட்டத்துப் பல்லக்கு, பட்டத்து குதிரை, பட்டத்து யானை, பட்டத்து வண்டி, ஒட்டைகள், உயர்தரமான எருதுகள் கட்டி இழுக்கப்பட்ட பீரங்கி வண்டிகளும் போயின.

"அதன் பின் ஒரு குதிரை சைனியமும், அதன் பின் இரண்டு பெரியஉத்தியோகஸ்தர்கள் ஜரிகை வேலைசெய்த உடுப்புகளை தரித்துக் கொண்டு இரண்டு அழகிய குதிரைகளின் மேல் போக, மற்றஉத்தியோகஸ்தர்கள் கால்நடையாய் அவ்விருவரையும் பின் தொடர, அவர்களின் பின் ஒரு உயர்ந்த இங்கிலீஷ் வாத்திய(Band) செட்டு குதிரைகளின் மேலேயே வாசித்துக் கொண்டு போனார்கள்.

"அதன் பின் உயர்தரமான சில கருப்புக்குதிரைகள் தங்கள் முதுகுகளின்மேல் புலித்தோலினால் செய்த ஜீனிகளைப் போட்டுக்கொண்டு ராஜனை எப்பொழுதும் காத்துக் கொண்டிருக்கப்பட்ட சிப்பாய்களை (Body-guards) உட்காரவைத்துக் கொண்டு போயின. அதன் பின் இரண்டு கருப்புக் குதிரைகளுக்கு ஜரிகைப் பட்டு போர்த்தி, அவைகளின் மேல் மகாராஜாவும், அவர் தம்பி யுவராஜாவும் முழு ஜரிகை வேலை செய்த உடுப்புகளைத் தரித்து பத்து விரல்களிலும் வைரமோதிரங்கள் மின்ன, கழுத்தில் நானாவித ஆபரணங்களையும் பூமாலைகளையும் தரித்து, அநேக வித வைர ஆபரணங்களுடன் விளங்கினார்கள். இருவரும் தெருவில்நிறைந்திருக்கும் ஜனங்களுக்கு சிரசை அசைத்துக் கொண்டே, அங்கங்கு கொடுக்கும் பூமாலைகளையும் தாரய்களையும் சுவீகரித்துக்கொண்டு மிகவும் ஆனந்தத்துடன் போய்க் கொண்டிருக்க, ஜனங்கள் அவர்களின் மேல் புஷ்பங்களைப் பொழிய, தேவலோகத்திலிருந்து தேவேந்திரனே வந்திருக்கிறனோ என எண்ணங் கொள்ளுமாறு அவ்வளவு நன்றாக இருந்தது.

"மகாராஜாவின் பின் மறுபடியும் ராஜனை எப்பொழுதும் காத்துக் கொண்டிருக்கும் சில சிபபாயகள் (Body-guards) சில கருப்புக் குதிரைகளின் மேல் ஏறிக்கொண்டு ராஜனைப் பின்தொடர்ந்தார்கள். பின் சில காலாட் சைனியங்களும் யானைகளும் குதிரை சைனியங்களும் போயின.

"அப்புறம் எங்களை எங்கள் ஆள் அங்கிருந்து அந்த ஊர் கவர்ன்மெண்ட் ஹௌஸிற்கு ராஜன் அங்கு வருமுன் அழைத்துக் கொண்டு போய் எங்களுக்குக் குறிப்பிட்டிருந்த ஒரு மைதானத்தில் நிறுத்தியிருந்தான். சில நேரத்திற்கெல்லாம் மகாராஜா அவர் பரிவாரங்களுடன் அவ்விடம் வந்தார். அவருக்கும் அவர் பரிவாரத்திற்கும் சிற்றுண்டி, காப்பி, டீ முதலியவைகள் கொடுத்த பின், அங்கு வர்த்தந்திக் கென்றே பில், கல் முதலியவைகள் இல்லாமல் சுவச்சமாகச் செய்திருந்த ஒரு மைதானத்தில் மகாராஜா குதிரை மேல் வந்து நின்றார். அந்த மைதானத்திலும் அழகழகாய் வித்யுத்சக்தி தீபங்கள் ஏற்றி இருந்தனர். மகாராஜனின்முன் அவருடன் வந்த சைனியங்கள் எல்லாம் வரிசையாய் நின்றுகொண்டிருந்தன. சைனியாதிபதி ஒரு சமிக்ஞை செய்தவுடன் எல்லா சைனியமும் ஒன்றின் பின் ஒன்றாய் மகாராஜாவின்முன் இடது பக்கமாய் வந்து வலது பக்கமாய் நடந்து(March)ராஜனின் எதிரில் வந்தபொழுது



(Salute) செய்து முன்னிருந்த இடத்திலேயே போய் நின்றனர். பின் அந்த சைனியாதிபதி இன்னொரு சமிக்ஞை செய்யவே எல்லா சைனியங்களும் சேர்ந்து ஒரே சமயத்தில் குண்டுகளை வெடிக்க விட்டனர். இது மகாராஜாவுக்கு கௌரவார்த்தமாகச் செய்கிறதாம். அப்புறம் எல்லாம் மகாராஜனுடன் அரண்மனைக்குப் புறப்படவே நாங்களும் வீட்டுக்கு வந்து பழைய உடைகளைத் தரித்து சாப்பிட்டு விட்டு வெற்றிலை போட்டுக்கொள்ள உட்கார்ந்தோம்."

ரங்கம் "அத்துடன் வேடிக்கை யெல்லாம் ஆய்விட்டதா?" என்று வினவினாள்.

கமலம் "இல்லை. நாங்கள் வெற்றிலைபோட்டுக் கொண்டிருக்கும் பொழுதே, ஆள் வந்து இரவு ராஜா திரும்பிப் போவதைப் பார்க்க எங்களைத் திரும்பவும் இரவு 11 மணிக்கு சென்ட்ரல் போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்துக்கொண்டு போய் உட்காரவைத்திருக்கவேண்டுமென்று என் தமையன் உத்தரவளித்ததாகச் சொன்னான்."

ரங்கம் "ஆனால் ராஜன் திரும்பவும் அந்த வழியாகத்தான் செல்லுகிறாரோ?" என்றாள்.

"ஆமாம். எங்களை அந்த ஆள் என் தமையன் குறிப்பிட்ட நேரத்திற்குச் சரியாய் அவ்விடம் அழைத்துப்போய் உட்காரவைத்தான். நாங்கள் போய் உட்கார்ந்த கால் மணி நேரத்திற்குள் மாலை ஊர்வலத்தில் முதல் வந்த யானை தென்பட்டது. அப்பொழுது சென்ற பிரகாரமே ஊர்வலத்தில் யானை, குதிரை, சைனியங்கள் முதலியவைகள் இருந்தாலும் அதற்கும் இதற்கும் ஓர் பெரியவித்தியாசமுண்டு. திரும்பி வரும் பொழுது அநேக விதமான வித்யுத் சக்தி (electric) தீபங்கள் யானைகளின்மேலும், ஒட்டைகளின்மேலும், மற்றும் ஊர்வலத்தின் இருபக்கங்களிலும் கொண்டு போகும் பொழுது அந்தக் காட்சி கண்ணைப் பறித்துக் கொண்டு போயிற்று. மேலும் இவ்விதமான காட்சி நம் ஹிந்துஸ்தானத்தில் (ஆகையால் வேறெங்கும்கூட) எங்கேயும்கிடைக்காது. ஆதலாற்றான் இந்தக் காட்சியைப் பார்க்க அனேக தேசங்களிலிருந்து ஜனங்கள் வந்து கூடுகிறார்கள். வரவர ராஜன் அருகில் வரும் சைனியங்களுக்கெல்லாம் முன் ஜாஸ்தி விளக்குகள் கொண்டு வந்தனர். மகாராஜாவின் முன்னும் பின்னும் மகாராஜாவின் ஒரு பக்கம் தவிர மீதி மூன்று பக்கங்களிலும் மூடப்பட்ட நான்கு பெரிய விளக்குகளை (electric torch lights with powerful reflectors) எடுத்து வந்தனர்.

'இந்த விளக்குகளின் காந்தி ராஜனின் மேல் அதிகமாய் விழ, அவர்மேலிருக்கும் அஷ்ட ஆபரணங்களும் சூரியன் சமானமாயுள்ள அந்த விளக்குகளின் காந்தியில் தளதள வென்று மின்ன, புன்சிரிப்புடன் கமலத்தில் உதித்த பிரமனோ என்னுமாறு மிக்க அழகுடன் மகாராஜன் தோன்றினார். பின் முதல் போலவே எல்லா சைனியங்களும் போயின. இப்பொழுதும் அந்த ஜனநெருக்கத்தை ஆதிசேஷனின் அந்தஎழு வாய்களாலும்சொல்ல சாத்தியமில்லை" என்று சொன்னாள்.

ரங்கம் "அப்புறம் வீட்டிற்கு வந்து விட்டீர்களா?" என்று கேட்க,

கமலம் "இல்லை. அரண்மனையின் கோட்டை வாசலின் முன் இந்த ராஜாவின் தந்தை சாமராஜ ஒடையாரின் உருவத்தை வெள்ளைச் சலவைக் சிலையில் ஒரு பிரதிமை செய்து நிறுத்தி அதற்கு ஒரு அழகிய மண்டபம் கட்டி, அந்த மண்டபத்தின் சுற்றிலும் வித்விதமான பூஞ்செடிகளை வளர்த்திருக்கிறார்கள். அந்தப் பிரதிமை நான்கு வீதிகள் சந்திக்கும் இடத்திலிருக்கிறது. நாங்கள் அங்கு போய் அதையும் பார்த்து விட்டு, அங்கிருந்தபடியே அரண்மனை வித்யுக்சத்தி விளக்குகளால்

தன் தேகம் முழுவதும் அலங்காரம் செய்து கொண்டு சோபிப்பதைக் கண்ணுற்று அரண்மனையின்எதிரில் ஒருகட்டிடத்தில் இப்பொழுது இருக்கும் ராஜன் நடுவிலும், அவர் தந்தையும், தம்பியும் இருபக்கங்களிலும் இருக்கும்படி வர்ண தீபங்களில் (illuminated picture)செய்திருப்பதையும் பார்த்து விட்டு வீடு வந்தோம்'' என்றாள்.

ரங்கம் "சாமுண்டி மலைக்குப் போய் அங்கிருந்து அரண்மனை விளக்குகளை எப்பொழுது பார்த்தீர்கள்?'' என்று வினவ, கமலம் "வர்த்தந்தி ஆனபின் இரண்டுநாட்களுக்கு அரண்மனை விளக்கேற்றுவதால், மறுநாள் பார்த்து விட்டு வந்தோம்'' என்று சொல்லி முடித்தாள்.

அப்புறம் சில விஷயங்களைப் பற்றிப் பேசிவிட்டு, தானும் வர்த்தந்திக்கு மைசூர் போக வேண்டுமென்று இச்சை கொண்டு ரங்கம்மாள் வீடுபோய்ச் சேர்ந்தாள்.

முற்றிற்று.

# ஓர் ஐந்தங்க நாடகம்.

(679 ம் பக்கத்தொடர்ச்சி)

(பெயர் :—வாசகரிஷ்டப்படி.)

அங்கம் III. களம் I.

தனிமையான இடம் ... மரங்கள்.

**சுந்தரான்:**—மேல் தோற்றம் நம்மை அதிகமாக ஏமாற்றுகின்றது. வனத்தின் அழகைக்கொண்டு மனத்தின் வனப்பை யூகித்தல் மதியீனமாகும். கடவுளது பக்தரைப் போல நடிக்கும் பாதகர்களை நம்பிக் கணக்கற்ற நேர்மையுற்ற ஜனங்கள் நாசமாயினர். கொடுமை வாய்ந்த மந்திரிகளைத் தர்மம் வாய்ந்த பெரியோர்கள் எனக்கருதிய பல அரசர்களும் அழிவுற்றனர். அதர்மமானது தர்மத்தின் வேடம் பூண்டு ஜனங்களுக்குப் பெருந்இன்னலை விளைவிக்கின்றது. தேசபக்தரைப் போல நடிக்கும் பல கொடுமை வாய்ந்தவர்களையும் புல்லறிவாளர்களையும் நம்பிய பல தேயங்கள் துன்புற்றன. அவ்வாறே, இப்பத்மினியைக் கற்புடையாள் எனக்கருதின் எனக்குப் பெருந்துன்பமுண்டாகும் என்பதற்குச் சிறிது மையமில்லை. அரசகுலத்திலுதித்த இவள் வேடர்கள் குலத்திலுதித்த அப்பயல் நண்பன் மீது காதல் கொண்டதுமன்றி அவனுடைய இக் கைக்குட்டையைத் (கையிலேந்திக்கொண்டு) தனது மேசையின் மீதுசிறிதும் நாணம்அச்சம்முதலியவை இன்றிவைத்துப்பாராட்டலாயினள். யான் இவளை நேசிப்பது விஷம் வாய்ந்த ஒரு நாகத்தை நேசிப்ப தொக்கும். இத்தகைய பாபியின் பார்வையினின்றும், எனதுதலைவ! என்னைக் காப்பாற்றுக. இதுவுமன்றி, எனக்குச் சொந்தமுமாயினள். இவள் ஒரு வேடனை நேசிப்பின் அது நமது குலத்திற்குக் கேட்டை விளைவிக்காதோ?

(கந்தன் பிரவேசிக்கின்றனன்.)

அடே, கந்தா! நீ எங்கு வந்தாய்?

**கந்தன்:**—ஐய! தங்களைப் பல இடங்களிலும் தேடிப்பார்த்து முடிவில் தங்களை இங்கு சந்திக்கும் பாக்கியம் பெற்றேன்.

**சுந்தரான்:**—நீ வந்த காரணமென்ன?

**கந்தன்:**—தங்களைக் குறித்த காரணம் பற்றியே வந்துள்ளேன்.

**சுந்தரான்:**—அஃது என்ன? எனக்கேதேனும் துன்பம் நேர்ந்திருக்கின்றதோ?

**கந்தன்:**—ஐயனே, தங்களிடம் யான் என்ன சொல்வேன்?



**சுந்தரான்:**—சொல்லத் தகுந்தனவாயின் சொல்!

**கந்தன்:**—அப்படியாயின் எனது தலைவ! எனக்குப் போதற்கு உத்தரவு அளிப்பாய்.

**சுந்தரான்:**—வந்த காரணத்தைத் தெரிவிக்காமல் நீ ஏன் செல்கின்றனை?

**கந்தன்:**—ஐயா! தங்களிடம் அந்த விஷயத்தைக் கூறின் அஃது எனக்குப் பெருந்துன்பத்தை விளைவிக்கும் போலும்.

**சுந்தரான்:**—என்ன! நீ பைத்தியம் பிடித்தவனைப் போலப் பிதற்றுகின்றனை? வந்த விஷயத்தை உடனே கூறு.

**கந்தன்:**—ஐயா! என் மீது கோபம் கொள்ள வேண்டாம். தங்கள் மீதுள்ள ஆசையின் காரணமாக யான் இவ்விடம் வந்தேன்.

**சுந்தரான்:**—கந்தா! உடனே வந்த விஷயத்தைக் கூறுவாய். வீணே காலம் போக்குவதில் என்ன பிரயோஜனம்? தீமையானாலும் சரி, நன்மையானாலும் சரி, சிறிதும் அஞ்சாமற் கூறுவாய்.

**கந்தன்:**—ஐயனே! யான் என் செய்வேன்? கூறுதற்கு நாவெழவில்லையே! என்னுயிருக்கு அது தீமை விளைவிக்கும் எனக் கருதுகின்றேன்.

**சுந்தரான்:**—அஃது உனக்கு யாதொரு விதத்திலும் துன்பம் விளைக்காது. சிறிதும் அஞ்சாமற் கூறுவாய்.

**கந்தன்:**—ஐயா! இச்சிறந்த மாலை (மடியிலிருந்து எடுத்து) யாருடையது என்பது தங்களுக்குத் தெரியும் என்று யான் கருதுகின்றேன்.

**சுந்தரான்:**—இம்மாலை பத்மினியின் மாலையன்றோ! இது உனக்கு எப்படிக் கிடைத்தது?

**கந்தன்:**—எங்கள் தலைவ, நண்பனிடமிருந்து பிடுங்கிக் கொண்டு வந்தேன்.

**சுந்தரான்:**—இது அவனுக்கு எப்படிக் கிடைத்தது?

**கந்தன்:**—அதைக் கூறின் இப்பூமி நாணமடைந்து அசையும் காரணத்தினால் உலகம் அழியும்; மதியும் பகலவனும் நாணத்தால் தோன்ற. யான் என் சொல்வேன்?

**சுந்தரான்:**—நீ கூறுதற்கு அஞ்சவேண்டாம். நீ மிக்க தைரியசாலி என்பதை யான் அறிவேன்.

**கந்தன்:**—எங்கள் ஐயா! தாங்கள் அழகுற்ற பத்மினியை நேசித்தல் உலகம் அறியும்.

**சுந்தரான்:**—பத்மினியும் இப்பொழுது அழகற்று இருக்கின்றனளோ? அதைப்பற்றி என்ன?

**கந்தன்:**—அம்மங்கை சிறந்த குலம், ஒப்பற்ற வனப்பு, மெச்சத்தக்க கல்வி முதலியவற்றைப் பெற்றவள்.

**சுந்தரான்:**—யான் அவற்றை அறிவேன், அவற்றைப்பற்றி என்ன?

**கந்தன்:**—எமது தலைவ, குணமற்றால் எவற்றைப் பெற்றால் என்?

**சுந்தரான்:**—நீ கூறுவது மிக்க உண்மை, கந்தா!

**கந்தன்:**—நேர்மையற்றால் என், வனப்புற்றால் என், சீர்க்குலம் பெற்றால் என், செல்வம் பெற்றால் என், பல நூல்கள் அறிந்தால் என், எவற்றைப் பெற்றால் என்?

**சுந்தரான்:**—நீ கூறுவது யாவுமுண்மையே!

**கந்தன்:**—எங்கள் ஐயனே! யான் கூறுவன யாவையும் கூறி முடித்தேன். எனக்கு உத்தரவு அளிப்பின் செல்வேன்.

**சுந்தரான்:**—கந்தா! நீ சிறிது தத்துவம் பேசியதன்றி என்னிடம் தெளிவாக வேறு எதையும் கூறினையில்லையே.

கந்தன்:—ஐயனே! இதைவிட அதிகமாகக் கூற எனக்கியலா. செவிகள் தீங்கடையும், நாவழிவுறும், இதயம் தகரும். அதைக்கேட்பின் உயிரற்ற கற்களும் துன்பமடையும். இத்தகைய விஷயத்தைத் தங்களிடம் தெளிவாகக் கூறுதல் அதர்மமாகும்.

சுந்தரன்:—கந்தா! நீ எனக்குப் பல முறை உனது உயிரையும் துரும்பாகக் கருதி எனக்குப் பல விதமான உதவிகள் புரிந்திருக்கின்றனை. இவ்விஷயங்களை மற்றவரிடத்துக் கூறி இருக்கின்றனையோ?

கந்தன்:—எங்கள் தலைவ! ஒருபோது மில்லை.

சுந்தரன்:—இது பத்மினியைக் குறித்ததன்றோ!

கந்தன்.—ஐயனே! (அழுது கொண்டு) யான் என் சொல்வேன்! தங்கள் மீதுள்ள நட்பின் காரணமாக அவ்வரசிளங் குமரியைப் பற்றித் தங்களிடம் கூறவேண்டியதாயிருக்கிறது.

சுந்தரன்:—அரசிளங்குமரி! உடனே கூறு, கந்தா! தாமதித்தல் வேண்டாம்.

கந்தன்:—யான் அப்பாதகனையும் அம்மங்கையையும் ஓர் இரவு அத்தோட்டத்தில் பார்த்தேன். சந்திரன் மிக்க ஒளியுடன் பிரகாசித்துக் கொண்டிருந்தது.

சுந்தரன்:—நீ என்ன பார்த்தாய்?

கந்தன்:—முதலாவது இருவரும் சிறிது தூரத்தில் இருந்தனர். அத்தூர்த்தன் அவ்வழகுற்ற மங்கையை அணுகினன்.

சுந்தரம்:—பின்னர் என்ன நடந்தது?

கந்தன்:—சிறிது நேரம் புன்னகைகொண்டும் சம்பாஷித்துக்கொண்டுமிருந்தனர்.

சுந்தரன்:—சிறிது நேரத்தின் பின் என்ன நடந்தது?

கந்தன்:—ஐயனே! என்னை மன்னிக்கவும்!

சுந்தரம்:—அடே! சீக்கிரம் கூறு! ஒளிப்பின் எனது இவ்வாளிற்கு உன்னை இப்பொழுதே இரையாக்குவேன். அப்பாதகனைப்பற்றித் தெரிந்தது யாவும் கூறுவாய்.

கந்தன்:—அப்பாதகனே மிக்கக் கொடியவன். மாந்திரிக முதலியவற்றை நன்குணர்ந்தவன். அவற்றின் மூலமாய்ப் பல கன்னியரையும் சீரழித்தான்.

சுந்தரன்:—அவன் என் செய்தான்?

கந்தன்:—ஐயனே! தனது வளப்பற்ற இரு கரங்களாலும் அவளைப் பற்றினன்.

சுந்தரன்:—ஆ! ஆ! அப்பொழுது அவள் என் செய்தாள்?

கந்தன்:—பாபம்! அவள் என் செய்வாள்? பலாத்காரத்தால் அழிவுற்றனள்.

சுந்தரன்:—அரச குலத்தில் உதித்தனள்; பேரழகுமுற்றனள்; கல்வியும் கற்றனள்! ஆயினும் அவற்றால் எப்பயன்? அவள் அழிதலே நன்று. எனது இவ்வாளால் அவளை இப்பொழுதே கோறல் செய்வேன். அடே கந்தா! நீ இவ்விடத்திலிருந்து விலகு.

கந்தன்:—எங்கள் தலைவ! தயை கூர்ந்து என் மீது கோபங்கொள்ளாமல் யான் கூறுவனவற்றைப் பொறுமையுடன் கேட்பீர். பத்மினி இயற்கையாகச் சிறிதும் மாசற்றவள். அப்பாபியின் சூனியமே அவளை அவன் வசமாக்கியது. ஆகையால் இவ்வபவாதத்திற்குக் காரணமாகிய அப்பாபியைக் கொல்லுதலே சிறந்தது. ஒரு பைத்தியக்காரன் நமக்குத் தீமை விளைவிப்பின் அவனுக்கு நாமும் தீமை விளைவித்தல் சிறந்ததன்று. சூனியம் பைத்தியத்திலும் கொடியது. ஆகையால், எனது ஐய! அவனைக் கொல்லுதலே சிறந்த தண்டனை என யான் கருதுகின்றேன்.



சுந்தரம்:—சூனியம், பலாத்காரம் முதலியவற்றால் அழிவுற்றவர்களைத் தண்டித்தல் நீ கூறியவாறு சிறந்ததன்று. கந்தா, அப்படியாயின் அவனை எவ்வாறு கொல்ல வேண்டும்?

கந்தன்:—அதை யான் முடித்து விடுகின்றேன் கூடிய சீக்கிரத்தில்.

சுந்தரன்:—இதைப்பற்றி விரிவாகப் பிறகு யோசிப்போம். என்னைத்தேடி அதோ எனது நண்பன் வருகின்றான். யான் இப்பொழுது போகின்றேன். (நிஷ்கிரமிக்கின்றனன்.)

கந்தன்:—நல்லது எனது ஐயா...............

பல நூல்களை வாசிக்குங் காரணத்தாலேயே அறிவு அதிகரிக்கின்றது என்பர் சான்றோர். சுந்தரன் நன்றாய் வாசித்தவன். என்ன பிரயோசனம்? பேயானது கடவுள் வேடம் பூண்டு தர்மம் என்பது மாயமெனக் கூறின் அவ்வண்ணம் கருதுவதற்கு முன் வருவார் கணக்கற்ற புல்லறிவாளர். பத்மினி எப்படி இருந்தால் எனக்கென்ன? அவள் குணவதி என்பது யாவரும் அறிந்த விஷயம். நண்பனும் சிறந்தவன். இருவரும் ஒருவரையொருவர் நேசிப்பது திண்ணம். காதல் கொடியதன்று. இதனை இம்மடையன் அறியவன்மையற்று இருக்கின்றனன். இவளைச் சரசம் செய்யாதது பற்றியும் யான் கூறியவற்றை நம்பியது பற்றியும் அவனைக் கொல்லத் துணிந்தனன். அவன் இறப்பதால் எனக்கு என்ன பயன்? நண்பன் கொல்லப்படின் கணக்கற்ற நன்மைகள் எனக்கு உண்டாகும். நேர்மையுற்ற பேதைகளே என்னைப் போன்றவர்களின் முக்கிய உணவாவர். எல்லோரும் அறிவு வாய்ந்து இருப்பின் என்னைப் போன்றவர் கதி என்ன? கேவலம் பார்வைக்கு நாகத்தைப் போல் வளைப்புற்றுச் சாத்துவிகாபிநயம், மடமை, குருட்டுநட்பு முதலியவை வாய்ந்தவர்களை அழிப்பது மிக்க எளிது. கரியன், மந்தன் முதலிய புல்லறிவாளர்களைக் கொண்டு நண்பனைக் கொன்று, சமயம் வாய்ப்பின் சுந்தரன் மீது பழியைச் சாட்டுதல் மிக எளிது.

களம் 2:—அரண்மனையில் ஓர் அறை.

பத்மினி:—(தாதியை நோக்கி) எனது அம்மணி! எனது மேசையின் மீது யான் வைத்திருந்த நண்பனுடைய கைக் குட்டையைச் சுந்தரன் கையில் எனது தோழிகள் பார்த்தனராம். அதுவுமன்றி, எனது சத்துருவாகிய அப்பாபியினிடம் என்னை அவன் தூஷிப்பதைத் தற்செயலாகக் கேட்டனராம். நண்பனுக்கு இதனால் அபாயம் உண்டாகும் என்று யான் கருதுகின்றேன். பாபம், யான் என் செய்வேன்? அவருக்கு ஏதேனும் நேரிடின் யான் விஷமுண்டு இறப்பது திண்ணம். ஆகையால் அவரைப் பார்த்து இவ்விஷயத்தைக் கூறின் நன்மை யுண்டாகும் என்று கருதுகின்றேன்.

(கதவு தட்டப்படுதல்) அம்மணி மறைவாய் (நண்பன் பிரவேசிக்கின்றனன்) நண்ப! நீ ஏன் இந்நள்ளிரவில் இங்கு வந்தாய்? சேவகர்கள் பார்ப்பின் உனக்கு மிக்க இன்னலை விளைவிப்பர்.

நண்பன்:—என்னருமைக் கண்ணே! இப்பொழுது இன்பத்தைப்பற்றிப் பேசுவாய் நீ, அன்றி யான் எவ்வாறு எனது காலத்தைக் கடப்பேன்? ஆவியற்ற உடலும் நடக்குமோ? அவ்வாவியைப் பெற இயலின் பெருந்தோ? உடலாகிய எனக்கு நீ ஆவியன்றோ? நீ இங்கு இருக்க யான் எவ்வாறு எனது வீட்டிலிருக்க இயலும்? நீ இருக்குமிடமெல்லாம் எனக்குச் சுவர்க்கமன்றோ? வா! நாமிருவரும் இப்பொழுதே செல்வோம்.

உன்னை விட்டுப் பிரிந்து இருக்க என்னால் இனிமேல் இயலாது. என்னருமைப் பத்மினி! வா என்னுடன். உன்னைவிட்டுப் பிரிந்து இருக்க இனி என்னால் ஒரு கணமுமியலாது. நீ எதற்கும் அஞ்சவேண்டாம். உனக்கு யாதொரு துன்பமும் நேரிடாது.

பத்மினி:—எனது அருமைத் தோழனே! யான் எதற்கு மஞ்சேன். உன்னால் எனக்குச் சிறிதும் துன்பம் நேரிடாது. நீ இருக்குமிடம் காடாயினும் எனக்கு அது சுவர்க்கத்தினும் சிறந்ததே. உன்னை நேசித்த காலமுதல் என்னை உன்னினும் வேறாகக் கருதினேனில்லை. எனது உடலும் நீயே; எனது கருத்தும் நீயே; எனது பொருளும் நீயே; எனது உயிரும் நீயே; உனது இன்பம் எனது இன்பம்; உனது துன்பம் எனது துன்பம். ஆகையால் யான் இப்பொழுது கூறும் விஷயத்தை மிக்க ஊக்கத்துடன் கவனிப்பாய். இன்று உன்னுடன் என்னால் வர இயலாது. என்னைப் பெற்ற தாய் பிணியுற்று இருக்கின்றனள். பத்து நாட்களுக்குள் அவள் குணமடைவாள். இந்த மாதம் பதினோராம் தேதி பதினொரு மணிக்கு உன்னுடன் எங்குஞ் செல்லச் சிறிதும் தடையில்லை. இதுவுமன்றி இன்னும் ஒரு விஷயம் உனக்கு உரைக்கவேண்டும். சுந்தரன் யான் உன்னை நேசிப்பதை அறிவான். உனக்கு அதனால் துன்பம் நேரிடினும் நேரிடலாம். நீ இங்கு அடிக்கடி வரவேண்டாம்.

நண்பன்:—என்னருமைப் பத்மினி! அதைப் பற்றி நீ சிறிதும் அஞ்சவேண்டாம். கடவுள் அளித்த கையும் காலுமிருக்கின்றன. எல்லா நட்சத்திரங்களும் ஒன்றுகூடி மதியின் ஒளியை அழிக்கக்கருதினு மவற்றாலியலாது. உண்மை என்னும் ஒப்பற்ற மதியின் ஒளியை அழிக்கவும் கொடுமை வாய்ந்தவர்களால் இயலுமோ? ஒருபோதும் இயலாது. நீ என்னைப் பற்றிச் சிறிதும் கவலை கொள்ள வேண்டாம்.

பத்மினி:—எனது பிரியமுள்ள நண்ப, நீ கூறுவது யாவு முண்மையே! ஆயினும், சத்துருக்கள் விஷத்தினும் கொடியவர்கள். அவர்களை வண்மையற்றார் எனக் கருதியிருத்தல் நாகத்தின் குட்டியை விஷமற்றதெனக் கருதியடைவதாகும். நீ சில நாட்கள் மிக்க சாக்கிரதையாக இருத்தல் வேண்டும். எனதுயிரினும் சிறந்த தலைவ! இங்கு இனிமேல் அடிக்கடி வாராமலிருப்பாய்.

நண்பன்:—என்னை வரவேண்டாம் என்று கூறுவது "விஷமுண்டு சந்தோஷமாக இரு" என்பதை யொக்கும். யான் தினந்தோறும் வருவேன்.

பத்மினி:—நண்ப! யான் கூறுவதைக் கவனத்துடன் கேட்பாய். என் மீது உனக்கு நம்பிக்கையுளது என யான் கருதுகின்றேன். அப்படியாயின் யான் கூறும் வண்ணம் செய்தல் உனது கடமையாகும். நீ இனிமேல் இங்கு வரின் உனக்குத் தீமை சிறிது மையமின்றி விளையும். அஃது எனது உயிரை இரையாகக் கொள்ளும். என்னை அழிக்க உனக்கு இஷ்டமாயின் எப்போதும் நீ வரலாம்.

நண்பன்:—என்னருமைப் பத்மினி! உனது நன்மையை நாடியன்றோ கடவுள் என்னைப் படைத்துள்ளார். என்னாசையை நாடி யான் உனக்கு ஒருபோதும் தீமை செய்யேன்.

பத்மினி:—என்னருமைத் தோழனே! பதினோராந்தேதி அன்று வருக. மிக்க நேரமாகின்றது.

நண்பன்:—சிறந்த நன்னுதலாய்! உன்னைவிட்டுப் பிரிதல் சுவர்க்கத்தை விட்டு நாகத்திற்குச் செல்லுதலை யொக்கும்.



பத்மினி:—எனக்கும் அவ்விதமாகவே இருக்கின்றது. துக்க மனுபவியாதான் இன்பத்தின் பெருமையை முற்று மறியான். ஆகையால் இத்தகைய இன்னல்களைக் கண்டஞ்சுதல் சிறந்ததன்று. துன்பத்தின் காரணமாக உண்டாகும் இன்பமே சிறந்தது. நண்ப! நாமன்று சந்திப்போம்.

நண்பன்:—நல்லது, யான் செல்கின்றேன். செல்லும் முன், என்னருமைப் பத்மினி! உன்னைச்சிறிதுநேரம் உற்றுநோக்க உத்தரவு அளி.

பத்மினி:—தோழனே! எனது வதன மிப்பொழுது மாறுபட்டிருக்கின்றதோ?

நண்பன்:—என்னருகே வரின் உற்று நோக்கிக் கூறுகின்றேன்.

பத்மினி:—எனது விவாகத்தின் பின்னர் நீ என்னை உற்று நோக்குதல் தர்மம். இப்பொழுது அவ்வாறு செய்தல் அதர்மம்.

நண்பன்:—அதர்மமாயின் யான் செய்யேன். பத்மினி! உன்னை விட்டு விலக எனக்குச் சிறிதும் மனமில்லை. விலகு மெண்ணமே எனக்குக் கவலை விளைவிக்கின்றது. யான் என் செய்வேன்? இப்பொழுது எனது இருதயத்தில் ஒருவகைத் துன்பமதிகரிக்கின்றது. பத்து நாட்கள் உன்னைக் காணாமலிருப்பது பத்து நூற்றாண்டுகள் நாகத்திலிருப்ப தொக்கும்.

பத்மினி:—யான் இறப்பின் நீ என் செய்வாய்?

நண்பன்:—பரிகார மற்ற பிணிக்கு மரணமே சிறந்த பரிகாரமன்றோ?

பத்மினி:—தற்கொலை பெரும் பாப மன்றோ?

நண்பன்:—தற்கொலையைப் பற்றியும் மரணத்தைப் பற்றியும் யாம் ஏன் இப்பொழுது பேசவேண்டும்? கடவுள் நமக்குப் பேரின்ப மளிப்பர்.

பத்மினி:—நண்ப, நேரமாகின்றது. சேவகர்கள் உன்னைப் பார்ப்பின் மிக்க இன்னல் உண்டாகும்.

நண்பன்:—என்னருமைப் பத்மினி! (கண்களில் நீர் ததும்ப) யான் செல்கின்றேன்.

பத்மினி:—நண்ப! ஏன் இன்னும் இவ்வாறு தைரிய மற்றும், கவலையுற்று மிருக்கின்றனை? உனது விழிகளிலும் உதடுகளிலும் ஒரு வகைத் துன்பந்தோன்றுகின்றது.

நண்பன்:—என்னால் இப்பொழுது அதனைக் கூற இயலவில்லை. யான் போகின்றேன், பத்மினி.

பத்மினி:—நல்லது! நண்ப, தைரிய மிழக்க வேண்டாம் (நண்பன் நிஷ்கிரமிக்கின்றனன்). எனது பரம நண்பனுக்குத் தாங்குதற்கரிய கவலையை விளைவித்திருக்கின்றனையோ? எப்போதும் சிரித்தமுகத்துடன் சம்பாஷிக்கும் அவனிடத்து இன்று ஒரு வகைத் துன்பத்தைக் கண்ணுற்றேன். கடவுளே, அத்துன்பத்தை நீக்க என்னால் இயலுமோ? அங்கு வருவது யார்? என்னம்மணி, அஃது யார் பார்.

களம் 3:—மாளிகையில் ஓர் அறை.

சுந்தரம்:—துரைசாமி! இங்கு சீக்கிரம் வா!

(துரைசாமி பிரவேசிக்கின்றனன்.)

துரைசாமி:—ஐயனே! இதோ யான் இங்குள்ளேன்.

சுந்தரன்:—நீ விரைவில் கந்தனை அழைத்துக் கொண்டுவா.

துரைசாமி:—எமது தலைவ! அவ்வாறே செய்கின்றேன். (துரைசாமி நிஷ்கிரமிக்கின்றனன்).

சுந்தரன்:—மங்கையரை எப்போதும் நம்புதல் மதியீனமாகும். அரண்மனைகளும், காவல் வாய்ந்த கோட்டைவாயில்களும், மக்கள் நிறைந்த இல்லங்களும் மாயையின் காரணமாக அவர்களுடைய காதலர் தங்கி விளையாடும் மறைவிடமாக மாறுதலடைகின்றன. பார்வைக்கு மாசற்றும் உண்மையில் மாசுற்று மிருக்கின்றனர். அவர்கள் பேசுவதோ கற்பின் பெருமை, ஆயின் புரிவதோ முற்றும் மாறுபாடு. பத்மினியை யறியாதான் அவளைக் கற்பற்றவள் என்று கூறுவனோ? இலக்குமி, இந்திராணி முதலியவர்களைப் பார்வையி லொத்திருக்கும் இவளை எவன்தான் ஒரு விலைமாதென்பதை உணர்வன்? ஐயோ! கடவுளே! இத்தகைய மங்கையரைப் படைத்தல் உமது வன்மையின் அழும்பன்றோ? நள்ளிரவில் அத்தூர்த்தனுடன் அரண்மனைக்குள் சிறிதும் அச்சமின்றி விளையாடிக் கொண்டிருந்த இவளை என்னதான் செய்யக் கூடாது? மிக்க உண்மையாக யான் நேசிப்பதை அறிந்த இக்கள்ளி என்னை நோக்கி, "எனக்கு விவாகத்தின் மீது சிறிதும் பிரியமில்லை. என்னை நீ நேசிப்பதில் சிறிதும் பயனில்லை" என்று கூறினள். ஆனால் அவள் புரியும் செய்கையைக் காண வியபிசாரமே நாணமடையும். ஒரு காலத்தில் அத்தூர்த்தனையும் சிறப்புற்ற ஆடவன் என்று யான் எண்ணியிருந்தேன். அதைப்பற்றி இப்பொழுது சிந்திப்பதில் சிறிதும் பயனில்லை. காளி அவர்களிருவரும் பேசிக் கொண்டிருந்ததையும் அவர்கள் கூறிய விஷயங்களையு முற்றுக் கேட்டு என்னிடம் கூறி இருக்கின்றனள்.

(கந்தனும் பணியாளனும் பிரவேசிக்கின்றனர்.)

கந்தா! வா. துரைசாமி! நீ உனது வேலையைக் கவனி.

(துரைசாமி நிஷ்கிரமிக்கின்றனன்)

கந்தன்:—ஐய! தங்களுக்குப் பணிபுரியும் பொருட்டு வந்துள்ளேன்.

சுந்தரன்:—நீ மிகவும் சீக்கிரமாக வந்தாய் கந்தா!

கந்தன்:—தலைவா! துரைசாமியை அதோ அங்கு கண்டேன். ஆகையால் சீக்கிரம் வந்துள்ளேன்.

சுந்தரன்:—யான் உன்னிடம் ஒரு முக்கியமான விஷயத்தைக் கூற வேண்டியதாயிருக்கின்றது.

கந்தன்:—ஐயா! தாங்கள் காலாலிட்ட வேலையைத் தலையால் புரிதற்கு வந்துள்ளேன் தங்கள் பணியாளன்.

சுந்தரன்:—நீ ஏதேனும் அவனைப்பற்றி அறிந்து இருக்கின்றனையோ?

கந்தன்:—அவன் அம்மங்கையை அழித்துப் பெற்ற இன்பத்தைப் பற்றி எங்கும் பிதற்றுகின்றனன்.

சுந்தரன்:—அவன் மானமற்றவனோ?

கந்தன்:—ஐயா! முற்றும். கணக்கற்ற மங்கையரை அழித்த தூர்த்தனுக்கு மானமுண்டோ? அவனைக் கொல்லுதல் பாபத்தையொழித்தலை யொக்கும்.

சுந்தரன்:—இன்று தேதி ஒன்பது. நாளைய தினம் தேதி பத்து. பதினொருந் தேதி இரவு ஒன்பது மணிக்கும் பன்னிரண்டு மணிக்கும் இடையில் அப்பாதையில் நீயும் உனது ஆட்களும் மறைந்திருந்து வரும் பொழுது அவனைக் கொல்லுங்கள்!

கந்தன்:—அவன் அவ்வழி அன்று வருதல் உ... னுக்குத் தெரியுமா?



சுந்தரன்:—எனக்குத் தெரியும். யான் சொன்னவாறு செய்வாய்!

கந்தன்:—எங்கள் தலைவ! அப்படியே ஆகட்டும்.

சுந்தரன்:—நீ துரிதமாகச் சென்று இக்காரியத்தை முடிக்கவேண்டியன முற்றும் செய்துமுடிப்பாய்.

கந்தன்:—ஐயா, அப்படியே செய்கின்றேன்.

களம் 4:—(புஷ்பச் செடிகள் நிறைந்த ஒரு தோட்டம்.)

(கோகிலம் புஷ்பங்கள் பறிக்கின்றனள்.)

கோகிலம்:—எங்களைப் படைத்துக் காக்கும் ஐயனே! எங்கள் நன்மையை நாடி அழகுள்ள பற்பல புஷ்பங்களையும், உயர்ந்த கணக்கற்ற தருக்களையும், குழலினும் இனிய பாடல்கள் பாடும் பற்பல பறவைகளையும், ஒளி நலம்விளைவிக்கும் இப்பகலவனையும், எம் மனத்தைத் தம் வயப்படுத்தும்கோடிக்கணக்கான சாதுவான மான் முதலிய மிருகங்களையும், நன்மை இது, தீமை இது என்று பகுத்தறிவதற்குக் கருவியாகிய நுண்ணறிவையும் படைத்த தேவரீரை யான் எவ்வாறு புகழ்ந்து துதிப்பேன்!

(கரியன் பிரவேசிக்கின்றனன்.)

என்னைப் படைத்த கர்த்தனே! இத் தூர்த்தனிடமிருந்து என்னைக் காப்பாற்றுவாய்.

கரியன்:—(அவளை நெருங்கிக் கொண்டு) ஓ பெண்ணே! யான் உன்னை நேசிக்கின்றேன்.

கோகிலம்:—(விலகிக் கொண்டு) அடே பாவி, நீ என்னை அணுகாதே! காதலும் தூர்த்தரிடம் குடியிருக்குமோ?

கரியன்:—காமம் பெற்றாரிடத்துக் காதலில்லையாயின் எவரிடத்துத்தான் அது குடியிருக்கும்? (அவளை நெருங்கி) உனது வனப்புற்ற வதனமும்..............

கோகிலம்:—ஓ! கரியா, நீ என்னையணுகாதே! எனது வார்த்தையைக் கேட்பாய்! இல்லாவிடில் வீணே அழிவாய்! போ வந்த வழியே!

கரியன்:—என்ன சொல்கின்றாய்?

(கரியன் அவளைப் பிடிக்க ஓடுதல்.)

(நண்பன் பிரவேசிக்கின்றனன்.)

கோகிலம்:—அண்ணா! இப்பயல் எனக்குத் தீமை விளைவிக்கக் கருதினன்.

நண்பன்:—அடே, தூர்த்தபயலே! பிதுர்காதகனே; கொலைஞனே! நீ ஏன் இங்கு வந்தாய்?

கரியன்:—அதைப்பற்றி உனக்கென்ன?

நண்பன்:—மடப்பயலே! அதிகமாகப் பேசாதே! துன்புறுத்த வந்தாயன்றோ?

கரியன்:—அடே நண்ப! என்ன பிதற்றுகின்றாய்!

கோகிலம்:—அண்ணா, அப்பயலுடன் யாம் பேசுவதில் பிரயோசனமென்ன?

கரியன்:—யாரடி பயல்?

நண்பன்:—அடே, என் சொன்னாய்? (கரியனைத் தாக்கிக் கீழே விழுத்தினன். பின்னர் எழுந்து கரியன் ஓடுகின்றனன்.)

கோகிலம்:—தைரியம் வாய்ந்த என்னருமை அண்ணா! இதோ இங்கு இரண்டு பற்களை விட்டோடினன். (அங்கு கிடக்கும் கடிதத்தை எடுத்துவைத்துக் கொள்ளுதல்.)

நண்பன்:—கோகிலம்! நீ ஏன் இன்று தனியே வந்தாய்? வையகத்தில் ஆடவர் யாவரும் உண்மையுற்று இருப்பின் மங்கையர்க்குச் சிறிதும் பயமில்லை. அவர்கள் தனியே எங்கும் செல்லலாம்.

கோகிலம்:—ஆம், அண்ணா! தாங்கள் கூறுவது யாவுமுண்மையே.

நண்பன்:—உனது தோழி பங்கஜம் வருகின்ருள். கோகிலம்! அவளுடன் வீடு சேர். யான் சிறிது நேரஞ் சென்று வருகிறேன்.

கோகிலம்:—நல்லது அண்ணு! (கோகிலம் நிஷ்கிரமிக்கின்றனள்).

கோகிலம்:—(வீட்டில் தனது கையில் கடிதமேந்தித் திறந்து வாசித்து) என்ன! இக்கடிதம் ஆச்சரியம் விளைவிக்கின்றது. கரியனுக்குக் கந்தன் எழுதியுள்ளான். இருவரும் என்னுடைய நண்பனுடைய பெருஞ் சத்துருக்கள். இது கூறுகின்றது: "என்னருமைக் கரியா! இன்றையதினம் இரவு பத்துக்கும் பன்னிரண்டுக்கு மிடையில் ஒப்பற்ற அம்மிருகத்தை வேட்டையாடின் உனக்கு மிக்க நன்மைகள் உண்டாகும். உன்னை இப்பொழுது வெறுப்பவளை நீ அப்பொழுது உனது மனைவியாக ஏற்படுத்திக் கொள்ளலாம். நீ தைரியம் வாய்ந்தவனுயிருந்தால் இதனைக் கட்டாயம் செய்து முடிப்பாய். என்னை இன்று பார்." இஃது என்ன? ஆச்சரியம் விளைவிக்கின்றதே! "ஒப்பற்ற அம்மிருகம்"; எம்மிருகம்? 'வேட்டையாடின் உனக்கு மிக்க நன்மைகள் உண்டாகும்;" என்ன நன்மைகள்? "உன்னை இப்பொழுது வெறுப்பவளை அப்பொழுது உனது மனைவியாக ஏற்படுத்திக் கொள்ளலாம்;" எவளை? வேட்டையாடுவது எப்பொழுது? "இன்று இரவு பத்துக்கும் பன்னிரண்டுக்கும் இடையில்." என்ன! இவைகள் யாவும் அதிசயம் விளைவிக்கின்றன. இன்று இக்கடிதத்தை யான் நண்பனிடம் காட்டவேண்டும்.

களம் 5. (ஒரு வனத்தின் குறுகிய பாதை.)

(கந்தன், கரியன், முரடன், துஷ்டன் முதலிய பதின்மர் குத்துவாள் முதலிய ஆயுதங்கள் அணிந்து இருக்கின்றனர்.)

கந்தன்:—(கரியனை ஒரு புறத்தில் அழைத்து) கரியா! இன்று மணி பத்துக்கும் பன்னிரண்டுக்கும் இடையில் இவ்வழியே நண்பன் வருவான். அவன் பாகதி அடையின், உனது விருப்பங்கள் யாவற்றையும் முற்றுப் பெறச் செய்யலாம். கோகிலத்தை மனைவியாக அடைவாய், செல்வமும் பெறுவாய், இப்பொழுது அனுபவிக்கும் பயத்தினின்றும் ஒழிவாய்.

கரியன்:—ஐயா! தனியே புலியை ஒத்த நண்பனைக் கொல்லுதல் இயலாக் காரியம். அவன் எனக்கு ஒவ்வொரு விதத்திலும் தீமை இழைத்திருக்கின்றனன். ஆகையால் அவனைக் கொல்லுவதில் எனக்கு மிக்க பிரியம். இருப்பினும், அவனைத்தனியே கொல்லுதல் எவ்வாறு? விரோதிகளைக் காணும் பொழுது சிங்கத்தின் வன்மை அடைகின்றான்; நண்பர்களுடன் சம்பாஷிக்கும் பொழுது ஒப்பற்ற சாந்த மடைகின்றான்; ஏழைகளுடன் எல்லையற்ற கருணையுடன் பேசுகின்றான்; கடவுள் பக்தி முதலிய சிறந்த குணங்களில் ஒரு துறவியை நிகர்கின்றான்; இத்தகைய ஆடவனைத் தனியே என்னால் கொல்ல இயலாது.

கந்தன்:—என்ன! உன்னை யான் அதிகமாக நினைத்து இருந்தேன். நீ தனியே இக்காரியம் செய்ய வேண்டாம். மற்றவர்களுடன் கூடி, விஷமுள்ள நாகத்தைப் பலர் தடியால் அடித்துக் கொல்லுதல் போலக் கொல்லு. இது கூடவா உன்னால் செய்ய முடியாது?

கரியன்:—இது யான் செய்வேன்.

(கந்தன் மற்றவரிடத்துச் செல்கின்றனன்) எனக்கு இன்று காலையும் தீமை விளைத்த அவனைத் தண்டித்தற்கு இதுவே தக்க சமயம்.



கந்தன்:—என்னுடைய அருமைத் தோழர்களே! யான் கேட்கும் கேள்விக்குப் பதில் நீங்கள் உடனே கூறவேண்டும்.

எல்லோரும்:—நல்லது எங்கள் ஐயா!

கந்தன்:—ஒரு வனத்தில் சிங்க மிருக்கும்பொழுது மற்ற மிருகங்கள் பயமின்றிச் சந்தோஷமாக இருக்க இயலுமா?

மந்தன்:—அஃது எப்படி முடியும் ஐயா! எனக்கு இன்னும் ஒரு புட்டிக் கள் கொடுத்தால் சிங்கத்தை நரியாக்கிக் காட்டுவேன்.

முரடன்:—அடே, மடையா! சும்மா இருடா!

கந்தன்:—அவ்விதமே, ஒரு தேசத்தில் ஜனங்களை வருத்தும் ஓர் அரசன் இருந்தால் அவனால் ஜனங்களுக்கு ஏதேனும் நன்மையுண்டாகுமா?

எல்லோரும்:—ஒருபோதுமில்லை.

கந்தன்:—நாமிப்பொழுது செய்ய வேண்டியதைப் பற்றி உங்களிடத்து இன்றுகாலை கூறினேன். நண்பன் இருப்பின் நம்மால் சந்தோஷமாக இருக்கமுடியுமா?

கரியன்:—ஒருபோதுமில்லை.

முரடன்:—உரக்கப் பேசவேண்டாம் ஐயா!

கரியன்:—இத்தனிக் காட்டில் இப்பொழுது வருவது யார்?

முரடன்:—இல்லை ஐயா! உரக்கப் பேச வேண்டாம். அதோ, அங்கே, யாரோ ஒருவன் வருவது போலத் தோன்றுகின்றது.

கரியன்:—எங்கே? எனக்குத் தெரியவில்லையே.

மந்தன்:—உனது கண் பார்வையுமா குறைந்து விட்டது! உனது உயிரை விரும்பின் நீ கட்டாயம் பிரமசாரியாக இருக்கவேண்டும்.

கந்தன்:—எல்லோரும் ஆயுதமணியுங்கள்! அவன் நண்பனைப் போல நடக்கின்றான். அவன்தான் நண்பன். நீங்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு மரத்தின் பின்புறத்தில் மறைந்து கொள்ளுங்கள்! அவன் கிட்டே வந்த உடனே குழல் ஊதுவேன். உடனே தாக்கிக் கொல்லுங்கள்!

எல்லோரும்:—நல்லது ஐயா!

(சிறிது நேரத்தின் பின் நண்பன் இவ்விடத்தை அணுகுகின்றனன். குழலின் சப்தம் கேட்கின்றது. நண்பன் ஆச்சரிய மடைதல்: கள்ளர் யாவரும் தாக்குதல். நண்பன் தைரியத்துடன் சண்டை செய்தல்: சிறிது நேரத்தின்பின் சேவகர்கள் பிரவேசித்துத் திருடர்களைப் பிடித்தல்.)

(தொடரும்.)

EVERY HOUSE

SHOULD STOCK A BOTTLE OF

AMRUTANJAN

THE BEST PAIN BALM

**Price As. 10 a bottle.**

IV—95

கருணைகான் ஆணை.

1—5—28 ல் சைகோன் மாடரன் தியேட்டர் ஹாலில் நடைபெற்ற பெண்மக்கள் மகாநாட்டில் "சிந்தாமணி" பத்திராதிபர் சகோதரி வி. பாலம்மாள் அவர்களுக்கு சைகோன் பெண்மணிகளளித்த

## உபசாரப் பத்திரம்.

வல்லமையானவர் நல்லறிவைத் தந்திட்ட சொல்லரிய நாளிதுவே.

**மி**கவும் மாட்சிமை தங்கிய சகோதரி பாலம்மாள் அவர்கட்கு எங்கள் மனப்பற்றுதலான நமஸ்காரம். சூரியனைக் கண்ட செந்தாமரை மலரும் வண்ணமாக எதிர் நோக்காமலிருந்த தங்களருமையான வருகையை எதிர் நோக்கவும் மனமகிழ்ச்சியைத் தந்த மஹேசுவரனுக்கு எங்கள் நன்றியறிதலை ஏராளமாகப் பொழிகின்றோம்.

வையகம் வாழ்த்த வன்மை மிகுந்த வல்லவனருளைப் பெற்ற வதனமே.

இக்கொச்சின் சீனவாசிகளாகிய எங்களைச் சந்தித்து எங்களுக்கு உங்களபரிமிதமான மொழிகளையும், அருமையான போதனைகளையும், பெருமையான யோசனைகளையும், ஒற்றுமையான உணர்ச்சிகளையும், பற்றுதலான பல இனிய வசனங்களையும் இருத்திய எங்கள் இதய இன்பத்தையும் புகுத்திய செவியின் செருக்கையும் என்னென்றுரைப்போம்! இதற்குக் கைம்மாறாக எங்கள் இதய முற்றும் தத்தம் பண்ணுகிறோம். எங்களை முன்னிட்டு ஏற்படுத்திய "சிந்தாமணி" யென்னும் பத்திரிகையின் அபிவிருத்திக்கு எங்களின் பிரயாசை எடுத்துக்கொள்கிறோம். பெண்மணியாகிய பொன்மணியே! நீங்கள் செல்லும் நல்வழியில் தீயகாற்றணுகாது திரியேகன் உங்களுடன் தீவிரித்துச் சென்று அநேக ஆண்டளவும் இருத்திச் செய் நன்மைகளைச் செய்து ஜயம் பெறுவீராக.

ஓ ஸ்ரீமதி பாலம்மாளே! உங்களுக்கு எங்கள் அன்பார்ந்த வந்தனத்தைச் சாற்றி சர்வ ஈசுரன் உங்களையும் எங்களையும் ஆசீர்வதிக்கப் பிரார்த்திக்கின்றோம்.

பிரான்சு தேசம் வாழ்க!

ஸ்ரீமதி பாலம்மாள் இன்றும் என்றும் வாழ்க! வாழ்க!

இங்ஙனம்,
இதய மெய்யன்புடன் உபசரிக்கும் சைகோன் வாசிகளான
உங்கள் சகோதரிகள்.



சகோதரி வி. பாலம்மாள்,
"சிந்தாமணி" பத்திராதிபர்.

சிங்கப்பூர்,
25—7—28.

கடித எண்—1.

**சை**கோன் நகரத்திலும் கம்போஜாவிலும் வசிக்கும் "சிந்தாமணி" யபிமானிகளான எனதன்பார்ந்த சகோதரி சகோதரர்களுக்கு வந்தனம். க்ஷேமம். கோருவதுமதுவே.

என் சோதரிகளே! நான் உங்களிடையே வசித்த சில வாரங்கள் என்றென்றும் நான் மறவாத நன்னாட்களாகும். உங்கள் மெய்யன்பையும் பக்ஷம் வாய்ந்த உபசரிப்பையும் நான் நினைக்காத நேரமில்லை. "சிந்தாமணி" விஷயத்தில் நீங்கள் கொண்டுள்ள பிரியத்தை நான் வெளியிட்டுக் கூறாத சந்தர்ப்பங் கிடையாது. உங்கள் ஒவ்வொருவர் வீட்டிலும் நான் சந்தோஷமாகச் சம்பாஷித்ததையும் நீங்கள் என்னிடம் வாஞ்சையுடன் நடந்துகொண்டதையும் நினைக்குங்கால் மீண்டும் அவ்வினிய சம்பவங் கிடைக்குமோவென ஏக்கமடைகின்றேன். பாசத்துடனும் நேசத்துடனும் கண்ணிறைந்த கண்ணீருடனும் நீங்கள் விடையளிக்கப் புறப்பட்ட நான் 18-6-28 ல் சிங்கப்பூர் சுகமே வந்து சேர்ந்தேன். உங்கள் பேரன்பு மட்டும் என்னைத் தொடர்ந்து வந்தது.

நான் இன்னம் இரண்டு மூன்று வாரத்தில் இந்தியாவுக்குப் புறப்பட்டுவிடுவேன். அனேகமாக இக்கடிதம் உங்களால் படிக்கப்படும் சமயம் நான் இந்தியாவில் என் வாசஸ்தலத்தில் இருப்பேன். என் க்ஷேமத்தையும் விசாரிப்பையும் அன்பையும் தனித்தனியே உங்களுக்கறிவிக்க சாவகாசமின்மையால் நேரில் சொன்னபடி "சிந்தாமணி" மூலமாகத் தெரிவிக்கின்றேன். உங்கள் க்ஷேமத்திற்குத் தனித்தனியே எனது சென்னை விலாசத்திற்கு அடிக்கடி எழுதக் கோருகிறேன். அழகிய கம்போஜாவும் சைகோனும் என் ஞாபகத்திலுறைந்துள்ளன. உங்கள் சகோதர வாஞ்சையை நான் கனவிலும் மறவேன். வசதியான இடமளித்தும் தேவைகளை விசாரித்தும் வேண்டிய உதவிபுரிந்த உங்கள் உபசரிப்புக்கு நான் என்றுங் கடமைப்பட்டுள்ளேன். உங்கள் விலாசங்கள் பிரெஞ்சில் இருப்பதால் அவைகளைத் தெரிந்து பதிவு செய்து உங்களுக்குப் பத்திரிகையனுப்பச் சாவகாசப்படக்கூடும். ஒருகால் இக்காரணம்பற்றி உங்கள் சந்தா ஆரம்பத்தை 1928 மே மாதத்துக்குப் பதிலாக ஜூன் மாதமிருந்தும் ஏற்படுத்தக்கூடும். இதுபற்றி மன்னிக்கக் கோருகிறேன்.

உங்களில் சிலர் இன்னம் சில சந்தா சேர்த்தனுப்புவதாக வாக்களித்தபடி உதவி செய்ய வேண்டுகிறேன். உங்கள் க்ஷேமத்தைக் கடிதமூலம் அடிக்கடி தெரிந்துகொள்ள விரும்புகிறேன். என் சகோதரிகளின்பொருட்டு நான் எடுத்துள்ள ஊழியத்தை என்றும் சிறப்பாக நடத்தி வரும்படி உங்கள் ஜபகாலங்களில் கடவுளைப் பிரார்த்தனை புரிய வேண்டுமோய்க் கேட்டுக்கொள்ளுகிறேன்.

உங்கள் பக்ஷம் மறவாத அன்புள்ள சகோதரி,
வி. பாலம்மாள்.

# ஸ்ரீ கிருஷ்ணனும் அவருடைய உபதேசமும்.

(ஸ்ரீமான் M. C. கிருஷ்ணசாமி)

(521வது பக்கத் தொடர்ச்சி.)

ஸ்ரீ கிருஷ்ணன் முதலில் உபதேசித்த மதம் எது என்று அறிவது எளிதல்ல. தற்காலத்தில் ஸ்ரீ கிருஷ்ணன் உபதேசித்ததாகக் கூறப்படுபவைகளெல்லாம் வெவ்வேறு காலங்களில் எழுதப்பட்ட அநேக புஸ்தகங்களினின்றும் சேர்க்கப்பட்டவை. சாந்தோகிய உபநிஷத்தில், தேவகீ புத்திரனான கிருஷ்ணன் ஆங்கிரஸ் என்னும் ரிஷியினின்றும் உபதேசம் பெற்றதாகக் கூறப்பட்டுள்ளது. இந்த உபநிஷத்து அநேகமாக கீதைக்கு முன் எழுதப்பட்டிருக்க வேண்டும். மற்றும் ஆங்கீரஸ ரிஷியின் உபதேசம் கீதையில் அநேக இடங்களில் விரித்துக் கூறப்பட்டுள்ளது. உபநிஷத்தில் ஸ்ரீ கிருஷ்ணனைப் பற்றிய வேறு ஒரு விவரமும் காணப்படவில்லை. ஆயினும் கீதையின் உபதேசத்திற்கும் ஆங்கீரஸரிஷியின் உபதேசத்திற்குமுள்ள ஒற்றுமையால் இவ்விரண்டு நூல்களிலும் ஒரே கிருஷ்ணனே குறிப்பிடப்பட்டிருக்கிறார் என ஊகிக்கலாம். ஸ்ரீ கிருஷ்ணன் பக்திமார்க்கத்தை உபதேசித்தவர் எனக் கருதப்படுகிறார். பண்டைக்காலத்தில் நம் தேயத்தில் பாகவதர்களென சிலர் இருந்தனர். இவர்கள் வேதத்தில் கூறப்பட்டிருக்கும் தேவதையான 'பகவானை' தெய்வமாகக் கொண்டவர். இவர்கள் தங்கள் கடவுளை அன்பின் வடிவாகப் பாவித்து பக்தியைப் புகட்டிவந்தனர். அநேக காரணங்களினால் இந்த பகவானும் வேதத்தில் கூறப்பட்ட விஷ்ணுவும் ஒரே கடவுளாக பாவிக்கப்பட்டனர். கிறிஸ்து பிறப்பதற்கு முன்னமேயே வைஷ்ணவ மதம் தலைகாட்டி நின்றது. பதஞ்சலியின் மகாபாஷ்யத்தில் கம்ஸவதம் நாடகமாக நடிக்கப்பட்டிருப்பதாகக் கூறப்பட்டிருக்கிறது. இதனால் ஸ்ரீ கிருஷ்ணன் கதைகள் அக்காலத்திலேயே பரவி இருந்தன என்று விளங்கும்.

கீதையும் இதற்கு முன்பே எழுதப்பட்டிருக்க வேண்டும். அது ஸ்ரீ கிருஷ்ணன் உபதேசித்ததை எல்லாம் அப்படியே கொண்டிருக்கிறதா என சந்தேகிக்கலாம். ஆனால் அது ஸ்ரீ கிருஷ்ணனுடைய உபதேசங்களை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது எனச் சந்தோகிய உபநிஷத்தில் உள்ள சில சுலோகங்களுக்கும் கீதையில் உள்ள சில சுலோகங்களுக்கும் உள்ள ஒற்றுமையால் கொள்ளலாம்.

கீதையில் இந்து மதத்திலுள்ள அநேக வேற்றுமைகள் ஒன்றுபடுத்தப்பட்டு இருக்கின்றன. பக்தி யோகம், ஞான யோகம், கர்ம யோகம் முதலிய அநேக முக்தி மார்க்கங்கள் போதிக்கப்பட்டிருந்தாலும் ஸ்ரீ கிருஷ்ணன் அர்ஜுனனுக்கு முக்கியமாக உபதேசித்தது என்னவென்று கவனிப்போம். யுத்தகளத்தில் தன்னை எதிர்த்து நிற்கும் சைனியத்தில் தன்னுடைய ஆசாரியர்களும் உறவினர்களும் தன்னால் கௌரவிக்கப்பட்ட பெரியோர்களும் இருக்கக் கண்டு, அர்ஜுனன் மனங்கலங்கி, 'இவர்கள் யாவரையும் மூன்று லோகத்தின் ராஜ்யத்திற்காகவும் கொல்லேன்' எனக் கூறி வில்லை எறிந்துவிட்டு தேர்த்தட்டில் துக்கத்துடன் உட்கார்ந்தான். மற்றும் துரியோதனாதிகள் பாப மனதுடையவர்களாய், யுத்தத்திற்கு அழைத்தால் அவர்களைவிட அதிக ஞானம் படைத்த தான் ஏன் அவர்களைக் கொன்று பாபமடைய வேண்டுமென கேட்கலுற்றான். அர்ஜுனனுடைய மனக்கலக்கத்தைப் போக்கி யுத்தம் செய்வதே அவனுடைய தர்மம் எனக் காண்பிப்பதே கீதையின் முக்கிய நோக்கமாகும்.

ஸ்ரீ கிருஷ்ணன் கூறுவதின் சாராம்சமென்ன வென்றால், ஒருவனும், ஒருகாலத்திலும், க்ஷணப்பொழுதாவது, கர்மம் செய்யாமல் இருக்கிறது இல்லை. அதனால் யாரும் தங்களுடைய கடமைகளைத் துறந்து மோட்சமடைய முடியாது. முக்கியமாகத் துறக்க வேண்டியது ஒருவன் செய்யும் கர்மங்களின் பலாபேட்சையே. ஆகையினால் எவன் கர்ம பலனில் ஆசையை விட்டுத் தனக்கு உரிய கடமையைச் செய்கின்றானோ அவன் மோட்சத்தை அடைகிறான். இதைத்தான் மூன்றும் அத்தியாயத்தில் असक्तोह्याचरन् कर्म परमाप्नोति पूरुषः எனக் கூறப்பட்டிருக்கிறது. ஆகவே ஸ்ரீ கிருஷ்ணன் அர்ஜுனனைக் கர்ம பலத்தில் ஆசையை விட்டு அவனுடைய கடமையாகிய யுத்த தர்மத்தைக் கொள்ளுமாறு கூறினார்.

கீதையில் இன்னும் அநேக முக்கிய விஷயங்கள் கவனிக்கப்பட்டிருந்தாலும் இச்சிறு வியாசத்தில் அவைகளைப் பற்றி வரைய இயலாது. ஆகையால் ஸ்ரீ கிருஷ்ணனுடைய சரித்திரமும் அவருடைய உபதேசமும் பிற்காலத்தில் எவ்வாறு மதிக்கப்பட்டு இருக்கின்றன எனச்சுருக்கக் கூறி நிற்போம். பக்தி மார்க்கத்தை முக்கியமாக மேற் கொண்டுள்ள பாகவத மதத்தின் ஸ்தாபகர் ஸ்ரீ கிருஷ்ணன் எனச் சிலர் கருதுகின்றனர்.* இது எப்படி இருந்தபோதிலும், பாகவத மதத்தினின்றும் வளர்ந்த பிற்காலத்திய வைஷ்ணவ மதம் ஸ்ரீ கிருஷ்ணனை அதிகமாகக் கொண்டாடுகிறது என யாவரும் அறிந்த விஷயமே. ஆழ்வார்களின் பாக்களும் வடக்கே சைதன்யர், கபீர் முதலிய பெரியோர்களின் கீதங்களும், இதற்குச் சான்றாகும். புராணங்களும் ஸ்ரீ கிருஷ்ணன் அவதாரத்தைப் பூர்ணவதாரம் என கூறும். கீதையே பிற்காலத்தில் வந்த எல்லா ஆசார்யர்களாலும் வெகு முக்கியமாகக் கருதப்பட்டு அவர்களின் சித்தாந்தங்களை நிரூபிக்க உபயோகப்படுத்தப்பட்டிருக்கிறது.

சுபம்.

* வேறு விவரங்களுக்கு ஆங்கிலத்தில் ஹேமசந்திரராய் சௌத்ரி எழுதிய 'Early History of Vaishnavism' என்கிற புஸ்தகத்தை பார்க்க.

# ஜயராமன்.

(பம்பாய் ஸ்ரீமான் நா. கு. கோபாலய்யங்கார்.)

## I

“அடி! ஜயலக்ஷ்மி! சந்தி கழித்து ஜாமமாயிற்று. கல்லெடுப்புப் படிப்பை விட்டுத் துலைக்கவும் மாட்டேனென்கிறாய். மடியுடுத்தி அம்மனுக்கு விளக்கேற்றி வை! படித்து நீ என்ன புரட்டப் போகிறாய்?” என்று சர்வாங்கங்களையுமொருதரம் விசையுடன் குலுக்கி ரத்னம்மாள் அதட்டிப் பேசினாள்.

சிறுமி ஜயலக்ஷ்மி பதின்மூன்று வயது கடந்த ஓர் கட்டழகி. சிற்றன்னை என்னும் தன் மாற்றாந் தாய் தன்னைக் காரணமின்றித் துடுக்காகப் பேசியதைச் சகிக்கமாட்டாதவளாய் “இல்லை! சித்தி! நம்ம சிவராமன் வருகிறாரே; இது அவருடைய பிரசங்கத்தின் சாராம்சம். என்ன தெளிவாயிருக்கிறது! நாட்டில் நலன்கெட்டுக் கிடக்கும் பெண் கல்வியை

அவர் சிறுவியாசமாகத் தொகுத்தெழுதிக் கேடு கெட்ட நவீன நாகரிகங்களையும் சிறப்புற்ற பூர்வீக ஆசார சீர்திருத்தங்களையும் வெளியிடை மலையாக்கியிருக்கிறார்; அவர்......'' என்னுமுன் ரத்னம்மாள் தனது கணவன் மருதூருக்கு நியாயாதிபதியென்பதை யவர் பெண்ணிடத்தேயே காட்டுவாள் போல வாயைப் பொத்திக் கையையாட்டி "ஆ! ஆரம்பித்துவிட்டாயா உன் பிரசங்கத்தை! நம்ம சிவராமன் பிரசங்கத்தின் சாராம்சம் என்று என்னையும் உங்கள் ஜாபிதாவில் ஏன் சேர்த்துக் கொள்ளுகிறாய்? நீ தான் அவனுக்குப் பரிமாறவேண்டும். அவன் தான் உனக்குக் கல்வி கற்பிக்கவேண்டும்; இது தான் உங்களப்பன் ஏற்பாடு, நாலுங் கிடக்க நம்ம என்கிறாயே'' என்று கோடையிடியெனக் கர்ஜித்தாள்.

இது முற்றுப் பெறுமாவென ஜயத்திற்கே சந்தேகம் தோன்றிற்று. ஏனெனில் பூர்வீக ரிகார்டுகளில் ரத்னம்மாள் ஆரம்பித்தால் ஓய்வு ஒழிச்சல் அடைய வெகு நேரமாகும். முதலில் யஜமானியம்மாள்—இரண்டாவது இரண்டாந் தாரம்—மூன்றாவது நீதிபதி ராமபத்திரய்யரின் ஓட்டிய மனைவி—இவை யாவுங்கலந்ததே இப்பீதிக்குக்காரணம். இது உலகத்தார்க்கு. ஆனால் தன்னைப் பெற்ற தந்தையிடம் அவளுக்கு அதிக வாஞ்சையுண்டு. அவருடைய சுகதுக்கங்களை யறிந்து வருந்துவபள். அதனால் இத்தகைய அல்ப சமாசாரங்களைக் கோட்களாக எடுத்துக் காட்டி அவரின் சாந்தியைக் கலைக்க அவளுக்குப் பிரியமில்லை. எனினும் அன்று அவளை மீறிக் கோபமும் பொங்கிவந்தது.

குணவதியாதல்பற்றி அவளுக்குச் சினத்தை யடைக்கிக் கொள்ளும் சக்தியிருந்தது. அவ்வளவு மதியற்ற மனைவி தன் தந்தையார்க்கு வாய்த்தனளே என்று தன் விதியை மட்டும் நொந்து கண்ணீர் கலங்கச் சமைத்த கல்போல் அசைந்தாடாது தன் பின்வாழ்வைக் குறித்து யோசித்துக் கொண்டிருக்க, வாரச்சாப்பாடு கொள்ளும் சிவராமனும் வந்து தோன்றினான். சிவப்பு மேனியும் பரந்த நெற்றியும் கூரிய கண்களும் அவனை யொரு புத்திமானெனச் சுட்டிக் காட்டியது போலவே அவனது தூய்ய தொரு கிழிந்த ஆடையும் அமைப்பும் சுசீலனெனச் சான்று பகர்ந்தன.

"ஆ! ஜயம், இங்கு இன்னும் என்ன செய்கிறாய்? கூடத்து விளக்கண்டை உன்னைக் காணாமல் இங்குவந்தேன். ஏது! பெருத்த தொரு ஆலோசனை செய்கிறாய் போலிருக்கிறது. நான் எழுதிய 'பெண்கல்வி'யின் நகல் தானே அது? அதில் என்ன கோளாறுகள் கண்டு பிடித்திருக்கிறாய்?" என்று வினவினான்.

பெண்ணும் திடுக்கென்று தன்னிலைமையை உணர்ந்து "ஆ இல்லை! அப்படி யொன்றுமில்லை. நான் அவ்வளவுக்கு சமர்த்தையல்ல" என்று முடித்தாள். தனது சிற்றன்னை தன்னைக் குறித்து இழிவாக நினைத்ததைக் குறித்து அவள் வருந்தவில்லை. அவள் கூறியதின் கருத்தைக் கேட்டால் சிவராமன் மறுபடியு மவள் முகத்தில் விழிக்க மாட்டானென்று அவளுக்கு நன்றாகத் தெரியும். ஆதலால் அதைப் பூராவாக மறைத்து "வாருங்கள், போகலாம்; கம்பரின் சரித்திரத்தைக் கேளுங்கள்" என்று அன்றைய பாடங்களை ஒப்புவித்தாள்.

## II

தாயற்ற சேய் என்ற பழமொழிக் கிலக்கான நமது சிறுமி ஜயலக்ஷ்மி தனது சிற்றன்னையிடம் எவ்வளவோவாஞ்சையுடனிருந்தாளெனினும் ரத்னம்மாள் அவளைத் துன்புறுத்துவதிலேயே கண்ணுங் கருத்து மாயிருந்தாள். ராமபத்திரய்யர் தனது ஏகபுத்திரிக்கே மிகச்செலவு செய்வதாகத் தீர்மானித்திருந்தது அவளுக்கு



சகிக்கொணாத விஷயமாக விருந்தது. தனக்குப் புத்திரப் பேறில்லாவிடில் தமது சொத்துக்களனைவற்றிற்கு முரியவள் அவளேயாதலின் அவளை வெளியிடத்தில் விவாகம் செய்வித்தால் தனக்குரிமை குறையுமென்று பொறாமையினால் அவளைத் தன் தமயனுக்கே முடிய எண்ணங் கொண்டாள். இவற்றிற்குக் காரணம் புத்தி சூக்ஷ்மமுள்ள பெண்ணாதல்பற்றிச் சிறுமி தனது மனோபீஷ்டத்தைப் பூர்த்தி செய்து வைக்கமாட்டாளென்ற பீதியே அவளைச் சதுர்வித உபாயங்களினாலும் பிரயத்தனிக்கத் தூண்டியது.

ஜட சுப்பு வென்ற நாமதாரியான அப்புண்ணிய புருஷனை மடசுப்பு வென்று அவனுடைய நண்பர்கள் கூசாமற் கூறிடுவர். இப்பெரியார் சிவராமன் சிறு பயலாயிருக்கும் காலத்திலிருந்து மெட்ரிகுலேஷன் வகுப்பில் கிடத்தப்பட்டிருந்தவரெனினும் அவன் இவரை யவமதித்துத் தாண்டி B. A. வகுப்பையு முடித்தானென்ற கோபங்கொண்டு அப்பெரிய மடுவைத் தாண்டிவர முடியாமல் தத்தளித்தார். கேட்போருக்குத் தன் கிரகங்கள் சரியாயில்லை யென்று கூறுவார். இவர் தமது கிருகத்தை விடுத்து, தாசி லீலாவதி கிருகத்தை உறைவிடமாகக் கொண்டிருக்க அவருடைய அதிர்ஷ்ட கிரகங்களும் தூர விலகிப்போனதென்ன அநீதி!

தட்டை முகமும் சுருட்டைமயிரும் குட்டை உடலும் ஆறு விரலும் கொண்ட அவ்வழகனுக்குச் சிறுமி ஜயம் மனைவியாக வேண்டுமென்பது அவனுடைய விருப்பம். இவனை மணக்காது மரிப்பதே மேலென்று கூறும் நங்கையின் வெறுப்பு. இதை யெப்படியாவது முடிக்காமல் விடுவதில்லை என்பது ரத்னம்மாளினிருமாப்பு.

தான் தன்னந்தனியே யிருக்கு மொரு நாள் இவ்வீரன் தன்னை மணக்கப் பலவாறு மிரட்டியும் புகழ்ந்தும் புரட்டியும் கேட்டதற்குத் தக்க விடைகொடுத்த ஜயம் அல்லும்பகலும் தனக்கு நல்ல சதி கிடைக்க வேண்டுமென்று

"வேதமொருநான்கினுட் பொதிந்தமெய்ப்
பொருளும் கோதில்மனுமுதல் நூல்கூறுவம்
தீதில் சாணுந்தி தந்த தன்னிறைவந் தாளே...

அபயமென எங்கும் நிறைந்த எம்பெருமானைத் துதித்து நின்றாள். 'கெடுவான் கேடு நினைப்பான்' என்னும்பழமொழியை நிரூபிப்பாரெனத் தமையனும் தங்கையும்—ரத்னம்மாளும் சுப்பையரும் கலந்து யோசித்துத் தீர்மானித்தபடி ராமபத்திரய்யரின் மூளைக்குத் தலையணைமந்திரோபதேசம் ஆலகால விஷமென ஏறியது. 'கரைப்பார் கரைத்தால் கல்லும் கரையும்' என்பதுபோல ராமபத்திரய்யரும் ஒருவாறு இணங்கினார். விவாக மகோற்சவப் பத்திரிகைகளும் உற்றார் உறவினர்களுக்கு அனுப்பப்பட்டன. தனக்கே உரிமையானவளென சுப்பு ஜயத்தை அணுகினான். அவளோ அழுத கண்ணும் சிந்திய மூக்குமாக அரை மைல் தூரம் ஓடினாள். விவாகதினம் நெருங்கிவர மணம் சுப்புவுக்கு மாத்திரமா, சுப்புவுக்கும் ஜயத்திற்குமாவெனச் சந்தேகிக்க இடமுண்டாயிற்று.

## III

"உழைக்கும்போது உழைக்கவேண்டும், ஆடும்போது ஆடவேண்டும்" என்னும் ஆங்கிலப் பழமொழியின்படி நமது ஊர் பள்ளிச் சிறுவர்கள், விடுமுறை நாட்களானதுபற்றி, தனசம்பத்துடையவர்கள் நகரங்களுக்குச் சென்று நாடகம், நாட்டியம் முதலான இன்பமெய்துங் கருமங்களில் செலவிடச் செல்ல, ஜனக்கட்டுடையோர் அப்பெருமையைப் பெறுதோராகத் தத்தமது கிராமங்களுக்குத் தமது வருகையை எதிர்பார்த்து நிற்கும் சுற்றத்தாரைக் கண்டு களிக்கச் சென்றார்கள்.

இவ்விரு காட்சியினரையும் சாராத சிவராமன் சிவபுரிக்கடுத்த மருதூரில் ஸ்ரீ கண்ணப் பெருமானின் திருத்தேர் வைபவத்தைக் காணச் சென்றான். அங்கு அணியணியாகப் பட்டாடை யுடுத்தி சர்வாபரண பூஷிதைகளாய் விளங்கும் பெண்மக்கள் ஒரு பக்கம். அவர்த ளழகைப் பருகி நிற்பார்போல் அவர்களெதிரில் நாஜுக்தமாக நவநாகரிகங்களுக்கேற்ப அலங்கரித்துக்கொண்டு ஊசலாடி வரும் பகுதி மற்றொன்று. எவரும் துதிக்கும் ஏகமூர்த்தியை யன்றி மற்றொன்றை நினையாத விருத்தாப்பியர்கள் கண்ண பெருமானின் திருவருளைப் பாக்களாகப் பாடிநிற்க, சிறுவர்கள் தத்தமக்கு வேண்டியவற்றைத் தமது பெற்றோர்களிடம் கேட்டுக்கொண்டிருந்தனர். இவற்றுள் எவ்விதப் பற்றும் அற்ற சிறுவன் சிவராமன் தனது நிலைமையை யுணர்ந்து தமது வாழ்நாளுள் பரோபகாரஞ் செய்ய சமயம் வாய்க்க வேண்டுமென்ற கவலையுடன் சிறுவர்கள் விளையாடும் ராட்டினத்தண்டை நின்று

“ ஊரிலேன் காணியில்லை உறவுமற் றொருவரில்லை
பாரில் நின் பாதமூலம் பற்றினேன் பரமமூர்த்தி ”

“மனத்தில் ஓர் தூய்மையில்லை வாயில் ஓரின்சொலில்லை
சினத்தில் செற்றம் நோக்கி தீவிளி விளிவன் வாளா
புனத்துழாய் மாலையானே பொன்னிசூழ் திருவரங்கா
எனக்கு இனிக் கதியென் சொல்லாய் என்னையா
ளுடைய கோவே ”

என்று துதித்துக்கொண்டிருந்தான்.

அப்பொழுது திடீரென்று தேரின் பின்புறமிருந்து ஓர் கூக்குரல் கேட்டது. “ஐயோ மகனே! அருமை மகனே! உன் கதி யென்னாயிற்றோ ? ஐயோ தெய்வமே!” என்று அலறின மொழிகள் இவனைக் கலக்கச் செய்தன. தீப்பற்றிய வீடுபோல அடுத்த நொடியில் அங்கு கூட்டத்தின் நடுவே சென்று நின்றான்.

அங்கு விம்மி விம்மி அழுதுகொண்டிருந்த ஓர் கிழவி தனது ஒரே குமாரன் மரணத் தறுவாயி லிருப்பதாகச் செய்தி கிட்டியதினிமித்தம் அதே க்ஷணம் தான் போய்த் தீரவேண்டுமென்று பிடிவாதம் பிடித்தாள். இதை யார் லட்சியம் செய்வார்கள் ? சிலர் இவளைப் பைத்தியக்காரியென்று எட்டிப் போயினர். சிலர் இது முடியாத காரியமென்று செவிகொடாமற் சென்றனர். ஆனால் சிவராமனுக்கோ இவ்வாறு தோன்றவில்லை. உண்மையும் பரிதாபகரமானதொரு சங்கடமென்று அறிந்தவுடனேயே நமது வாலிபனும் எவ்வாறாவது உதவி செய்யத் தீர்மானித்து அக்கிழவியை உடனழைத்துச் சென்றான். சுமார் அரை மைல் தூரம் வழி நடந்தபின் பெரியதொரு காட்டாறு வழி மறித்திருந்தது. அதைத் தாண்டியே ராமாபுரத்திற்குச் சென்று கிழவியை விட்டுவரவேண்டும்.

காட்டாற்றின் கடுமையைக் கூற ஒண்ணாது. வாறு ஜலப்பிரவாகம் செடி கொடி மரங்கள் குடிசைபோர் முதலியவற்றை யடித்துவர நடுவில் அகப்பட்டுக்கொண்ட கால்நடைகள் நீந்தமுடியாமல் தத்தளித்து நின்றன. அத்சமையம் ஸ்திரியில் படகுக்காரன் பணத்திற்காக ஆசைப்பட்டு உயிரை விடத் துணியாது மறுத்ததென்ன அதிசயமோ !

பரோபகாரமே உத்தமமான தர்மமென்பதை யறிந்த ஆழ்ந்த நுண்ணறிவுடைய வீரனை சிறுவன் அப்படகுக்காரனிடம் படகைவாங்கிக் கிழவியை யதிலமர்த்தி துடுப்பால் தள்ள ஆரம்பித்தான். தாம் கரையைச் சேருமுன் உயிர் நீத்தாலும் அதை லட்சியம் செய்யாமல் தெய்வமே கதியெனத் தண்ணீரில் சென்றான். நீரின் வேகம் சற்று குறைந்துகொண்டே வந்தது. கூடிய சீக்கிரத்தில் சற்று வற்றிவிடுமென்னும் நம்பிக்கையினால் தைரியமாயிருக்கப் பெருத்த[illegible] அலை[illegible] சற்றும் பழக்கமற்ற [illegible]தல்பற்றி [illegible] துடுப்பு

190386